

# ஸ்ரீ சொட்டக்கார ஐயனார் வரலாறும் வழிபாடும்

# The History and Worship of Sri Sottakaara Ayyanar


Author

C. Arunan

நூலாசிரியர்

சொ. அருணன்



FIRST EDITION

IOR PRESS

தமிழ் ஆய்வு களஞ்சியம்

TAMIL AIVU KALANJIYAM

(India's First Google Scholor Indexed Publisher)

9 789390 853151

# ஸ்ரீ சொட்டக்கார ஐயனார் வரலாறும் வழிபாடும்

# The History and Worship of Sri Sottakaara Ayyanar

**முனைவர். சொ. அருணன்**

Dr. C. Arunan

(காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 ஆய்வுத் திட்டத்தின்கீழ் இந்நூல் வெளியிடப்படுகிறது.)

Dr. C. Arunan
Centre for Tamil Culture,
Alagappa University,
Karaikudi-630003,
Tamil Nadu, India

Title: The History and Worship of Sri Sottakaara Ayyanar

Edition: 1

Funding: Alagappa Universsity for providing Postdoctoral Fellowship under the RUSA 2.0 scheme.

ISBN 978-93-90853-15-1 ISBN 978-93-90853-16-8 (eBook)
https://doi.org/10.34256/tak20213

© AUTHOR. This book is an open access publication. **Open Access** This book is licensed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (http://creativecommons.org/licenses/by/4.0/), which permits use, sharing, adaptation, distribution and reproduction in any medium or format, as long as you give appropriate credit to the original author(s) and the source, provide a link to the Creative Commons license and indicate if changes were made.
The images or other third party material in this book are included in the book's Creative Commons license, unless indicated otherwise in a credit line to the material. If material is not included in the book's Creative Commons license and your intended use is not permitted by statutory regulation or exceeds the permitted use, you will need to obtain permission directly from the copyright holder.
The use of general descriptive names, registered names, trademarks, service marks, etc. in this publication does not imply, even in the absence of a specific statement, that such names are exempt from the relevant protective laws and regulations and therefore free for general use.
The publisher, the authors and the editors are safe to assume that the advice and information in this book are believed to be true and accurate at the date of publication. Neither the publisher nor the authors or the editors give a warranty, expressed or implied, with respect to the material contained herein or for any errors or omissions that may have been made. The publisher remains neutral with regard to jurisdictional claims in published maps and institutional affiliations.

This Tamil Aivu Kalanjiyam imprint is published by the registered company IOR PRESS.
The registered company address is: 5/11, Perumal Kovil Street, Naickenpalayam, Coimbatore-641020 Tamil Nadu, India.

# Synopsis

In the ancient world, religion was worship of those the early humans feared from fire, lightning, rain, fierce animals – mostly the natural elements that they couldn't understand or have a control upon. Over time, it evolved into worship of fellow human beings who lost their lives in defending their clan against the other clans. This practice is a phenonmena noticed across the globe revealed by archaeological excavations. It was termed as Hero Stone in India. Plenty of such hero stones are found all over Tamilnadu, a province in South India. Some of these warriors and men/women who either lived and sacrificied their lives for the good of the society or performed extraordinary feats were worshipped as Gods and temples were built for them. Rituals of worship, a mix of standard activities like lighting lamps along with unique rituals recollecting the deeds of the person elevated to the position of God were created and festivals were constituted. These were done to ensure the sacrifices made were remembered, appreciated and cherished long after they were gone.

Ramaiah, the chief of a cavalry unit in the kingdom under Thirumalai Naicker, who ruled Madurai region 500 years ago, is one such human being who was elevated to the status of a God for his bravery when faced with a personal crisis in his life. There are a few versions of his life story that has lived for centuries in the minds of people and through folk lore. The popular version of the story involves Ramaiah and his younger siblings Ramanna and Ramakka in which they had to live a life of exile, hiding in a cave in a mountainous area now called as Sokkampatti, to escape the wrath of the King Thirumalai Naicker. Ramaiah had to kill his siblings and himself when the soldiers of the king surrounded them. In those days, people who killed themselves to save their honor rather than getting caught and humiliated, were considered brave. The person who helped them live a life in hiding sacrificed his life for failing to protect them and their dog was killed by the soldiers. The villagers surrounding this region, built a temple in their memory and conduct a grand festival every 7-10 years which attracts visitors from far and wide, and even from beyond the shores. Ramaiah has been christened as Sri Sottakaara Ayyanar and has become a much revered deity. The frenzy and glamour of the festivities are presented in a photo story at the end of the book.

The book would be a fascinating read to witness how the life of a mortal is being rejoiced even after 500 years surviving the test of time.

மனிதகுல வாழ்வியல் வரலாற்றில் ஒவ்வொரு சிற்றூரும் ஓர் ஆய்வுக் களம். ஒவ்வொரு கிராமமும் ஒரு வரலாற்றுக் கருவூலம். சொக்கம்பட்டி என்னும் வடமதுரைப் பகுதிச் சிற்றூர் தனக்குள் ஒரு வரலாற்றுப் பெட்டகத்தை புதைத்து வைத்திருக்கிறது. மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலை அழகாக எடுப்பித்த நாயக்க மன்னர் திருமலை நாயக்கர்தம் படையில் உதவியாக நின்று பல யுத்தங்களை வெற்றி கண்ட குதிரை வீரர் ஒருவருடைய வாழ்க்கைச் செவிவழிக் கதையாகி வழிபாடாக வரலாறாக மலர்ந்துள்ளது. இன்றும் மரபு மாறாமல் தொடர்ந்து வருகிறது.

திருமலை நாயக்கருக்கும் இராமையாவாகிய சொட்டக்காரருக்கும் உள்ள பிணைப்புப் போலவே சொக்கம்பட்டிக்கும் உள்ள தொடர்பு காலப் பதிவாகிவிட்டது.

நடுகல், சிறுதெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியாகவும் நன்றியுணர்ச்சியின் வெளிப்பாடாகவும் நிகழும் இந்த வரலாற்று வழிபாடு முதன்முறையாக உரிய சான்றுகளோடு நூலாக்கம் பெற்றுள்ளது.

பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் அற்புதமாக விளங்கும் இந்தக் கிராமியத் தரிசனத்தை இந்நூல் விரிவாகக் காட்டுகிறது. இயற்கையைப் போற்றுவதையும், அதன்மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொள்வதையும் மட்டுமே தங்களின் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருக்கிற நிறைமன மாந்தர்களின் வழிபாட்டில் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி என்றும் நிலைத்து நிற்பார். அவர்தம் வரலாறும் தலைமுறை தலைமுறையாகச் செழித்து நிற்கும்.

# நன்றியுரை

அணிந்துரை வழங்கி என்னை மேலும் எழுதுவதற்கு ஊக்குவித்திருக்கிற சிங்கப்பூரில் வசிக்கும் அன்பிற்கினிய அண்ணன் ஜெ.பாஸ்கரன் அவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் என்பால் தனித்த அன்பும் அக்கறையும் கொண்டவர்கள். ஆரோவில் தொடங்கித் தொடர்ந்து எனது வளர்ச்சியை அனுதினமும் ஊக்கப்படுத்தி அதற்கான உதவிகளைத் தொடர்ந்து செய்து வருபவர். நூலை முழுமையாக ஆழ்ந்து நோக்கி அவர் தந்திருக்கிற ஆய்வுரையாகிய அணிந்துரைக்கு நான் பெரிதும் தவம் செய்திருத்தல் வேண்டும். அவர்களுக்கு எனது நன்றி.

முனைவர் பட்ட மேலாய்வுக்கு நெறியாளராக இருந்து வழிகாட்டி வரும் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் இயக்குநர், முனைவர் பேராசிரியர், சே. செந்தமிழ்ப்பாவை அவர்களுக்கும், அழகப்பா பல்கலைக்கழகக் கலைப்புல முதன்மையர் திருமிகு. முனைவர் கே.ஆர். முருகன் அவர்களுக்கும், பதிவாளர் அவர்களுக்கும் மாண்பமை துணைவேந்தர் மதிப்புறு கர்னல் நா. இராஜேந்திரன் அவர்களுக்கும் எனது நன்றி எப்போதும் உரியது.

எழுத்தைத் தவமாக மேற்கொள்ளக் கற்றுத்தந்த கவிஞர் மரு. பரமகுரு அவர்களுக்கும், அன்பிற்கினிற ஆரோவில் அன்னை கவிஞர் இரா.மீனாட்சி அவர்களுக்கும் நன்றிக்கடன் உள்ளவனாவேன். எப்போதும் நன்னெறியில் செலுத்துகிற, அடியேன் மனத்துள்ளே மறவாது நினைத்துப் போற்றுகிற குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் குருமகாசந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் பொன்னடிகள் போற்றி வணங்குகிறேன்.

இந்த நூலை மின்னூலாக வெளியிட இசைந்த சர்வதேசத் தமிழ் ஆய்விதழ் தளத்திற்கும், அதன் முதன்மை ஆசிரியர் அன்பிற்கினிய நண்பர் முனைவர் ர. சுரேஷ் அவர்களுக்கும் தைவானிலிருந்து ஊக்கப்படுத்தும் மதிப்புறு முனைவர் பாபு பால்ராஜ் அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகும். இந்நூல் சிறக்க உதவிய உதவிய நூலாசிரியர்களுக்கும், இதழாசிரியர்களுக்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனிய அன்புடன்

சொ. அருணன்

# Foreword

**Mr. J. Baskar**

**Literary critic,**

**Singapore.**

In the ancient world, religion was worship of those the early humans feared from fire, lightning, rain, fierce animals – mostly the natural elements that they couldn’t understand or have a control upon. Over time, it evolved into worship of fellow human beings who lost their lives in defending their clan against the other clans. This practice is a phenomena noticed across the globe revealed by archaeological excavations. It was termed as Hero Stone in India. Plenty of such hero stones are found all over Tamil Nadu, a province in South India. Some of these warriors and men/women who either lived and sacrificied their lives for the good of the society or performed extraordinary feats were worshipped as Gods and temples were built for them. Rituals of worship, a mix of standard activities like lighting lamps along with unique rituals recollecting the deeds of the person elevated to the position of God were created and festivals were constituted. These were done to ensure the sacrifices made were remembered, appreciated and cherished long after they were gone.

I know Arunan, the author of this book written as part of his post-doctoral research thesis, for more than 2 decades. I first met him as an aspiring youth trying to balance between his passion for the language Tamil but concerned if that can earn him a living in this materialistic world. He came across as a quiet, preoccupied and looked as someone lost in thoughts living in a world within himself. It was hard to strike a conversation then. Over the years, I have seen him metamorphosize into an eloquent conversationalist and is a confident young man who has taken the plunge to make his passion, the love for the language Tamil, as a means to his livelihood as well. Apart from writing to magazines, dailies, he runs his own publishing house. In recent days, his works have attracted attention and he has been invited as a guest editor of the International Research Journal of Tamil.

In this book, 'The history and worship of Sri Sottakaara Ayyanar', Arunan has documented the story of a head of a cavalry unit named Ramaiah in the kingdom under Thirumalai Naicker, who ruled Madurai region 500 years ago, through folk lore and undocumented stories that lives in the minds of people, passed from one generation to the next verbally. The popular version of the story involves Ramaiah and his younger siblings Ramanna and Ramakka in which they had to live a life of exile, hiding in a cave in a mountainous area now called as Sokkampatti, to escape the wrath of the King Thirumalai Naicker. Ramaiah had to kill his siblings and himself when the soldiers of the king surrounded them. In those days, people who killed themselves to save their honor rather than getting caught and humiliated, were considered brave. The person who helped them live a life in hiding sacrificed his life for failing to protect them and their dog was killed by the soldiers. The villagers surrounding this region, built a temple in their memory and conduct a grand festival every 7-10 years which attracts visitors from far and wide, and even from beyond the shores.

The author has researched 40 over books, magazines and interviewed the villagers in the region to bring together the history of this much revered deity christened as Sri Sottakaara Ayyanar. He participated in the festival and presented the frenzy and glamour of the festivities in a photo story at the end of the book. The book is a fascinating read as the author traces the history of religion and ties it to how the concept of local deities came into being ultimately leading to the protagonist of this book. It fascinates the reader to see how the life of a mortal is being rejoiced even after 500 years and to know the rituals have survived the test of time.

## How to Cite:

Arunan, C., (2021) The History and Worship of Sri Sottakaara Ayyanar, Tamil Aivu Kalanjiyam, Coimbatore, India.

# உள்ளடக்கம்

முன்னுரை ..........................................................................................1

சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் ..................................3

ஐயனார் மரபில் சொட்டக்கார சுவாமி வழிபாடு .....................................34

திருமலை நாயக்கர் வரலாற்றில் சொட்டக்கார ஐயனார் ........................62

ஸ்ரீசொட்டக்கார சுவாமி வழிபாடும் மரபுகளும்....................................111

முடிவுரை..........................................................................................132

துணைநூற்பட்டியல்.............................................................................135

துணை பதிவு – 1 ஸ்ரீசொட்டக்கார ஐயனார் வரவேற்புக் குலவைப் பாடல்.............................................................................................139

# முன்னுரை

மனிதகுல வரலாற்றில் வழிபாடு என்பது மிகவும் தொன்மையானது ஆகும். ஆதியில் இயற்கை குறித்த அச்சத்தினால் தோன்றிய வழிபாடு, பின்னர் முறையாக்கப்பட்டு பண்பாடாகவே மலர்ந்தது. வாழ்வியல் விழுமியங்களுடன் கூடிய தலைசிறந்த மேன்மைகள் யாவும் வழிபாட்டிற்கு உரியதாகப் போற்றப் பெற்றன.

வழிபாட்டின் குறியீடாக கல், மரம் தொடங்கி விலங்குகள், பறவைகள் என நீண்டு வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர்கள் வரைக்கும் கடவுளுக்கு நெருக்கமாகப் போற்றப் பெற்றார்கள்.

மனிதன் பண்பாட்டுச் செழுமையை அடைந்தபோது தத்துவ நோக்கிலான கடவுள் வழிபாட்டு முறைகள் தோற்றம் பெற்றன. என்றாலும் ஆதி மனிதகுல வழிபாட்டு முறைகள் அவற்றோடு பின்னிப்பிணைந்து திகழ்ந்தன. பெருந்தெய்வங்கள் என்றும், சிறு தெய்வங்கள் என்றும் வகைப்படுத்தப்பட்ட வழிபாட்டு மரபில் பண்பாடும் இயற்கை நேயமும் முன் நிறுத்தப்பட்டன.

மானுடத்தின் பெருமை பேணவும் உயிர் இரக்கப் பண்பின் எல்லை காணவும் வழிபாடு வழிகாட்டிற்று. வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர்களின் வரலாறும் அடுத்த தலைமுறைக்கு வாழ்வியல் பாடமாக முன்னிறுத்தப்பட்டுப் போற்றப்பட்டதைச் சிறுதெய்வ வழிபாடுகள் உணர்த்துகின்றன.

அந்த வரிசையில் தொன்மக் குறியீடாக விளங்கும் ஐயனார்

வழிபாட்டில் இணைத்துக் கருதத்தக்க ஒரு வீரரின் சரித்திரம் செவி வழியாகப் புகழப்படுவதோடு வழிபாட்டிற்குரிய மரபுகளையும் பின்பற்றி வருகிறது. சொட்டக்கார ஐயனார் சுவாமி என்று போற்றப்படும் ஒரு குதிரை வீரரின் வீர வரலாறு இன்றும் வழிபாட்டிற்கு உரியதாக விளங்குகிறது.

தமிழக வரலாற்றில் விளங்கும் எண்ணற்ற சிறு தெய்வக் கதைகளுக்கு மத்தியில் இந்தச் சொட்டக்கார ஐயனார் சுவாமி கதையும் வழிபாட்டு மரபுகளும் தனித்துவம் மிக்கனவாக விளங்குகின்றன.

மானத்தையே பெரிதென்று போற்றி அதற்காகத் தங்கள் இன்னுயிரை ஈந்த சொட்டக்கார சுவாமி, இராமண்ணா, இராமக்கா, சன்னாசி இவர்களுடன் நன்றி பாராட்டும் விதமாக ஒரு நாயும் இணைந்து கொண்டது தீரச் செயலாகச் சொக்கம்பட்டி சுற்று வட்டாரத்துக் கிராமத்து மக்களின் மனதில் பக்தியோடு பதிந்திருக்கிறது. இதனை அவர்கள் செவிவழியான கதையாகவும், திருவிழா வழிபாட்டு முறையாகவும் தொடர்ந்து நினைவுகூர்ந்து உயிர்ப்பித்து வருகின்றனர்.

கிராமிய வாழ்வின் அழகியலையும் சுற்றுச்சூழல் பேணும் பொறுப்பு உணர்வினையும் மனிதகுல ஒருமைப்பாட்டையும் சொட்டக்கார சுவாமி வழிபாடு ஒருசேர உணர்த்துகிறது.

முழுமையாக இல்லை எனினும் நிறைவாகக் கிடைத்துள்ள சான்றாதாரங்களை ஒத்திசைத்தும் வேறுபாடு கண்டும் தகுந்த முறையில் இந்த நூல் தொகுக்கப் பெற்றுள்ளது.

# சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

இயற்கையின் பரிணாமத்திலிருந்து ஆறறிவு கொண்ட உயிராகத் தோன்றிய மனிதன் தொடக்கத்தில் தனது புலன்களைத் தெளிந்து ஆறுஅறிவுகளையும் உணர்வதற்கு மிகவும் முயன்றான். அச்சமும் ஐயமும் அவனுக்கு எல்லா நிலைகளிலும் ஏற்பட்டன. இவற்றிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கு அவன் நம்பிக்கையைக் கைக்கொண்டான். இந்த நம்பிக்கையே பின்னாளில் கடவுள் வழிபாடாகத் தோற்றம் பெற்றது.

> "மாந்தன் வாழ்க்கை பல்வகைத் துன்பம் நிறைந்ததனால், அவற்றினின்று தப்புவதற்குத் தொன்று தொட்டுப் பாதுகாப்புத் தேடிக் கொள்ள வேண்டியதாயிற்று. உடைமைகளையும் உயிரையும் காப்பதற்கு முன்பு காவல்காரனும் பின்பு அரசனும் ஏற்பட்டனர். ஆயின், மக்களால் தடுக்க முடியாத கொள்ளைநோய், பஞ்சம், கடுங்காற்று, பெருவெள்ளம் முதலிய துன்பங்களைத் தடுத்தற்கும், நீக்கற்கும் மாந்தரின் அது மேம்பட்ட சில மறைவான தெய்வங்களே ஆற்றல் உள்ளவை என்று கருதி அனைவரும் அவற்றை வணங்கவும் வழிபடவும் தலைப்பட்டனர். அத்துன்பங்கள் அத்தெய்வத்தின் சீற்றத்தால் நேர்வன என்றும் நம்பி அவற்றிற்கு அஞ்சினர். ஆதலால், முகப்பு அச்சத்தை அடிப்படையாகக் கொண்டதாகும் (தேவநேயப் பாவாணர், 1972).

தனக்கும் மேலான ஒரு சக்தி இருப்பதை உணர்ந்து கொண்ட மனிதன்

அதனைப் பலவடிவங்களில் கண்டு வழிபடத் தொடங்கினான். குறிப்பாக, இயற்கை சக்திகளாக விளங்கும் ஐம்பூதங்களையும் தன்னோடு ஒத்த விலங்குகள், பறவைகள், தாவரங்களையும் வழிபட்டான். அந்த வரிசையில் தன் இனமாகிய மனித இனத்திலும் பெரும் சாதனை புரிந்தவர்களையும், சாதனைக்காக உயிரைத் துறந்தவர்களையும் வழிபடும் வழக்கத்தை மேற்கொண்டான். இந்த வழிபாடு பின்னர் நடுகல் வழிபாடாக மாற்றம் பெற்றது.

போர்க்களத்தில் தன் உயிரைத் துச்சமாக மதித்து வீரத்தோடு போர் புரிந்து முடிவில் வீரமரணம் அடைந்த ஒருவனுக்குச் செய்யப்படும் நினைவுச் சிறப்புகளே நடுகல் வழிபாட்டைத் தோற்றுவித்தன. இவ்வழக்கம் தொடர்ந்து பல படிநிலைகளைக் கடந்து கோயில் வழிபாட்டு மரபாக ஆனது.

## நடுகல் வழிபாட்டின் தொன்மை

சங்ககாலம் முதல் இன்றுவரையிலும் போற்றப்பட்டு வருவது நடுகல் வழிபாடு ஆகும். வெட்சித் திணையின் பகுதிகளில் நடுகல் வணக்கத்தின் ஆறு படிநிலைகளைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். இதனால் தொல்காப்பியர் காலமாகிய கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் முன்பே இந்நடுகல் வழிபாட்டு முறை இருந்து வந்துள்ளதை அறியலாம். இன்றும் அவ்வழிபாட்டின் தொடர்ச்சி நிலவுகிறது.

தொல்காப்பியர் நடுகல் வழிபாட்டைக் குறித்து,

காட்சி, கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபில் கல்லொடு புணர
எழுமூன்று துறைத்தே (தொல்காப்பியர், 1999)

என்று நடுகல் அமைப்பதற்குரிய முறைகளை விளக்குவார்.

காட்சி: போரில் இறந்த வீரனுக்குக் கல்லை எடுத்து வருவதற்காகத் தேர்ந்தெடுக்கக் காணுதல் ஆகும்.

கால்கோள்: தேர்ந்தெடுத்த கல்லை எடுத்து வருவதும், அவ்வாறு தேர்ந்தெடுத்துக் கொணர்ந்த கல்லினைச் சரியான இடத்தில், சரியான தருணத்தில் நடுதற்குரிய நிமித்தம் பார்த்தலும் ஆகும்,

நீர்ப்படை: எடுத்து வந்த கல்லினை நடுவதற்கு முன்னர் மங்கள நீராட்டல் ஆகும்.

நடுதல்: நீராடிய கல்லினை நடுதல் ஆகும்.

பெரும்படை: நட்ட கல்லிற்குக் கோட்டம் செய்தல் ஆகும்.

வாழ்த்தல்: கல்லினை வணங்குதலும் போற்றுதலும் ஆகும்,

தொல்காப்பியர் குறிப்பிடும் இந்த நடுகல் வழிபாட்டினைப் பழந்தமிழர்கள் பின்பற்றி வந்ததைப் பல சங்க இலக்கியப் பாடல்களும் குறித்துள்ளன. கைலாசபதி, தமிழ்நாட்டில் வீரவணக்கம் சங்ககாலத்தில் பெருவழக்குற்றிருக்கக் கூடும் எனக் கருதுவார்.

நடுகல் வழிபாடு: நடுகல் என்பது வென்றியான் மேம்பட்டத் துறக்கம் புக்க பெருவீரர் பெயரையும் அவர்கள் ஆங்காங்கு புரிந்த போர்ச் செயல்களையும் ஒரு நெடுங்கல்லில் எழுதி, அதனை நாட்டி அதில் அவர்களின் உருச்செய்து மாலை, பீலி, புனைந்து வழிபடுதல் என்று அபிதான சிந்தாமணி பொருளுரைக்கும் (சிங்காரவேலு முதலியார், 2002).

அகநானூறு, ஆநிரை மீட்கும் போரில் மடிந்த வீரர்களுக்கு நடுகல் எழுப்பப்பட்டு, அதில் அவர்கள் பெயரும் புகழும் எழுதப்படும் என நடுகல் பற்றிக் கூறும். இதன் வளர்ச்சிதான் நாட்டுப்புறத்தெய்வ வழிபாடாக மலர்ந்தது. இது வீரர்களின் ஆவியினைத் திருப்திப்படுத்தும் நோக்கத்தில் செய்யப்படும் வழிபாடாகும்.

போரில் இறந்தவர்களுக்கு நன்றி செலுத்தவும், அவர்கள் மற்றவர்களுக்கு உதாரண புருசர்களாகத் திகழவும் நடுகல் எழுப்பப்பட்டது. சங்க இலக்கியத்தில் ஔவையார் பாடல்கள் அதியமானுக்கு நடுகல் எழுப்பப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது (சந்திரசேகரன், 2003).

சங்க காலத்தில் போரில், வீரமரணத்தைத் தழுவிய வீரர்களுக்குக் கல்நட்டு அவர்களைக் கடவுளாக வழிபட்ட மரபினைக் குறித்து இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. பகைவரிடமிருந்து மாடுகளைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்டு உயிர்நீத்த கரந்தை வீரர்களுக்கே பெரும்பான்மையான கற்கள் நடப்பட்டன என்பதையும் நுண்மையாக அறிய முடிகிறது. இந்த நடுகற்களில் வீரமரணம் அடைந்த வீரனுடைய பெயரும் அவன்தன் பெருமையும் பொறிக்கப்பட்டன என்பதை,

அரம்போழ் நுதிய வாளி அம்பின்

நிரம்பா நோக்கின் நிரயம் கொண்மார்

நெல்லி நீளிடை எல்லி மண்டி

நல்அமர்க் கடந்த நாணுடை மறவர்

பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்

பீலிசூட்டிய பிறங்கு நிலை நடுகல்

வேல் ஊன்று பலகை (புலியூர்க்கேசிகன், 2010)

என்னும் பாடலால் அறியலாம். போரில் வீரமரணத்தைத் தழுவிய வீரர்களுக்கு எழுப்பப் பெற்ற இந்த நடுகற்கட்குப் பலவிதமான மலர்மாலைகளும் மயிற்பீலிகளும் சூட்டப்பட்டு வழிபாடு செய்யப் பெற்றன. அதுமட்டுமின்றி,

முன்ஊர்ப் பூசலின் தோன்றித் தன்னூர்

நெடுநிரை தழீஇய மீளி யாளர்

விடுகணை நீத்தம் துடிபுணை யாக,

வென்றி தந்து, கொன்றுகோள் விடுத்து,

வையகம் புலம்ப வளைஇய பாம்பின்

வைஎயிற்று உய்ந்த மதியின், மறவர்

கையகத்து உய்ந்த கன்றுடைப் பல்லான்

நிரையடு வந்த உரைய னாகி,

உரிகளை அரவ மானத், தானே

அரிதுசெல் உலகில் சென்றனன்; உடம்பே,

கானச் சிற்றியாற்று அருங்கரைக் கால்உற்றுக்,

கம்பமொடு துளங்கிய இலக்கம் போல,

அம்பொடு துளங்க ஆண்டுஒழிந் தன்றே;

உயர்இசை வெறுப்பத் தோன்றிய பெயரே,

மடஞ்சால் மஞ்ஞை அணிமயிர் சூட்டி,

இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்,

படஞ்செய் பந்தர்க் கல்மிசை யதுவே

வேங்கைப் பூவும், பனந்தோடும், கரந்தைப் பூவும் சூட்டுவது மரபு என்பதைப் புறநானூற்றின் பல பாடல்களின் வழியாக அறிய முடிகிறது (புலியூர்க்கேசிகன், 2010).

## அயலகங்களில் நடுகல் வழிபாடு



**படம் 1. ஒரு நடுகல் மாதிரி**

வீரவழிபாடு என்பது தமிழகத்தில் மட்டுமின்றி, பண்டைய நாகரிக மக்களிடையே காணப்படும் பொதுவான இயல்பாக விளங்குகியுள்ளது. போரில் வீரமரணம் அடைந்தவர்களுக்கு மிகச்சிறப்பு வாய்ந்த மற்றோர் உலகம் உண்டு என்பது பண்டைய நாகரிக மக்கள் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையாகும். படம் 1-இல் ஒரு நடுகல் மாதிரியையும் காட்டப்பட்டுள்ளது. இதனை,

> கிரேக்கர், பண்டைய ஜெர்மானியர், ரோமானியர், எகிப்தியர், தமிழர், சீனர் அனைவரும் வீரசுவர்க்கம் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர், போரில் வீரமரணம் அடைந்தோர், சிறந்த செயல் புரிந்தோர், புகழ், உலகில் நிலைத்து நிற்க நடுகல் நடுவர். ஆதிமனிதன் ஆவியின் சீற்றத்தைத் தணிக்கவே ஆவியை வழிபட ஆரம்பித்தான். ஆவிகள்தான் அவனது செயல்களைக் கட்டுப்படுத்துவதாக நம்பினான். நடுகல் வழிபாடு இதன் எச்சமே. இறந்து போனவர்களுக்குக் கல்நாட்டிப் பூசை செய்தல் நடுகல் வழிபாடாகும்.

> இறந்தவர்களை வழிபடுகின்ற வழிபாடானது வீரயுகக் காலத்திலிருந்து காணப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகத் தமிழர்களிடத்துத் தோன்றிய வீரவழிபாட்டு மரபு நடுகல் வழிபாடாகத் தொடர்ந்து வந்துள்ளது. அதுவே இன்று கதைப்பாடல்களில் வழங்கும் சிறுதெய்வ வழிபாடாகவும் வளர்ந்து வந்துள்ளது. (சந்திரசேகரன், 2003)

என்னும் கூற்றினால் உணரலாம். மேலும்,

> கிரேக்க நாட்டில் ஏதென்சு நகரில் இறந்த வீரர்களின் நினைவுச் சின்னங்களாக நெடுங்கற்கள் எழுப்பப்பட்டன. ஓயின் வண்ணக் கடற்பரப்பில் கப்பல் வரும் பொழுது வழியில் தென்படும் கரையோரங்களில் மறவர் நினைவுக் கற்கள் (Memorials of Warriors) நிறுத்தப்பட்டிருக்கும். அவையெல்லாம் போரில் மடிந்த மறவர்களின் நினைவாக எழுப்பப்பட்டவை. அவர்கள் எல்லாம் தம்புகழ் நிறுத்தித் தாம் மாய்ந்தவர் ஆவார் என இலியட் இதிகாசம் கூறும் என க.ப.அறவாணன் தமது நூலில் குறிப்பிடுவார். பல்வேறு துறைகளில் வீரங்காட்டியோர்க்கு நடுகல் எடுத்து வழிபடும் வழக்கமே பின்னர் கிராம தேவதை வழிபாடாக வளர்ந்தது. பாண்டி நாட்டில், மதுரை வீரன் வழிபாடு நடுகல் வழிபாட்டிலிருந்து வளர்ச்சியடைந்திருக்கலாம் (சந்திரசேகரன், 2003).

என்று நாகசாமி குறிப்பிடுவார். இந்த வழிபாட்டு மரபு இன்றும் தமிழகத்தில் தொடர்வதைப் பல சிறுதெய்வ வழிபாட்டு மரபுகளோடு ஒத்துக் காண இயலுகிறது.

> சங்ககாலத்தில் மலரும் மதுவும், ஊனும் சோறும், நடுகற்களுக்குப் படைக்கப்படும் வழக்கம் இருந்து வந்துள்ளது. இவ்வழக்கம் பிற்காலத்தில் (இன்றுவரை) எளிய இனத்தோர் வழிபாடுகளில்

காணப்படுவதாகும். வேள்வி நடத்தி மடை கொடுத்து சிறுதெய்வங்களை வழிபடுவது உண்டு. ஐயனார், மதுரைவீரன், இருளன், கருப்பன், நொண்டி முதலியன நடுகற் தெய்வங்களை ஒத்தனவாயுள்ளன (சந்திரசேகரன், 2003)

என்பார் வித்தியானந்தம்.

## நடுகல் வழிபாடும் குலதெய்வ வழிபாடும்

பண்டைக்காலத்தில் நிகழ்ந்த நடுகல் வழிபாட்டின் வளர்ச்சியே குலத்தெய்வ வழிபாடாக மாற்றம் பெற்றது எனக் கருத இடமுண்டு. போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த வீரனுக்கு நடுகல் இட்டு வழிபடுவது அக்கால வழக்கம். காலப்போக்கில் வீரர்களுக்கு அளிக்கப்பட்ட நடுகல் வணக்கம் குடும்பத்தில் இறந்தோர்க்கும் எடுக்கப்படலாயிற்று. இது பின்னாளில் குலதெய்வ வழிபாடாக மாறியது. சமூக நலனிற்காகவும், பொதுத்தொண்டுக்காகவும் தனது உயிரை மாய்த்துக் கொண்ட வீரர்களுக்கு எழுப்பப் பெற்ற நடுகல் வழிபாடு ஊர்ப் பொதுத்தெய்வ வழிபாடாக மாறியது.

## பெருந்தெய்வ வழிபாடும் சிறுதெய்வ வழிபாடும்

ஆதியில் அச்சத்தின் காரணமாக தோன்றிய வழிபாடு பின்னர் அது நீங்கப்பெற்று அறிவுப் புலப்பாடு தெளிவான வேளையில் தத்துவ முறையிலான வழிபாடாகப் பரிணாமம் அடைந்தது. இவ்வழிபாடு மேலும் பல புதிய முயற்சிகளுக்கு வழிவகுத்தது மட்டுமின்றி மனிதனின் தேடல்களையும் தூண்டியது.

அத்தேடல்கள் கோட்பாடுகளாகவும் சமயங்களாகவும் உருப்பெற்றன. தெய்வங்களைக் குறித்த கதைகள் மாற்றம் பெற்றுத் தத்துவ உருவினை ஏற்றன. பல சமயங்கள் பெருகி ஒவ்வொரு சமயத்துக்கும் ஒவ்வொரு கடவுளும் அவர்களுக்கான வழிபாட்டு மரபுகளும் தோன்றலாயின. சிறுதெய்வம், பெருந்தெய்வம் என்ற பாகுபாடுகளும் ஏற்பட்டன.

பெருந்தெய்வ வழிபாட்டு மரபுகள் நகர வாழ்வின் அடையாளமாகவும் மாறத் தொடங்கின. பெருந்தெய்வங்களுக்கு அமைந்த கோயில்கள், தன்னைச் சார்ந்த குடிகளை நகர அமைப்பு வாழ்க்கைக்கு மாற்றம் பெறச் செய்தன.

ஆதிவழிபாடாகிய இயற்கை வழிபாடு இயல்பான நாட்டுப்புற வழிபாடாக நிலைக்கத் தொடங்கியது. இயற்கையின் இயக்கத்திலிருந்து சற்றும் மாறாத எளிய, செம்மார்ந்த வாழ்வியல் முறையாகக் கிராம வாழ்வியல் திகழ்ந்தது. அதன் அடிப்படையாக விளங்கியது சிறுதெய்வ வழிபாடேயாகும்.

> மண்ணும் புழுதியும், மரமும் செடிகளும், விலங்குகளும் பறவைகளும் என்று இயற்கையின் எளிமையான அடையாளங்களோடு தம் வாழ்தலின் சத்தியங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் நாட்டுப்புறமக்கள் - வறுமையும், இயலாமையும், அறியாமையும் என்பவையான சிக்கல்களினூடே தம்மை வாழ்தலுக்குத் தகவமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அழுகையும், அவலமும், அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் என்ற நசிவுகளினூடே தம்மைக் கரைந்து போகவிடாமல் எழுவதற்காக முயன்று கொண்டு இருக்கிறார்கள். வாழ்தல் என்பது உண்பதும், கழிப்பதும் அல்ல; செல்வமும் செழிப்பும் அல்ல; அவையனைத்திற்கும் மேலாக, ஏதோ ஒன்று என்பதாக வாழ்தலின் அர்த்தங்களை அவர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள்; அன்பு, கருணை, கூட்டுறவு, தோழமை, கூடிவாழ்தல், பகிர்ந்தேற்றல் என்பன போன்ற அறக்கூறுகளையெல்லாம், புத்தகங்களில் படித்து மூளைக்குள் தகவல்களாகச் சேர்த்து வைத்துக் கொள்வதற்குப் பதிலாக, தத்தம் அனுபவங்களின் வழியாகச் செயல்படுத்திக்கொள்கிறார்கள் (சந்திரசேகரன், 2003).

இவ்வகையில் எண்ணற்ற சிறுதெய்வங்கள் தமிழர்தம் வாழ்வியலில் தோன்றி நிலைத்தன. தனிமனித, குடும்ப, சமூகக் கட்டமைப்புகளின் அடிப்படையில் சிறுதெய்வங்களுக்குத் தனித்த பங்குண்டு. அவை கிராம

வாழ்வியலில் பெரும்தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. அதுமட்டுமின்றி, பெருந்தெய்வ வழிபாட்டு மரபிற்கு முற்றிலும் மாறான பல அம்சங்களையும் சிறுதெய்வ வழிபாடு கொண்டுள்ளது.

> சிறு தெய்வக் கோயில்கள் கிராமங்கள்தோறும் இருக்கின்றன. சிறுதெய்வ, பெருந்தெய்வ வேறுபாட்டிற்குச் சமுதாய ரீதியான கருத்தைக் கைலாசபதி கூறுகிறார். சமுதாயத்திலேயே உயர்ந்தோர், தாழ்ந்தோர், மேலோர், கீழோர், பெரியவர், சிறியவர் முதலிய பாகுபாடுகள் தோன்றி வளர்ந்ததைத் தொடர்ந்து மனிதனது நிலையில் பிரதிபலிப்பது போலத் தெய்வங்களும் பெருந்தெய்வம் - சிறுதெய்வம் எனப் பகுக்கப்பட்டன என்பது சமுதாயத்தின் பொருளாதார சமய வேறுபாடுகளைக் காட்டக் கூடியதாக உள்ளது. சிறுதெய்வங்கள் மனிதனுடன் நெருக்கமான தொடர்புடையவை. அவை மக்களின் அன்றாடத் தேவைகளைத் தருவனவாகக் கருதப்பெறுவதால் அவை என்றும் வழிபடப் பெற்று வருகின்றன என ச. கணபதிராமன் கூறுவது உடன்பாடான கருத்தாகும். தமிழக நாட்டுப்புறத் தெய்வம் சிறு தெய்வங்கள் என்று சொல்வதெல்லாம் திராவிடத் தெய்வங்கள் என்று கூறுகின்றார் டாக்டர் துளசி இராமசாமி. ஊர்த் தெய்வங்கள் சிறு தெய்வங்கள் என்றழைக்கப்படுகின்றன. சிறுதெய்வக் கோயில்களில் வடமொழி மந்திரங்கள் ஓதப்படுவதில்லை. சிறு தெய்வங்களை கிராமப் பொதுத் தெய்வங்கள், குல தெய்வங்கள் எனப் பிரிக்கலாம் (சந்திரசேகரன், 2003)

என்னும் கருத்து சிறுதெய்வ வழிபாட்டின் பெருமைகளையும் பிரிவுகளையும் பற்றி விளக்குவதாக அமைகிறது.

## கிராமப் பொதுத் தெய்வங்கள்

கிராமத்தில் பல இனத்தைச் சேர்ந்த மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள்

அனைவரும் இணைந்தோ அல்லது தனித்தனியாகவோ வழிபடும் பொதுவான தெய்வங்கள் கிராமப் பொதுத் தெய்வங்கள் ஆகும்.

தமிழகத்தில் பரவலாகச் சாக்த வழிபாட்டின் தொடர்ச்சியாக, ஊர்ப் பொதுத் தெய்வங்களாக மாரியம்மன் வழிபாடும் காளி வழிபாடும் சிறப்புற நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு சிறு கிராமங்களிலும் உள்ள அம்மன் கோயில்கள் அந்தந்தக் கிராம மக்களால் வழிவழியாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அந்தக் கோயில் வழிபாடும் மரபுகளும் தான் சார்ந்த மண்ணின் பெருமையையும் பழமையையும் எடுத்துரைப்பனவாக அமைகின்றன.

## மாரியம்மன் வழிபாடு

சிறுதெய்வ வழிபாடுகளில் பெண்தெய்வங்களுக்குத் தனித்த- உயர்ந்த இடமுண்டு. இல்லறத்தைக் காப்பதுபோல, சமுதாயத்தின் நல்லறத்தையும் காப்பவள் தாயே என்று கருதிய முன்னோர் ஊரின் முக்கியக் காவல் தெய்வமாகப் பெண்தெய்வத்தை நிறுவி வழிபட்டனர். வேளாண்தொழிலுக்கு மிகவும் இன்றியமையாததாக விளங்கும் மழையைத் தரும் தெய்வமாக மாரியம்மன் வழிபாடு தோற்றம் பெற்றது.

> "கோடைக்கால வெப்பத்தால் மக்களைத் தாக்கும் கொடிய நோய்களான காலரா, அம்மை போன்ற நோய்களுக்கு மாரியம்மன் வழிபாட்டுக் குறைவே என்ற காரணமும் மக்களிடம் நிலவி வருகிறது. மாரியம்மனை வேண்டி வழிபடுவதன் மூலம் அந்நோய்களிலிருந்து தப்பலாம் என்று கருதியும் திருவிழாக்களை மக்கள் எடுக்கின்றனர். மாரி என்றால் மழை என்று பொருள். மாரியம்மன் மழைத் தெய்வம், நாட்டுப்புறத்தில் மழையைப் போற்றுகின்ற தன்மை உண்டு. மழை இன்றி இவ்வுலகில் ஏற்றம் இல்லை என்பதை உணர்ந்தே 'நீரின்றி அமையாது உலகு' என்றும், 'மாமழைப் போற்றுதும்' என்றும்,

'வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோன் உயர்வான்' என்றும் இலக்கியங்களில் கூறப்படுகிறது. மழைநீரை நம்பியே கிராமப்புற விவசாயம் அமைந்துள்ளதால் கிராம மக்கள் மழைவேண்டி இறைவனை வழிபடுகின்ற பாங்கு உள்ளது. வெப்ப நோயைத் தணிக்கவும் மழைவேண்டி மக்கள் விழா எடுப்பதும் கிராம மக்களிடம் நடை முறையில் உள்ளது. பண்டைத் தமிழர் போற்றிய வருணனே இக்கால மாரியம்மன். நீர் சார்ந்த நெய்தல் நிலக்கடவுளாக வருணனைத் தொல்காப்பியர் கூறுவர் (சந்திரசேகரன், 2003).

ஊரின் முக்கியத் தெய்வமான மாரியம்மனுக்கு ஊர் மன்றிலில் கோயில்கள் அமைக்கப் பெற்றன. மன்றிலுக்கு மந்தை என்ற பெயரும் வழங்கப்படுவதால் பல ஊர்களில் மந்தையம்மன் என்றும் மாரியம்மனுக்குப் பெயர்கள் தோன்றின. மந்தையம்மன், மந்தை முத்தாளம்மன் என்னும் பெயர்கள் இவ்வகையில் நீட்சியடைந்தன எனினும் அவை யாவும் மாரியம்மன் என்பதன் தொடர்ச்சியாகவே விளங்கியன.

பெண் தெய்வங்கள் அம்மன் என்னும் பெயருடன் வணங்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் முத்தாரம்மன், முத்தாலம்மன், மாரியம்மன், காளியம்மன், பத்திரகாளியம்மன், தோட்டுக் காளியம்மன், அங்காளம்மன், குமரியம்மன், பேச்சியம்மன். காட்டாளம்மான், சந்தனமாரியம்மன் என்னும் பலவகையான அம்மன் தெய்வங்கள் பெண்தெய்வங்களின் பிரதானமாக விளங்குகின்றன. இவ்வம்மன்களுள் சில வானுலகில் கைலாயத்தில் பிறந்தவை: வேள்வித்தீயில் பார்வதியின் வியர்வைத் துளிவழித் தோன்றியவள் முத்தாரம்மன், காளியம்மனும், பத்திரகாளியம்மனும் சிவனின் வலக்கண்ணிலிருந்து அல்லது ஒருபானை அல்லது முட்டைக்குள்ளிலிருந்து பிறக்கின்றனர். உச்சிமாகாளி விட்டுணுவால்

கொல்லப்படும் இரணிய கசிபுவின் குருதியில் பிறக்கின்றாள் என்பார் தே.லூர்து (சந்திரசேகரன், 2003).

மாரியம்மன் என்னும் பெண் தெய்வம் தனக்கான இடமாக ஊர் நடுவில் கோயில் கொண்டிருக்கும். அக்கோயில் ஊரின் பொது வழிபாட்டு மையமாகத் திகழும். மிக எளிமையான இயல்பான பூசை முறைகளோடு கிராமிய வாழ்வில் இரண்டறக் கலந்தது மாரியம்மன் வழிபாடு ஆகும்.

> எல்லா ஊர்களிலும் மாரியம்மன் கோயில்கள் உள்ளன. அந்தந்த இடத்திற்கு ஏற்றாற்போல் பெரிய மாரியம்மன், சிறிய மாரியம்மன் என்று அழைக்கப்படுகிறது. இறைவன் இருக்குமிடம் சிறிய அமைப்பிலும் முன் மண்டபம் பெரிய அமைப்பிலும் அமைக்கப்பட்டுள்ளது. சிலை வடிவில் மாரியம்மன் காட்சி தருகிறார். நாள்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் பூசை நடைபெறுகிறது. ஆண்டுதோறும் சித்திரை மாதமும் கார்த்திகை மாதமும் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன (சந்திரசேகரன், 2003).

புதுவைப் பகுதியில் நெய்தல் கிராமங்களில் மாரியம்மன், முத்துமாரியம்மன், தேசமுத்துமாரியம்மன், வர்ணமுத்து மாரியம்மன், ஏழைமாரியம்மன், பூஞ்சோலைமாரியம்மன், கருமாரியம்மன், மேற்காத்து ஆத்தாள், அங்காள பரமேஸ்வரி, பச்சைவாழியம்மன், செங்கேணியம்மன் என்ற பெயர்களில் பெண்தெய்வ வழிபாடுகள் சிறப்பாக நடந்து வருகின்றன. புதுவையில் பத்தாண்டுகள் வாழ்ந்த பாரதியார் தனது படைப்புகளில் இதைக் குறித்துப் பதிவு செய்துள்ளார்.

### காளி வழிபாடு

கிராமங்களில் காளிகோயில் ஊருக்கு வெளியே அமைந்திருக்கும். காளி கோயில்கள் பெரும்பாலும் மூன்று அல்லது நான்கு ஊர்களுக்குப் பொதுவாகவே இருக்கும். காளி அச்சம் தரும் தோற்றத்தைக் கொண்டவளாக

விளங்குபவள். தீயசக்திகளை அழித்துத் தன்னை நம்பும் பக்தர்களைப் பாதுகாப்பவள் ஆதலால் காளி ஊரின் காவல் தெய்வமாகவும் போற்றப்படுகிறாள்.

காளி வழிபாட்டில் மிக முக்கியமான இடத்தை பெறுவது அன்றாடப் பூசைகளோடு கூடிய பொங்கலும் படையலும் ஆகும். இவை தவிர உயிர்ப்பலியும் காளி வழிபாட்டில் மிக முக்கிய இடம் பெறும். ஆடு, கோழி முதலிய உயிர்களை மக்கள் தங்கள் நேர்த்திக் கடனுக்காகப் பலியாகக் கொடுப்பர். இந்தப் பலி பெரும்பாலும் நள்ளிரவு வேளையில் நிகழும்.

> திருவிழாக்கள் ஒரு சில ஊர்களில் ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது இருமுறையோ நடைபெறுகின்றன. வழிவழியாக உரிமை பூண்ட பூசாரி விரதம் இருந்து வழிபாடு செய்வதும் சிலநேரங்களில் தெய்வம் ஏறப்பெற்று குற்றங்களைச் சுட்டிக் காட்டுவதும் வழக்கமாக உள்ளது. தெய்வ வெறியில் ஆட்டுக்குட்டியின் கழுத்தை அரிந்து குருதி குடிப்பதும் உண்டு. அக்காலப் பாலைநிலத் தெய்வமாகிய கொற்றவையே இக்காலக் காளி வழிபாடாக நாம் கொள்ளலாம் (சந்திரசேகரன், 2003).

நாட்டுப்புற மக்களின் வழிபாட்டுமுறை பண்டைத் தமிழர் போற்றிய உணர்வு வயப்பட்ட வழிபாடு என்பதையும் மக்கள் நம்பிக்கையுடன் சிறுதெய்வங்களையும் குலதெய்வங்களையும் வழிபட்டனர் என்பதையும் இதன் வழியாக அறிய முடிகிறது.

போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு மட்டுமின்றி, மானத்திற்காகப் புறம்காணாமலும், எதிரிகளிடம் பிடிபடாமலும் தன்னுயிரைத் தானே மாய்த்துக் கொண்ட வீரர்களுக்கும் நடுகற்கள் நடப்பட்டுள்ளன. அந்த வகையிலேயே சொட்டக்கார ஐயனார் சுவாமிக்கான நடுகல் நடப்பட்டுள்ளது என்பதும் இதன்வழி உணரலாகிறது. ஆதலால் சொட்டக்கார ஐயனார்

வழிபாடு குலதெய்வ வழிபாடாக அல்லாமல், ஊர்ப் பொதுத்தெய்வ வழிபாடாக மாறியது.

## குல தெய்வ வழிபாடு

கிராமங்களில் குலதெய்வ வழிபாடுகள் பன்னெடுங்காலமாகவே நடைபெற்று வருகின்றன. இறந்த முன்னோர்களின் நினைவாகவே நாட்டுப்புற மக்கள் வழிபாட்டில் பெண்தெய்வ வழிபாடு மிக அழுத்தமான இடத்தைப் பிடித்திருப்பதை அம்மன், காளி, கன்னி, குமரி, இயக்கி ஆகிய பெண்தெய்வ வழிபாட்டின் ஆளுமை நன்குணர்த்தும்.

சிறுதெய்வ வழிபாட்டையும் தன்னுள் இணைத்துக் கொண்ட பெருந்தெய்வ வழிபாடு காலப்போக்கில் தொன்மக் கதைகளையும் சிறுதெய்வங்களோடு இணைந்துவிட்டது. குலதெய்வ வழிபாட்டிலும் சிறுதெய்வ வழிபாட்டிலும் சுட்டப் பெறும் அம்மன் தெய்வங்கள் பெருந்தெய்வ புராணக் கதைகளோடு இணைத்துப் போற்றப் பெற்றன.

> இவர்கள் மணம் புரியாத தேவியராகக் கருதப்படுகின்றனர். இத்தேவியரில் பலர் கடவுளரோடு இணைப்புப் பெற்றுவிட்டனர்; காளி தனியாகவே வணங்கப்பட்டது. அது சைவ சமயத்தில் பார்வதியோடு சேர்ந்து ஒரு அம்சமாகிவிட்டது என்பார் நா.வானமாமலை. தேவியரில் பெரும்பாலானவை மூர்க்க தேவதைகளே என்பது நா.வானமாமலையின் கருத்து. இவை பெண்ணாதிக்கச் சமுதாயத்தின் எச்சமாக நிற்கின்றன என்பர். சமூக மேலாதிக்க உணர்வு இன்றும் இருந்தாலும் இன்று பெண்தெய்வங்களையெல்லாம் பார்வதியின் அவதாரங்களாகவும் ஏனைய ஆண்தெய்வங்கள் சாபம் பெற்று மண்ணில் பிறந்தவர்களாகவும் குறிப்பிடப்படுகின்றனர் (சந்திரசேகரன், 2003).

## சங்ககாலத்தில் பலியிடல் வழிபாடு

காய்கனி, கிழங்கு முதலிய இயற்கை விளைபொருளையும், வேட்டையாடிய விலங்கு, அவற்றின் பால், இறைச்சியையும் உண்டு வாழ்ந்து- வளராத நிலையிலிருந்த மனிதன், தீ, இடி போன்ற இயற்கை சக்திகளுக்கும், பாம்புபோன்ற நச்சு உயிர்க்கும், இறந்தோர் ஆவிகட்கும் அவற்றுள் ஒரு சார்பான பேய்கட்கும், அஞ்சிய அச்சமே, தெய்வ வணக்கத்தை அல்லது சிறு தெய்வ வழிபாட்டு மரபினை முதலில் தோற்றுவித்தது. அதனால் கொல்லும் தன்மையுள்ள எல்லாவற்றையும் தெய்வமாகக் கொண்டு, அவை தம்மைக் கொல்லாதவாறு படைத்தும், இருதிணை உயிர்களையும் காவு கொடுத்தும் வழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

சங்ககாலத்தின் வழிபாட்டு மரபில் முருகனுக்கும் காளிதேவிக்கும் கிடா எனப்படும் ஆட்டுமறி பலி கொடுக்கும் பழக்கம் இருந்திருக்கின்றது என்பது புலனாகிறது. சங்ககாலச் சமூகத்தில் ஏற்பட்ட கொடுமையான நோய்களின் காரணமாக வெறியாட்டுச் செய்தல் நடத்தப்பட்டிருக்கிறது.

சங்க இலக்கியத்தில் தலைவனை நினைத்துத் தலைவி வருந்தும் வேளையில் அவளுடைய உடம்பு பசலை பாய்ந்து மெலிந்து போவதைக் கண்டு வருந்திய அவர்தம் பெற்றோர் அவளுடைய நலம் வேண்டிச் செய்யும் வழிபாட்டு மரபுகளில் ஒன்று வெறியாட்டு ஆகும்.

தொல்காப்பியர் இந்த வழக்கத்தினை,

கட்டினும் கழங்கினும் வெறிஎன இருவரும்

ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்

என்று குறிப்பிடுகிறார் (தொல்காப்பியர், 2010). முறத்தில் அல்லது சுளகில் நெல்லைப் பரப்பி வைத்துக்கொண்டு. அந்த நெல்லை எண்ணிக் குறி பார்ப்பது. கட்டு எனப்படும். கழங்கு என்பது கழற்சிக்காய். இந்தக் காய்கள்

மூலம் முருகனால் நோய் ஏற்பட்டு உள்ளதா என்று அறிவதற்காக வேலன் என்னும் வெறியாடல் மேற்கொள்பவன் செய்யும் முயற்சியே வெறியாடல் சடங்காகும்.

அணங்குடை முருகன், நெடுவேள் அணங்குறு மகளிர், முருகு ஆற்றுப்படுத்தல், முருகு அயர்தல், வெறி, வெறியயர்தல், வெறியாட்டு என்று வெறியாட்டு குறித்த பதிவினைக் காணமுடிகிறது. ஐங்குறுநூற்றில் ‘வெறிபத்து’ என்ற பத்து இப்பொருள் பற்றி அமைந்துள்ளது (தொல்காப்பியர், 2010).

தெய்வம் ஏறி ஆடும் ஆட்டத்திற்குப் பெயர் வெறியாட்டு. வெறியாட்டில் முருகனுக்குப் பூசை செய்வோன்‘வேலன்’ எனப்படுவான். முருகனின் வேலைத் தாங்கி, வேடம் பூண்டு நிற்றலால் வெறியாட்டாளனும் வேலன் எனும் பெயர் பெறுகின்றான்.

சங்ககால மக்கள் வெறிக்களம் எனப்படும் இடத்தினை வீட்டு முற்றத்திலேயே உருவாக்கி இச்சடங்கினைச் செய்திருக்கின்றார்கள். வெறியாட்டு அயர்தலில் ஆட்டு மறியை அதில் இருந்து பெருகும் குருதியுடன் செந்தினையைக் கலந்து பலியாகத் தூவியிருக்கிறார்கள். இவ்வழிபாடு இரவின் சாமப் பொழுதில் நடந்ததாகத் தெரிய வருகின்றது.

பேய் விரட்டலுக்காகப் பலியிடும் வழக்கம் தமிழர்களிடம் இருந்துள்ளது. சங்ககாலத்தில் பேய் முதலியவற்றால் தீண்டப்பட்டவர்களுக்கு ஆட்டினைப் பலிகொடுத்து தினையரிசி முதலியவற்றைப் படையலாக வைத்து வழிபடும் வழக்கம் இருந்ததைப் பற்றி விரிவாகப் பேசப்படுகிறது. மேலும்,

கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை யொள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
காரெதிர் புறவி னதுவே உயர்ந்தோர்க்கு

நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்

வரைகோ ளறியாச் சொன்றி

நிரைகோற் குறுந்தொடி தந்தை யூரே! (திருக்கண்ணபுரத்தான் திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கன். 1914)

தலைவியின் தந்தை உயர்ந்தோர்க்கு நீருடன் சொரிந்தபின் (தாரைவார்த்துக் கொடுத்தபின்) உள்ள மிச்சத்தை யாவர்க்கும் வழங்குவான் என்பதன் வழியாக மூத்தோருக்கும் தாரை வார்த்தல் என்னும் பெயரில் பலி தரப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய முடிகிறது.

பேய்கள் ஊர்களிலும், மன்றங்களிலும், மாலைப் பொழுதுகளிலும் இடப்படும் பலிகளை உண்டதை

வேனில் முருக்கின் விளை துணர் அன்ன

மாணா விரல வல்வாய்ப் பேஎய்

மல்லல் மூதூர் மலர்ப்பலி உணீஇய,

மன்றம் போழும் புன்கண் மாலை,

தம்மொடும் அஞ்சும் நம் இவண் ஒழியச்

செல்ப என்ப தாமே (நாராயணசாமி ஐயர். 1915)

என்ற நற்றிணைப் பாடல்வழி ஆட்டினைப் பலி கொடுத்து விட்டால் தான் பிடித்தவர்களை விட்டுப் பேய் நீங்கி விடும் என்ற நம்பிக்கை சங்ககால மக்களிடையே இருந்திருக்கின்றது என்பதை அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்தில் ஆட்டு மறிகளை வெட்டுவது வழக்கத்தில் இருந்திருக்கின்றது. சிறு தெய்வங்களான காளிக்கும், முருகனுக்கும் இப்பலியிடும் வழக்கம் இருந்ததைச் சான்றுகளின் வாயிலாக அறிய இயல்கிறது.

முருகன் குறவர்களுக்குரிய கடவுள். வழிபாட்டிற்காகவும். நோய் நீங்குவதற்காகவும் பேய் ஓட்டுவதற்காகவும் இப்பலியிடுதல் ஏற்பட்டிருக்கிறது. இவற்றுள் முதல்வகையான வழிபாட்டிற்காக இறைவனுடைய தளத்தில் ஆட்டினைப் பலியிடுதல் மேல்நிலையாக்கத்தினால் தமிழர்களிடம் வந்திருக்கலாம். வேள்விகளின்போது உயிரினங்களைப் பலியிடும் ஆரியர்கள் போன்று தமிழர்கள் ஆடுபலி இடம் பழக்கத்தினைக் கோயில் தலங்களில் கொண்டுவந்திருக்கலாம் என்று கருதவும் இடமுண்டு. (சந்திரசேகரன், 2003)

## ஆவி வழிபாடும் பலியிடலும்

தமிழ் இலக்கியங்கள் மறுமை வாழ்க்கையைக் குறித்து விரிவாகப் பேசுகின்றன. ஒரு பிறவியில் வாழ்ந்த மனிதனுடைய ஆன்மா தன்னுடைய எண்ணங்களிலிருந்து நீங்காமல் தொடர்ந்து இயங்கும் எனவும், தான் சார்ந்த சமுதாயத்திற்கு அது பாதிப்பை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை நிறைந்திருந்தது. இந்த நம்பிக்கை தமிழ் மரபில் மட்டுமின்றி உலக அளவிலும் ஆதிகுடிகளிடமும் திகழ்ந்தது.

பண்டைய எகிப்து நாகரிகத்தில் அரசர்கள் இறந்தவுடன் மறுஉலகிற்கு செல்வதாகவும், அவ்வுலகில் வாழ அவர்களுக்கு இப்பூவுலக உடல் தேவைப்படுவதால், இறந்த அரசர்களின் சடலங்களைப் பாதுகாப்பது அவசியம் என்ற நம்பிக்கை இருந்தமையால், அரசர்களின் சடலங்கள் பதனிடப்பட்டன. மனிதர்களின் சடலங்கள் மட்டுமல்லாது முதலை, பூனை ஆகியவற்றின் சடலங்களும் சடலப்பதனிடல் பட்டன. (Arthur C. Aufderheide, 2003)

பண்டைய இனக்குழு மக்கள் இறந்தவர்களின் ஆவிகள் இயக்கத்துடன் உலவுவதாக நம்பினர். மேலும், அவ்வாறு இறந்தவர்களின் ஆன்மாவிற்கு

ஆற்றல் அதிகம் என்றும், அது ஆக்கசக்தியாகவும், அழிவு சக்தியாகவும் வெளிப்பட்டு மக்களைக் காக்கும் என்றும் நம்பினர்.

அதுமட்டுமல்லாது, இறந்தவர்களின் ஆன்மா அவர்கள் சந்ததியரோடு தொடர்பு கொள்ளும் என்று நம்பி, அவற்றைச் சடங்குகள், வழிபாடுகள், சாந்திகள் மூலம் மக்கள் மகிழ்வித்தால், அவர்களுக்கு அந்த ஆவிகள் சக்தியினையும் பாதுகாப்பியையம் அளிக்கும் எனவும் கருதினர். இதற்காகச் சடங்குகள் நடத்திப் படையல் போட்டு வழிபாடு செய்தனர். இத்தகைய வழிபாட்டு முறைக்கு ஆன்றோர் வணக்கம் (Ancestor Worship) என்று பெயர். இப்பழக்கம் ஆப்பிரிக்கா, நைஜீரியா, கென்யா, தென்கடல் தீவுகள், மேற்கிந்தியத் தீவுகள் போன்ற நாடுகளில் இருந்துள்ளது.

அதியமானது ஆன்மாவை மகிழ்ச்சிப்படுத்த அவனுடைய மக்கள் சடங்குகள் செய்துள்ளனர் என்பதனை,

இல்லாகியரோ காலை மாலை

அல்லாகியர் யான் வாழும் நாளே

நடுகல் பீலி சூட்டி நார் அரி

சிறு கலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லொ

கோடு உயர் பிறங்கு மலை கெழீஇய

நாடு உடன் கொடுப்பவும் கொள்ளாதோனே?

என்று புறநானூற்றின் வழியாக அறியமுடிகிறது (புலியூர்க்கேசிகன், 2010).

சிறுதெய்வங்களுக்குப் பலி கொடுத்தால் அதிக சக்தி கிடைக்கும் என்ற நம்பிக்கை இன்றும் நாட்டுப்புற மக்களிடம் உண்டு. தமிழகத்தில் 6,7,8ஆம் நூற்றாண்டுகளிலும் கொங்கு நாட்டில் சென்னிமலை, பேரூர், அவினாசி, அன்னூர் ஆகிய இடங்களிலும் நரபலி வழிபாடு தொடர்ந்து நிகழ்ந்துள்ளது.

சங்ககால நடுகல் வழிபாட்டின்போது செம்மறி ஆட்டுப் பலியினை வேலத்தி தன் மகள் செண்பகக் குட்டியைப் பலிகொடுப்பதாகக் கூறப்படுகிறது.

> சுடலைமாடன் வேள்விக் குழியிலிருந்து தோன்றி, கிடா, பன்றி, கோழி ஆகியவற்றைப் பலி கேட்கின்றான். மேலும், களிப் பெரும்புலையன் என்ற மந்திரவாதியிடம் சூல்கொண்ட ஆடு, சூல் கொண்ட பன்றி ஆகியவற்றைப் பலியாகக் கேட்கிறான். மந்திரவாதி சுடலைமாடனுக்கு அவன் கேட்ட பலியுடன் ஏழுமாதக் கர்ப்பிணியைப் பலி கொடுக்கிறான். (சந்திரசேகரன், 2003)

இத்தகைய கருத்துகளின் மூலம் சிறுதெய்வங்கள் பலிகொள்ளும் தெய்வங்களாக விளங்கியதையும் அறிந்து கொள்ள இயல்கிறது.

## நவகண்ட வழிபாடு

மேலும், பிறர் நலன் கருதி ஆடவர் தம் இன்னுயிரைத் தாமே தெய்வத் திருவுரு முன் தம்மைப் பலியிட்டு உள்ளனர். தமிழில் இது தலைப்பலி எனப்பட்டது. தெலுங்கில் இம்முறை மிடிதலா அல்லது கண்டதலா என்று அழைக்கப்பட்டது. கன்னட மொழியில் இதை சிடிதலா என்றனர். தம் உடலை (ஒன்பது துண்டுகளாக) ஒன்பது பாகமாகக் கூர்மையான வாளால் தாமே வெட்டிக் கொள்வது நவக்கண்டம் ஆகும். அவ்வாறான ஒரு நவக்கண்டச் செய்தி

> பிடாரிக்கு நவகண்டம் குடுத்த குன்றகத்தலை யறுத்துப் பிடலிகை மேல் வைத்தானுக்கு திருவான்மூர் ஊரார் வைத்த பரிசாவது எமூர்ப் பறை கொட்டக் கல்மேடு செய்தார், ஆவிக்குக் குடுப்பாராவார்

என்று செங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட நடுகல்லில் பதிவாகியுள்ளது (S.I.I. Vol. 12 No. 106 /A.R.N No.498 of 1908.).

‘செங்கத்தின் மற்றொரு நடுகல் 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த

பரமேஸ்வரவர்மனின் 6ஆம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ளது.

> பல்குன்றக்கோட்டத்து மேல்வேணாட்டை ஆட்சி புரியும் ஊணமிரையார் என்ற இனக்குழுத் தலைவன் ஆட்சிக் காலத்தில் கந்தவாணரைசர் என்பவன் மணிக்கல் என்ற ஊரில் உள்ள எருதாக்கணத்தான் என்பவரின் எருது மற்றும் பசு மந்தையைக் கவரும்போது நடந்த சண்டையில் எருதாக்கணத்தான் என்பவர் இறந்துவிட்டார்

என்பது கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (மாலைமலர், 2019). அவரது வீரத்தை நினைவுகூரும் விதமாக இந்த நடுகல் பதிவு அமைந்துள்ளது.

இவற்றின் வழியாக நமது நாட்டில் பண்டைய காலம் தொட்டே இறந்தவர்களைப் போற்றும் ஆவி வழிபாடு சிறப்புப் பெற்றிருந்தது என்பது தெரிகின்றது.

மேலும், இறந்தவனது ஆன்மாவைச் சில சடங்குகள் மூலம் ஓர் குறிப்பிட்ட இடத்திற்கு வரவழைக்கவும் அங்குள்ள ஓர் பொருளில் நுழைந்து கொள்ளச் செய்யவும் முடியும் என்ற நம்பிக்கை தமிழகத்தில் மட்டுமின்றி உலகமெங்கும் பண்டைய மக்களின் பண்பாட்டில் காணப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியே இன்றும் தெய்வ விக்கிரங்களைப் பிரதிட்டை செய்து மந்திரங்கள் ஓதிச் செய்யும் ஆவாகன வழக்கம் என்று கருதுவதற்கு இடமுண்டு.

> ஆவிகளை ஆவேசமாகக் கூக்குரலாலும், உரத்த வாத்திய ஒலியாலும், புகை மூட்டத்தாலும், உயிர்ப்பலி போன்றவைகளாலும் ஒரு குறிப்பிட்ட ஆவியை ஒரு குறிப்பிட்ட மனிதனின்மீது தோன்றும்படி செய்து சாமியழைத்தல் அல்லது அருள்வேட்டல் என்பதாகும். (சந்திரசேகரன், 2003)

## வடக்கிருந்தோர் வழிபாடு

போரில் வீரம் விளைவித்த மறவர்க்கு மட்டுமல்லாமல் வடக்கிருந்து உயிர் நீத்த கோப்பெருஞ்சோழனுக்கு நடுகல் எடுத்து வழிபட்ட செய்தியைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் மூலம் தெளியலாம்.

பலர்க்கு நிழலாகி, உலகம் மீக்கூறித்,

தலைப்போ கன்மையிற் சிறுவழி மடங்கி,

நிலைபெறு நடுகல் ஆகியக் கண்ணும்,

இடங் கொடுத்து அளிப்ப, மன்ற - உடம்போடு

இன்னுயிர் விரும்பும் கிழமைத்

தொன்னட் புடையார் தம்உழைச் செலினே!

எனுமாறு நடுகல் ஆகியக் கண்ணும் இடங்கொடுத்து அளிப்ப என்று கூறுவது தெய்வீக நிலையைக் காட்டுவதாக அமைகிறது என்பார் உரையாசிரியர் (புலியூர்க்கேசிகன், 2010).

வீரப்பண்பினை மட்டுமின்றி, நட்பின் உருக்கத்தால் நடுகற்கள் தோன்றியிருக்கின்றன. அத்தகைய நடுகற்களுக்குப் பீலிசூட்டி, கள்படைத்து, செம்மறியாட்டுக் குட்டியைப் பலி கொடுத்து, கைகூப்பி வழிபட்ட செய்தியைச் சங்கப்பாடல்கள் பலவற்றின் மூலம் அறியலாம்.

தொல்காப்பியத்தைத் தொடர்ந்த புறப்பொருள் வெண்பா மாலை, வீரசோழியம், இலக்கண விளக்கம். நேமிநாதம் ஆகிய இலக்கண நூற்களில் நடுகல் எடுக்கப்படும் முறைகள் கூறப்படுகின்றன. சங்க இலக்கியத்திற்குப் பின் குறள், ஐந்திணை ஐம்பது. ஐந்திணை எழுபது, சிலம்பு, மணிமேகலை, பெருங்கதை, சிந்தாமணி, திருவாரூர் மும்மணிக்கோவை ஆகிய இலக்கியங்களில் நடுகல் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.

போர்வீரர்களின் வீரத்தையும் உயிர்த்தியாகத்தையும் போற்றும் வண்ணம் தோன்றிய நடுகல் காலப்போக்கில் மனிதனின் மற்ற பண்புகளையும் பாராட்டும் நிலையில் அமைந்தது. பெண்களுக்கு நடுகல் எடுத்ததைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் தனித்த குறிப்புகள் எதுவும் இல்லை. தென்னிந்தியாவில் கணவனை இழந்த பெண்கள் தீப்புகுந்து மாய்ந்த வேளையில் அவர்களுக்குக் கல்நடும் வழக்கம் பரவலாக இருந்தது. சிலப்பதிகாரத்தில்தான் பெண்ணுக்கு நடுகல் எடுத்ததாகக் குறிப்புக் கிடைக்கிறது. உயிருடன் மேலுலகம் சென்ற கண்ணகிக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. கண்ணகிக்குச் சிலை செய்யக் கல்லைத் தேர்ந்தெடுக்க இடம் தேடுதலைக் கூறும் காதையே காட்சிக் காதையாக அமைந்து விளங்குகிறது.

## நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் வழிபாடு

பழங்கால மக்கள் நடுகல்லில் தங்கும் ஆவியிடமிருந்து, நன்மைகளைப் பெற வேண்டி அதனை வழிபட்டனர். இக்காலத்தில் மக்கள் வழிபடும் சிறுதெய்வங்கள் நடுகல் வழி வந்தனவேயாகும். நாட்டுப்புறக் கதைப்பாடல் குறிப்பிடும் தெய்வங்கள் அந்நடுகற்கள் இருந்த பீடங்களிலும், பெரிய கோயில்களிலும் வீற்றிருக்கின்றனர்.

> இந்து சமயக் கோட்பாடுகளின்வழி பெருநெறி, சிறுநெறி என்னும் பகுப்புகளில் சிறுதெய்வ வழிபாடு சிறுநெறியில் அடங்கும். பிராமணரல்லாதார் இவ்வழிபாட்டை நடத்துவர். கதைப்பாடல்கள் சிறுதெய்வங்களின் தோற்றம், தன்மைப் பண்பு குறித்த செய்திகள், சிறு தெய்வங்கள் சிவனிடம் வரம் பெறுதல், மக்கள் வழிபடச் செய்தல், சிறுதெய்வங்களை அடக்குதல் ஆகிய குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. வீரதீரச் செயல்கள் புரிந்து நடுகல்லாக வழிபடப்படும் கதைப்பாடல் தலைவர்கள் முத்துப்பட்டன், காத்தவராயன், மதுரைவீரன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர். பெண்களில், நல்லதங்காள், இசக்கி, நீலி பொன்னிறத்தாள்,

தோட்டுக்காரி எனத் தெய்வப்பட்டியல் நீளும். பெண் தெய்வங்களின் தோற்றங்களுக்குக் காரணமாக கன்னி மரணமடைதல், கர்ப்பிணி மரணமடைதல் முதலியன அமைகின்றன. நாட்டார் கதைகளில் அகால மரணமடைந்தவர்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகின்றனர். அகால மரணமடைந்தவர்கள் இறந்தபின் கொடிய செயல்களைச் செய்ய, அதற்கு அஞ்சிய மக்கள், அவர்களை வழிபாடு செய்தனர். மதுரைவீரன், இருளன், கருப்பன், நொண்டி முத்துப்பட்டன் போன்றோர் நடுகல் மரபில் வணங்கப்பெறும் சிறுதெய்வங்களாகும். (சந்திரசேகரன், 2003)

இவ்வாறாக, கதைப்பாடல்களில் இடம்பெறும் சிறுதெய்வங்களின் பெயர்கள், வரலாறு, வழிபாட்டு முறைகளைக் குறித்து விரிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

## அகால மரணத்தெய்வங்கள் (பட்ட தெய்வங்கள்)

முந்தைய நடுகல் வழிபாட்டு மரபிலான சிறுதெய்வங்களுக்கு இணையாக, பாளையக்காரர்களின் ஆட்சிக்காலத்தில் பிற்காலத் தெய்வங்களின் வழிபாடு தொடங்குகிறது. இத்தெய்வங்கள் அடக்குமுறைக்கு உள்ளாகித் தங்களின் உயிரை இழந்தவர்கள். அத்தகைய அகால மரணத்தினால் ஆவியாகத் திரிபவர்களாகவும் அவர்களை அமைதிப்படுத்தவே வழிபாடுகள் மேற்கொள்வதாகவும் மக்கள் நம்புகின்றனர். இவர்களுக்குப் பட்ட தெய்வங்கள் என்ற பெயரும் உண்டு. சமூக அதிகாரமும் எதேச்சதிகாரமும் சாதியப் பிற்போக்குத்தனமும் படைத்தவர்கள் பிறசாதிகளில் உள்ள பெண்களை விரும்பிக் கைப்பற்றும் செயல்களில் ஈடுபட்டதனால் எழுந்த போராட்டங்களில் கொல்லப்பட்டவர்கள், தெய்வங்களாக வழிபடப்படுகின்றனர். பாலம்மாள் வழிபாடு கற்புடைய பெண்ணின்

மரணத்திலிருந்து தோன்றியதாகும். இது கொடுங்கொலையாகவே கருதப்படுகிறது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஒரு துரையின் அதிகாரத் திமிரினால் ஏற்பட்ட பகைமையைச் சமாளித்துக் காமுகனாகிய அவனிடமிருந்து மகளைக் காப்பாற்ற ஏற்பட்ட போராட்டத்தில் பாலம்மாள் கொலை செய்யப்படுகிறாள். அதனால் அவள் கன்னித்தெய்வமாக வணங்கப்படுகிறாள். அகால மரணமடைந்ததோர் ஆவியாக வந்து மரணத்துக்குக் காரணமானவர்களைப் பழி வாங்கியதாகப் பெரும்பாலான கதைப்பாடல்கள் உணர்த்துகின்றன.

## சிறுதெய்வங்களும் பெருந்தெய்வங்களும்

நாட்டுப்புறங்களில் சிறுதெய்வமாக வணங்கப்படும் முந்தைய மாந்தர்கள் தங்களின் மறைவுக்குப் பின்னர் பெருந்தெய்வங்களிடம் தனக்கு வேண்டும் வரங்களைக் கேட்பதாக நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் உணர்த்துகின்றன.

இவற்றைச் சிறுதெய்வப் பெருந்தெய்வ வழிபாட்டுக்கான இணைப்புக் கதைகளாக நாம் கருத்தில் கொள்ளலாம். ஏனெனில் பெருந்தெய்வ வழிபாட்டை மேற்கொள்வோருக்கும் சிறுதெய்வ வழிபாட்டுக்கான நம்பிக்கையைப் பதிப்பதே இதன் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

> அகால மரணச் சிறுதெய்வங்கள் பூவுலகில் கோயில்கொண்டு நிலையான வழிபாடு பெறச் சிவனிடம் வரம் கேட்கின்றன. பூவுலக மாந்தர்கள் பூப்பொரியும், பொங்கலும் படைத்துப் பூசை செய்யவும், மதுரை நகரில் கோயில் கொள்ளவும், வாவறை இயக்கி, பேச்சு முத்து இயக்கி, வரித்தலை இயக்கி என்றும் பெயர்களைப் பெறவும் தங்கள் பெயரைச் சொன்னவருக்குப் பிணிகள் அகலவும், குழந்தைப்பேறு கிடைக்கவும், திருவனந்தபுரம் முதல் திருச்செந்தூர்வரை புகழ் பரவவும், கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம்வரை பூசை பெறவும்,

சொரிமுத்தையன் கோயிலில் துணைத் தெய்வங்களாக வீற்றிருக்கவும் திருச்செந்தூர்க் கொடிமரத்தில் உறையவும், தேரடிமாடன் எனப் பெயர் பெறவும், சிறுதெய்வங்கள் சிவனிடம் வரங்கள் கேட்கின்றன (சந்திரசேகரன், 2003).

இவ்வாறு சிறுதெய்வங்கள் பெருந்தெய்வங்களிடம் தாங்கள் தெய்வங்களாகும்போது தனக்கு வேண்டிய வரங்களை வேண்டிப் பெற்றதாகக் கதைப்பாடல்கள் கூறுகின்றன. அவ்வரங்கள் பெரும்பாலும் சமூகநலன் கருதியே அமைந்திருப்பதையும் அறியலாம்.

சிறு தெய்வங்களான மாரியம்மன், முத்தாரம்மன், காளியம்மன், இசக்கியம்மன் போன்ற அம்மன் தெய்வங்களும், சுடலைமாட சுவாமி, செங்கிடாய்க்கார சுவாமி, கருப்ப சுவாமி, பைரவர் போன்ற ஆண் தெய்வங்களும் முதலில் கைலாயத்தில் சிவபெருமானின் வேள்வியில் தோன்றி, அவரிடம் வரம் வாங்கி, பின் தெக்கணாபூமியான தென்தமிழ்நாட்டிற்கு வந்து இறங்கி, அதன்பின் ஒவ்வொரு ஊராகச் சென்று இறுதியில் தங்களுக்குரிய ஊர்களில் கோயில் கொண்டு பூசை, பலிகள் பெற்று, கொடை விழாக்கள் பெற்றிருப்பதாக கதைப்பாடல் சுவடிகளிலிருந்து தெரியவருகின்றன (தசரதன்.1994).

**மரங்களும் சிறுதெய்வங்களும்**

சிறுதெய்வங்கள் பெரும்பாலும் இயற்கை அமைப்பு முறையிலேயே தோற்றம் பெற்றவை. பழங்காலத்து நடுகல் முறைக்கு மாற்றாக, உயிர்நீத்தவர்களின் நினைவாக மரங்களை வழிபடும் வழக்கம் தோன்றியது. நிலத்திற்குத் தகுந்த மரங்களும், அவற்றுக்கு ஏற்றவாறான பூக்களும் வழிபாட்டுக்கு உரியனவாகின. சங்க காலத்திலிருந்து தொடர்ந்த இவ்வழக்கம் தற்காலம் வரையிலும் தொடர்ந்து வருகிறது.

காடு, மலை, கடல், சுரம் முதலான பழைய கால நாகரிகப் பகுதிகளில்

வாழ்ந்த குடிகளிடம் தாங்கள் வாழ்ந்த இயற்கைப் பகுதிகளான மரங்கள், மலைச்சாரல்கள், மலை உச்சிகள், காடுகள், மலைச்சுனைகள், நீரூற்றுக்கள், நீர்நிலைகள், கடல்துறைகள், காட்டுப்பூக்கள், ஆள் அரவமற்ற இடங்கள் ஆகியவற்றில் கடவுள், தெய்வம், சூர், அணங்கு சூலி, முருகு ஆகியவை தங்கின. elkhod என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்துள்ளது என்பதை சங்கப்பாக்கள் வழியாகக் காண முடிகிறது. (ராஜ்கௌதமன். 2006)

இறந்தவர்களின் ஆவி, மரங்களில் வாழும் என்ற நம்பிக்கை சிந்துவெளி மக்களிடம் உண்டு. மரங்களுக்கும். சிறுதெய்வங்களுக்கும் உள்ள தொடர்பு குறித்துச் சங்க இலக்கியங்கள் விரிவாகக் கூறுகின்றன. சுடலைமாடன் மரத்தில் உறைந்தது குறித்தும் நீலியும் நீலனும் வேப்பமரத்தில் உறைந்தது பற்றியும் பூதங்கள் பேய்கள் மரத்தில் நிலைபெற்றது என்றும் கதைப்பாடல்களில் கூறப்படும் பதிவுகள் சிறு தெய்வங்களுக்கும் மரங்களுக்கும் உள்ள தொடர்பினைப் புலப்படுத்துகின்றன.

## பெண் தெய்வங்கள்

சிறுதெய்வ வழிபாட்டில் ஆண் தெய்வங்களுக்கு இணையாகவும் தனித்த சிறப்போடும் பெண் தெய்வங்களும் வழிபடப்படுகின்றன.

- கணவனை இழந்து உடன்கட்டை ஏறிய பத்தினிப் பெண்கள்.
- குலதெய்வத்தின் அருளைப் பெற்று அந்நிலையிலேயே அருள் மரணம் அடைந்த பெண்கள்.
- திருமணம் ஆகாது, பூப்படைந்து கன்னித்தன்மை கழியாத கன்னிப்பெண்கள்.
- எதிரிகளிடமிருந்து தம் கற்பினைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தற்கொலை செய்துகொண்ட பெண்கள்.

- பிரசவத்தின்போது இறந்த பெண்கள்

ஆகியோர் பத்தினித் தெய்வம், குலதெய்வம், கன்னித் தெய்வம். வீரப்பெண்தெய்வம் என்ற பெயர்களில் போற்றி வழங்கப்படுவதைச் சிறுதெய்வ வழிபாட்டு மரபுகளின் வாயிலாக அறிகிறோம்.

பெண்ணைத் தெய்வமாகவும் கன்னியாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப் பழங்கால மரபாக உள்ளது. எல்லோரையும் பெற்ற தாயாகவும், அழியாத கன்னியாகவும் கருதுவது தமிழகத்தில் மட்டுமல்லால் சுமேரியா, எகிப்து, சிரியா, இந்தியா ஆகிய நாடுகளின் பழைய நாகரிகங்களில் காணப்படும் என்பார் பி.எல்.சாமி. பயிர்த்தொழிலில் ஈடுபடத் தொடங்கிய காலத்தில் இனக்குழுக்கள் செழிப்பைப் பெண் தெய்வமாக வழிபடத் தொடங்கினார். இதனால் தாய்த் தெய்வழிபாடு தொடங்கியது என்பார் பே.ரா. வானமாமலை. தமிழகத்துத் தென்பகுதியில் உள்ள பெண் தெய்வங்களை ஆராய்ந்து பாரதி வழிபாடு, பத்ரகாளி வழிபாடு, முத்தாலம்மன் வழிபாடு, சக்தி வழிபாடு, பிற்காலப் பெண் தெய்வங்கள் எனஅவர்களை ஐந்து வகைப்படுத்தலாம் என்பார் பொன் கோவிந்தாமி (சந்திரசேகரன், 2003).

## வீரப்பெண்களுக்கான நடுகல்

நடுகல் வழிபாடு தொன்றுதெட்டு இருந்துவருகிறது என்பதைப் பண்டைய இலக்கியங்கள் வழி அறியலாம். பல்வேறு துறைகளில் வீரங்காட்டியோர்க்கு நடுகல் எடுத்து வழிபடும் சங்ககால வழக்கமே பிற்காலத்தில் கிராம தேவதை வழிபாடு என வளர்த்தது. கற்புடைய பெண்கள் கன்னியாகவோ, கர்ப்பிணியாகவோ கொலையுண்டு அல்லது தற்கொலை செய்து இறந்துபட அவர்கள் தெய்வமானார்கள். பாண்டி நாட்டில் மதுரை வீரன் வழிபாடு நடுகல் வழிபாட்டிலிருந்து வளர்ச்சியடைந்து என அறிஞர்களும் கருதுவர். 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகத் தமிழர்களிடத்துத் தோன்றிய வீர

வழிபாட்டு மரபே நடுகல் வழிபாடாகத் தொடர்ந்து, அதுவே இன்றைய சிறுதெய்வ வழிபாடாகவும் வளர்ந்துள்ளது.

ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலக்கி

ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்

கல்லே பரவி னல்லது

நெல் உகுத்துப் பரவுந் கடவரு மிலவே

என்னும் புறநானூற்றுப்பாடலில் பகை வரின் களிறெறிந்து வீழ்ந்த வீரனின் நடுகல் வணக்கம் குறிக்கப்பெறுகின்றது. அதுமட்டுமின்றி இத்தகைய வீரச்செயல் செய்து உயிரை நீத்த இவனைவிட வேறு கடவுளர் உளரோ என்றும் அப்பாடல் வினவுவது குறிக்கத்தக்கதாகும் (புலியூர்க்கேசிகன், 2010).

சிறுதெய்வ வழிபாட்டை தே.லூர்து அவர்கள் வளமை வழிபாடு எனக்கொள்ளலாம் என்கிறார். ஊரெல்லாம் கோயிலாக- நாடெல்லாம் கோயிலாகத் திகழும் தமிழகத்தில் பெண் தெய்வ உருவங்கட்குச் சிவப்புநிற ஆடைகளை அணிவிக்கின்றனர். இச்சிவப்பு நிற ஆடை வளமையையும் போராட்ட உணர்வினையும் குறிக்கும் விதத்தில் அமைந்ததாகும்.

## தொகுப்புரை

சிறுதெய்வ வழிபாட்டில் பெருந்தெய்வங்களுக்கு வழங்கப்படுகிற புராணங்களைப் போன்ற நம்புவதற்கரிய கதைகள் ஏதும் இல்லை. சிறு தெய்வங்களுக்கு இயல்பான வரலாறும் தோற்றமும் மரணமும் உண்டு. சிறுதெய்வத்தின் வெளிப்பாடாக அருளாடி ஆசி வழங்குதல் நிகழ்கிறது. ஆனால் பெருந்தெய்வ வழிபாட்டில் குறிக்கப் பெறும் சிவன், கிருட்டிணன், பிள்ளையார் போன்றோரும் பெண் கடவுள்களாகிய பார்வதி, லட்சுமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்கள் அருள் வந்து ஆடியதாக வரலாறு கிடையாது.

பெருந்தெய்வங்களுக்கு தலபுராணமும், புராண வரலாறுகளும் நிறைய

வேதக்கதைகளும் கூட உண்டு. ஆனால் மாற்றாகச் சிறு தெய்வங்களுக்குக் கிராமப்புறங்களில் வழங்கி வரும் செவிவழிக் கதைகளும், கதைப்பாடல்களும், சொலவடைகளும் மட்டுமே நிறைய உண்டு. இவற்றின் மூலமாக அக்காலச் சமுதாய வரலாறுகளையும் நாட்டார் வழக்குகளையும் தொன்மம் குறித்த செய்திகளையும் மிகுதியாக அறிய முடிவதோடு வழிபாட்டு முறைகளையும் தொடர முடிகிறது.

பெருந்தெய்வக் கோயில்கள் ஆகமம், சாத்திரம், சிற்ப சாத்திரம், சகுன வகைகள் முதலியவற்றைத் தெளிந்து பூசை முறைகளின் வழியும் வேள்விகளின் வழியும் எழுப்பப்படும்.

ஆனால் சிறுதெய்வக் கோயில்கள் இயற்கையின் வெளிப்பாடுகளாக விளங்கும் வடிவமற்ற கல், மரங்கள், மாடங்கள், சதுரமான பீடங்கள், மண் உருவங்கள், சாத்திரமற்ற கல்சிற்பங்கள், செம்பு, வெண்கலப் படிவங்களால் செய்யப்பட்டு ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் எளிமையாக ஊர்ப்பொதுமந்தையில் நிறுவப்படும்.

இவ்வாறு சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி, படிநிலைகள் முதலியவற்றோடு வழிபாட்டு முறைகளையும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

# ஐயனார் மரபில் சொட்டக்கார சுவாமி வழிபாடு

சிறு தெய்வ வழிபாடுகளில் குறிப்பிடத்தக்கதாக விளங்குவது ஐயனார் வழிபாடாகும். ஏனைய தெய்வங்களுக்கு மாற்றாக ஐயனார் வழிபாடு தமிழ் மரபின் தொடக்கத்திலிருந்தே நிகழ்ந்து வருகிறது என்பதைச் சான்றுகளின் மூலமாக அறியலாம். ஐயனார் வழிபாடு குலதெய்வ வழிபாடாகக் குறிப்பிடப்பட்ட போதும், ஊர் வழிபாடாகவும் சமுதாய வழிபாடாகவும் பல இடங்களில் மேற்கொள்ளப்படுகிறது. வீரத் தன்மையை வெளிப்படுத்திய பலரும் ஐயனார் என்னும் பெயரிலேயே தெய்வமாக வணங்கப்படுகிறார்கள். அவ்வகையிலேயே சொட்டக்கார சாமியும் ஐயனார் என்னும் தெய்வப் பெயரைப் பெற்று வழிபாட்டிற்கு உரியவர் ஆகிறார்.

ஐயனாரைக் குறித்த பெயர்களும் கதைகளும் பலவாகும். அவை ஊருக்கு ஒன்றாகவும் காலத்திற்கு ஒன்றாகவும் பல நிலைகளில் விளங்குகின்றன. மேலும் பல ஐயனார் கதைகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுப் புதிய கதைகளும் தோன்றுவதற்கு வழிவகுக்கின்றன.

அய்யன், (ஐயன்) அய்யனார், (ஐயனார்) சாஸ்தா என்று இத்தெய்வத்திற்குப் பெயர்கள் பொதுவாக அமைகின்றன. இதில் ஐயனார். ஐயன் என்பது தமிழகத்திலும் சாஸ்தா என்பது கேரள மாநிலத்திலும் கருநாடகத்தில் ஐயப்ப தேவ என்றும் வழங்கப்படுகின்றன.

ஐயன் என்ற பெயரும் ஐயர் என்ற பெயரும் ஒருமை. பன்மை மயக்கம் இன்றி ஆண்பாலுக்கு உரியதாக இலக்கியங்களில் சுட்டப் பெற்றுள்ளன. ஐயன் என்ற பெயருக்கு அரசன், அருகன், அழகுடையவன், கடவுள், சாத்தன், தந்தை, மூத்தோன் என்று சிறப்புப் பெயர் அகராதி பல பொருள்களைத் தருகிறது (இராமசாமி, 1970).

பொதுவாக, ஐயன் என்னும் பெயரோடு உயர்வு நோக்கில் ஆர் என்னும் விகுதி சேர்ந்து ஐயனார் என்று வழங்கப்படுதல் இயல்பு.

தமிழில் மிகப்பழமையான நிகண்டுகளான திவாகர நிகண்டும், பிங்கல நிகண்டும் ஐயனார் என்னும் பெயருக்குப் பல பொருள்களைத் தருகின்றன.

திவாகர நிகண்டு, கோழிக் கொடியோன், சாதவாகனன், காரி, சாத்தன், ஐயன், பூரணை கேள்வன், புட்கலை மணாளன், செண்டாயுதன், அரிகரபுத்திரன் என்ற பொருள் தரும் பெயர்களை வழங்குகின்றது.

பிங்கல நிகண்டு. சாதவாகனன், கோழிக் கொடியோன், காரி, வெள்ளை யானை ஊர்தி, செண்டாயுதன், கடனிற வண்ணன், பூரணைகேள்வன், புட்கலை மணாளன், ஆரியன், அறத்தைக் காப்போன், யோகி, அரிகரபுத்திரன் என்கிற பெயர்களைக் குறிப்பிடுகிறது (சண்முகம்பிள்ளை, 1990).

இப்பெயர்கள் ஐயனாரைப் பல தெய்வங்களோடு ஒத்துக்காண உதவுகிறது. இப்பெயர்களில் சங்ககாலம் தொடங்கிக் காலந்தோறும் புதுமை ஏற்பட்டு வழக்கில் இருந்து வந்திருக்கின்றன என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

இப்பெயர்களில் காரி என்னும் பெயரும் சாத்தன் என்னும் பெயரும் சங்ககாலம் தொட்டு மக்களால் பயன்படுத்தப் பெற்றவையாகும். பல சங்கப் புலவர்களின் பெயர்கள் இவ்வாறு அமைந்திருப்பதைக் கொண்டு இதனை உறுதி செய்யலாம்.

சங்க இலக்கியப் பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர்களில் காணப்படும் சாத்தனார் என்னும் பெயர்த் தொடர்பினைப் பின்வரும் அட்டவணை 1-இல் பட்டியலிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 1. சாத்தனார் என்னும் பெயர்த் தொடர்பு**

| **புலவர்கள்** | **இலக்கியங்கள், பாடல் எண்கள்** |
|---|---|
| ஆடுதுறை மாசாத்தனார் | புறம் 229 |
| ஆலம்பேரி சாத்தனார் | அகம் 47, 81, 143, நற் 152, 253 |
| ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச்சாத்தனார் | அகம் 13, புறம் 151, 164, 165 |
| உறையூர்க் கதுவாய் சாத்தனார் | நற் 370 |
| உறையூர் முதுகண்ணன் சாத்தனார் | புறம் 27,30,325 |
| கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் | புறம் 168 |
| கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் | புறம் 59 |
| பெருஞ்சாத்தனார் | புறம் 125 |
| வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் | புறம் 198 |
| ஒக்கூர் மாசாத்தனார் (மாசாத்தியார்) | அகம் 14, புறம் 245 |

போன்ற பெயர்களைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

இப்பெயர்களில் காரி என்பது கரிய நிறம் உடையதாகத் திருமாலுக்குப் பொருத்தமான பெயராக அமைகிறது. கோழிக்கொடியோன் என்பது முருகப்பெருமானைக் குறிப்பதோடு சிவபெருமானின் மகனாகவும் சுட்டுகிறது/ சாதவாகனன் என்பது அசுவமேத யாகத்தில் தோன்றியவன் என்றும், அரிகரன், அருகன், அரிகரபுத்திரன் முதலிய பெயர்கள் சமண பௌத்த சமயங்கள் தொடர்புடையவனவாகவும் விளங்குகின்றன. ஆனால், முற்காலங்களில் வழங்கப்பட்ட இந்த ஐயனாருக்கு உரிய பெயர்கள் பிற்காலங்களில் வழங்கப்படும் சிறு தெய்வ வழிபாடுகளில் இருந்து வேறுபட்டவை.

## ஐயனார் வரலாறு

பெருந்தெய்வ வழிபாட்டில் இருந்து சிறுதெய்வ வழிபாடு மாறுபட்ட முறைமைகளைக் கொண்டுள்ளது என்றாலும், காலப்போக்கில் அவை இரண்டும் இயைபு கொண்டன என்பதையும் சான்றுகளின் வழியாக அறியலாம். குறிப்பாக, ஐயனார் வழிபாட்டில் அத்தகைய இயைபு வெளிப்படவே தெரிகிறது. பெருந்தெய்வங்களாகிய சிவனுக்கும் திருமாலுக்கும் இடையில் ஏற்பட்ட பூசலைத் தவிர்ப்பதற்காக மேற்கொண்ட சமய நல்லிணக்க முயற்சியின் வாயிலாகத் தோன்றியவரே ஐயனார் என்னும் கதைப்போக்கு குறிப்பிடத் தகுந்ததாகும்.

> புராணங்களில், திருமால் மோகினி வடிவெடுத்தபோது அம்மோகினியுடன் சிவபெருமான் சேர்ந்ததால் பிறந்தவரே ஐயனார் எனும் ஐயப்பன் எனக் கூறப்பட்டுள்ளது. நம் இந்தியத் திருநாட்டில் சைவ-வைணவக் கோட்பாடுகளின் இணக்கத்தின் காரணமாகவே ஐயனார் வழிபாடு ஏற்பட்டது எனக் கூறுவர். தமிழ் நாட்டில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் முறையே சைவத்தையும் வைணவத்தையும் வளர்த்தனர். அவர்களுக்குப்பின் ஆங்காங்கே சிறுசிறு பூசல்கள் சைவர்களுக்கும் வைணவர்களுக்குமிடையே ஏற்பட்டு, அதற்கு முடிவு கட்டும் நோக்கத்தில் சைவ வைணவ

ஒருங்கிணைப்பாளர்களால் வணங்கப் பெற்றவரே ஐயனார் என்பர். 'அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயில் மண்ணு' என்னும் சொல்வழக்கு சைவ-வைணவ ஒருங்கிணைப்பாளர்களால் உருவாக்கப் பெற்ற தொடராக இருக்கலாம் எனக் கருதுவது தவறாகாது

என்னும் கருத்து சைவ வைணவ இணைப்பாகத் தோன்றியவராக ஐயனாரை அடையாளப்படுத்துகிறது (தசரதன், 1994).

பெருந்தெய்வப் புராணக்கதையிலிருந்து கிளைத்தவராக ஐயனார் கதை மக்களிடம் பரவியபோதும் ஐயனார் வழிபாடு பெருந்தெய்வ வழிபாட்டோடு இணைந்து இயங்கவில்லை என்பதையும் குறிப்பாக நகர்ப்புறப் பெருந்தெய்வ வழிபாட்டோடு ஒத்திருக்கவில்லை என்பதையும் உணரலாம். ஐயனார் வழிபாடு கிராமப்புற மக்களின் நம்பிக்கையின்பால் ஏற்பட்ட கிராமக் காவல் தெய்வ வழிபாடாகவே நிலைநிறுத்தப்பட்டதையும் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

தமிழ்நாட்டின் ஊர்ப்புறங்களில் காவல் தெய்வமாக ஐயனார் கோயில்களும் சாஸ்தா கோயில்களும் மிகுந்து காணப்படுகின்றன. இதிலிருந்து ஐயனார் என்னும் சாஸ்தா வழிபாட்டை நாட்டுப்புறத் தமிழர் மேற்கொண்டு வருகின்றனர் என அறியலாம் (தசரதன், 1994).

## ஐயனாருக்கான தொழில்

வழிபாட்டு மரபில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரிய தனித்த தொழில்கள் உண்டு. பெருந்தெய்வங்கள் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் செய்வதைப் போல, சிறு தெய்வ வழிபாட்டிலும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் தொழில்கள் வரையறுக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வகையில் ஐயனாருக்கு உரிய தொழிலாக ஊர்க்காவல் மேற்கொள்வதும் சமுதாயத்தில் அறத்தினை நிலைநாட்டுவதும் ஆகும். சங்க இலக்கியமாகிய புறநானூறு அறப்பெயர்ச் சாத்தன் என்ற பெயரை ஐயனாருக்குக்

குறிப்பிடுகிறது. இதன் மூலமாகவும் நிகண்டுகளின் வழியாகவும் ஐயனாருக்கு அறத்தைக் காக்கும் பொறுப்பு வழங்கப்பட்டதை அறியலாம். இவ்வழக்கமே, நேர்மையின் பொருட்டும் மானத்தை மதிக்கும் காரணத்தினாலும் தன் உயிரை நீத்த வீரர்களுக்கும் தெய்வத் தொழிலாகப் பிற்காலங்களில் வழங்கப்பட்டிருப்பதைச் சொட்டக்கார சுவாமியின் வரலாற்றின் வழி அறிந்து கொள்கிறோம்.

ஐயனார், சமூக ஒழுங்குகள் ஆகிய திருட்டு. கொள்ளை, வழிப்பறி, பாலியல் வன்கொடுமைகள், பிறர்மனை புகுதல், வஞ்சகம் செய்தல், சூதாடுதல், தீய எண்ணம் கொள்ளுதல் முதலியவற்றைக் கடுமையாகக் கண்டித்தும், தண்டித்தும் சமுதாயத்தைக் காப்பவராகக் கிராம மக்களால் வழிபடப்படுகிறார். சொட்டக்கார ஐயனார் அத்தகைய நோக்கிலேயே காவல் தெய்வமாக வழிபடப்பட்டு வருகிறார்.

அரசனால் நீதி கிடைக்காத வேளையிலும். அதிகார வர்க்கத்தை எதிர்த்துப் போராடும் சூழலிலும், பாமர மக்கள் தங்களின் காவல் தெய்வமாக ஐயனாரைப் பெரிதும் மதித்துப் போற்றுகின்றனர். வீரத்தின் காரணமாகவும். மானத்தின் பொருட்டும் உயிர்துறந்த அப்பெரு மாந்தர்கள் ஏழைகளுக்கு இரங்கி நீதி வழங்குவார்கள் என்பதைச் செவிவழிக் கதைகள் உறுதிப்படுத்துகின்றன.

## இலக்கியங்களில் ஐயனார்

பக்தி இலக்கியங்களில் சிவனுக்கும் திருமாலான மோகினிக்கும் பிறந்ததாக ஐயனார் கூறப்படுகிறார் என்பது நாயன்மார், ஆழ்வார்கள் பாடல்களிலிருந்து தெரிகின்றது.

> கந்தபுராணத்தில், அசுரகாண்டத்தில், மகா சாத்தாப் படலம் எனும் பகுதியில், ஐயனாரின் அவதாரம் கூறப்படுகிறது. அமுதம் பங்கிடுதல், மோகினியைச் சிவன் சேருதல், ஐயனார் பிறத்தல், சிவனிடம் வளர்தல்,

சூரபதுமாதியர்களால் இந்திரனுக்கும் இந்திராணிக்கும் துன்பம் நேரும்பொழுது இந்திராணியை மாகாளனை அனுப்பிக் காத்தல் முதலிய கதைகள் இடம்பெற்றுள்ளன (தசரதன், 1994).

சிலப்பதிகாரத்தில் பாசண்டச் சாத்தன். சதுக்கபூதம் என்னும் இரு தெய்வங்களைப் பற்றிய குறிப்பு ஐயனார் வழிபாட்டோடு தொடர்புடையதாகும். மாலதியின் துயரத்தைத் தீர்க்கப் பாசண்டச் சாத்தன் தானே குழந்தையாகி அவளுக்கு அருளியதை அறியலாம்.

சிலப்பதிகாரம் சுட்டும் சதுக்கபூதம் என்பது பூம்புகார் நகரச் சதுக்கத்தில் இருந்த காவல் தெய்வம் ஆகும், இத்தெய்வம், இளம்பெண்களைப் பாதுகாப்பதோடு பொய் சொல்பவர்களைக் கொன்று தின்பதும், அத்தகைய தீயவர்களைக் கம்பத்தில் கட்டி வைத்து அடிப்பதும் ஆகிய தண்டனைகளையும் வழங்கும் என்பதை அறிகிறோம்.

அறம் பிறழ்ந்து நடப்பவர், பொய்த் துறவு பூண்டவர், தீய எண்ணமும் செயலும் கொண்டோர் ஆகியோர்களைக் கொன்றொழித்து நகரையும், மக்களையும் காக்கும் சக்தி படைத்ததாகச் சதுக்கபூதம் நகரக் காவல் தெய்வமாகவே விளங்கியதை அறியலாம். சதுக்கம் என்பது நகரின் நான்கு வீதிகள் சந்திக்கும் பகுதியைக் குறிப்பதாகும். இப்பூதம் சதுக்கத்தில் இருந்து பூம்புகார் நகரைக் காப்பதால் இப்பெயர் பெற்றது. பெண்களைப் பற்றி புறங்கூறுபவர்களை இப்பூதம் கருணையின்றிக் கழுத்தைத் திருகிக் கொன்றுவிடும் என்பதை,

சுழல வந்து தொழத்துயர் நீங்கும்

நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றமும்,

தவம்மறைந்து ஒழுகும் தன்மை இலாளர்

அவம்மறைந்து ஒழுகும் அலவல் பெண்டிர்

அறைபோகு அமைச்சர் பிறர்மனை நயப்போர்

பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளர்என்

கைக்கொள் பாசத்துக் கைப்படு வோர்எனக்

காதம் நான்கும் கடுங்குரல் எடுப்பிப்

பூதம் புடைத்துஉணும் பூத சதுக்கமும்,

அரைசுகோல் கோடினும் அறம்கூறு அவையத்து

உரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்

நாவொடு நவிலாது நவைநீர் உகுத்துப்

பாவைநின்று அழூஉம் பாவை மன்றமும்,

மெய்வகை உணர்ந்த விழுமியோர் ஏத்தும்

ஐவகை மன்றத்தும் அரும்பலி உறீஇ

என்னும் சிலப்பதிகாரப் பதிவின் மூலமாகத் தெளிவாக உணரலாம் (இளங்கோவடிகள்,1972).

தென்னிந்தியப் பகுதிகளில் ஐயனார் தெய்வமாகக் காணப்படுவது கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டுகளுக்கிடையில் என்றபோதிலும் இதன் செல்வாக்கு கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டுகளில் உச்சநிலையை அடைந்திருக்கிறது

என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும் (Fred Clothey, 2007). இதனை மெய்ப்பிக்கும் விதமாக கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருநாவுக்கரசு நாயனார்,

பார்த்தனுக் கருளும் வைத்தார்

பாம்பரை யாட வைத்தார்

சாத்தனை மகனா வைத்தார்

சாமுண்டி சாம வேதங்

கூத்தொடும் பாட வைத்தார்

கோளரா மதியம் நல்ல

தீர்த்தமுஞ் சடைமேல் வைத்தார்

திருப்பயற் றூர னாரே

என்று தம்முடைய திருப்பயற்றூர்த் திருப்பதிகத்தில் ஐயனாரைச்சிவபெருமான் தன் மகனாகவே வைத்துக்கொண்டார் என்னும் பொருள்படும்படி பாடுகிறார் (திருநாவுக்கரசர், 2008).

பல்லவர் காலத்திலும் முற்காலச் சோழர்கள் காலத்திலும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த ஐயனார் வழிபாடு, பிற்கால சோழர்கள் காலத்தில் மாற்றம் பெற்றது. ஐயனார் காவல் தெய்வமாகவும் பரிவார தெய்வமாகவும் தோற்றம் பெற்றது இக்காலத்திலே என்பது ஆய்வாளர்கள் கருத்து.

## பரிவாரத் தெய்வமான ஐயனார்

முதன்மைத் தெய்வமாக விளங்கிய ஐயனார் காலப்போக்கில் பரிவாரத் தெய்வமாகவும் தோற்றம் பெற்று இருக்கிறார் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கேரளம், திருச்சூர், வடக்கு நாதர் கோயிலில் நான்கு பக்கங்களிலும் கோபுரங்களைக் கொண்ட வெளிப்புறப் பிரகாரங்கள் உள்ளன. இந்த வெளிப்புற முற்றத்தில் வடகிழக்கு மூலையில் சாஸ்தாவிற்கெனத் துணைக் கருவறை அமைத்துள்ளனர். திருவனந்தபுரத்தில் உள்ள பத்மநாபசுவாமி கோயிலில் (அனந்த சயனம்) துணை தெய்வங்களாக வெளிப்புறத்தில் சாஸ்தா, நரசிம்மன் முதலிய தெய்வங்களை

வைத்துள்ளனர்

என்று ஆர். சீனிவாசன் குறிப்பிடுகிறார்(சீனிவாசன், 2004).

## ஐயனாரின் வாகனமும் ஆயுதமும்

தமிழில் ஐயனாரைச் சமணத் தெய்வமாகவும், பௌத்த தெய்வமாகவும் காட்டும் இடங்களும் காணப்படுவதாகச் சிலர் குறிப்பிடுகின்றனர். மேலும் இந்திரனின் யானை வழிபாட்டிலிருந்து தொடர்புபடுத்தி, ஐயனாரின் யானையைக் குறிப்பிடுவர். குதிரைவாகனம் அவர்க்குரிய சிறப்பு அம்சமாதலால் சாதவாகனன் என ஐயனாரைக் குறிப்பிட்டு, சாதவாகனர்கள் வரலாற்றோடு ஐயனார் வரலாற்றைச் சிலர் கூறுகின்றனர்.

ஐயனாருக்கு உரிய பெயர்கள் காலந்தோறும் மாறி வந்ததைப் போலவே ஐயனாரின் வாகனம், ஆயுதம் குறித்தும் காலந்தோறும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் அறிய முடிகிறது. பௌத்தர் வழிபட்ட ஐயனார், குதிரை வாகனத்தைக் கொண்டவர் எனப் பி.எல். சாமியும், தட்சிணாமூர்த்தியும் கருதுகின்றனர்.

> ஐயனார் வழிபாட்டில் மட்டுமே குதிரையைப் புனிதமாக எண்ணி, குதிரை எடுப்பு (புரவியெடுப்பு) என்ற சடங்கினைச் செய்கின்றனர். ஐயனார் சன்னிதானத்தின் முன்பு சிமெண்டில் ஆன நிலையான சேமக் குதிரைகளையும் நேர்த்திக்கடனாக ஆண்டுதோறும் மண்குதிரைகளையும் செய்து வைப்பது வழிபாட்டு முறையாகும். பண்டைக்காலத்தில் போர் புரிவதற்கும், வாணிபம் செய்வதற்கும் குதிரை பயன்பட்டுள்ளது. இதனால் குதிரைகளை வழிபடும் வழக்கம் பரவி இருக்கலாம். குதிரைப் படையின் பிரதிநிதியாக ஐயனார் கருதப்பட்டு இருக்கலாம்

என்னும் கருத்தும் சொட்டக்கார ஐயனார் வரலாற்றோடு பொருத்தமுடையது ஆகிறது (தட்சிணாமூர்த்தி, 2019).

சொட்டக்கார ஐயனாருக்குக் குதிரை மிகவும் பிடித்த வாகனமாகவும், அவர் குதிரைப் படைத் தலைவராகவும் விளங்கியது இங்கு இணைத்து எண்ணத் தக்கதாகும்.

சாத்தனின் பழைய உருவம் குதிரை வீரனின் உருவமாகிய சாதவாகனனே என்பதில் ஐயமில்லை என்றும் சாத்தன் கையிலிருந்த குதிரை ஓட்டும் சாட்டையே பிற்காலத்தில் செண்டாக ஆகியது

என்றும் பி.எல். சாமி கருதுகிறார் (சாமி,1978). ஆனால், இதற்கு மாற்றாக

ஐயனார் கையிலிருந்த செண்டு என்னும் வினாக்குறி போல் அமைந்த கருவியை இப்போது சாட்டையாக மாற்றி விட்டனர்

எனத் தொ. பரமசிவன் கருதுகிறார் (பரமசிவம், 2016). இக்கருத்துக்களின் மூலமாக இருவரும் வேறுபட்டாலும் செண்டும் சாட்டையும் ஐயனாருக்கு உரியது என்பது உறுதியாகிறது. ஐயனார் காவல் தெய்வமாகக் கருதப்படுவதால் கையில் ஆயுதம் கொண்டிருப்பது இயல்பு. ஆகவே, ஐயனாருக்குரிய ஆயுதமாகச் செண்டு அல்லது சாட்டை குறிப்பிடப்படுகிறது.

சொட்டக்கார ஐயனாருக்குக் கையில் ஆயுதமாக விளங்குவது சாட்டையே ஆகும். இதற்குச் சொடுக்கு என்றும் சவுக்கு என்றும் வட்டார வழக்குகளில் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன.

சொட்டக்காரர் என்பதற்குப் பொருளாக சொட்ட என்றால் தெலுங்கில் சவுக்கு என்றும், குர்ரம் என்றால் குதிரை என்றும் பொருள்கொண்டு சொட்டக்குர்ரர் என்பதே தமிழில் சொட்டக்காரர் என மருவியதாக ஆய்வாளர் கூறுவர்.

## ஐயனாரும் யானையும்

ஐயனாருக்குரிய வாகனமாகக் குதிரையே முதன்மையாகச் சுட்டப்

பெற்றாலும் யானையும் அவருக்குரிய வாகனமாகப் பல இடங்களில் மதிப்புப் பெறுகிறது. இதற்குக் காரணம் சமயம் சார்ந்த வழிபாட்டு முறையே என்பது ஆய்வாளர்கள் கருத்து. சமண சமயத்தில் ஐயனாரின் வாகனம் குதிரையாகவும், பௌத்த சமயத்து ஐயனார் வாகனம் யானையாகவும் விளங்கியிருக்கிறது. இதனை,

> திருஞான சம்பந்தரிடம் அனல் வாதம், புனல் வாதங்களில் தோற்ற சமணர்கள் மதுரையில் தொடர்ந்து தங்கியிருக்க முடியாத சூழலில், மதுரையை விட்டுக் கடந்து மதுரைக்கு வடபகுதியில் மலைப்பகுதிகளில் குடியேறி இருக்கின்றனர். இவர்களுக்குப் பாண்டியன் மாறன் சடையன் உதவி செய்தான்

என்று கமால் குறிப்பிடுகிறார் (கமால், 1984). இந்தச் சமணர்கள் வணங்கிய ஐயனார், யானையை வாகனமாகக் கொண்டவர் என்றும், பௌத்த ஐயனார் குதிரையை வாகனமாகக் கொண்டவர் என்றும் உணரலாம்.

பின்னர் இரண்டும் கலந்து ஐயனார் வழிபாட்டில் தொடர்ந்திருக்கிறது. அதனாலேயே ஐயனார், யானை வாகனத்தின்மீது வரும்போது யானைக்குரிய செலுத்து கருவியாகிய அங்குசம் இல்லாது, குதிரையைச் செலுத்தப் பயன்படும் சாட்டையையே பயன்படுத்துவார் என்பதன் மூலம் தெளிவாக உணரலாம்.

சொட்டக்கார ஐயனார் குதிரை வாகனத்தின்மீது வரும்போதும் இதே நிலை என்பதனையும் இதனோடு ஒத்துக் காணலாம். ஆனபோதும், முந்தைய ஐயனார் வழிபாட்டு முறைகள் சார்ந்த வழக்கங்கள் பிற்கால ஐயனார் வழிபாடு முறைகளோடு ஒத்திருப்பதையும் உணரலாம்.

## ஐயனாரின் உருவ அமைப்பும் சொட்டக்கார ஐயனாரும்

சங்க இலக்கிய காலம் தொடங்கி ஐயனாருக்கான உருவ அமைப்புகள் தெளிவாகப் புலப்படவில்லை. என்றபோதும் காலந்தோறும் ஐயனாருக்குரிய உருவ அமைப்புகள் பெயருக்கேற்பவும், சூழலுக்கு ஏற்பவும் மாறியே

வந்துள்ளன என்பது நிலையான கருத்தாகும்.

> சில ஊர்ப்புறங்களில் ஐயனாரின் தோற்றத்திலும் அவரின் பரிவாரங்களின் தோற்றத்திலும் மாறுபாடு காணப்படுகின்றது. தமிழ்நாட்டின் தென்பகுதி ஊர்ப்புறங்களில் சிறிய சிறிய உருவ அமைப்புடனும், அதற்கு வடபால் பெரிய பெரிய மண் உருவங்களிலும் ஐயனார் வழிபடப்பெற்று வருகின்றார். இவ்வூர்களிலெல்லாம் ஐயனார், பூரணை-புட்கலை என்னும் தம் மனைவியரோடும், பரிவார தெய்வங்களோடும் உள்ளார். இவ்வாறு தமிழ்நாட்டில் அவர் சிறுதெய்வமாக வழிபடப்பெறுகிறார் (தசரதன், 1994).

ஐயனார் உக்கிர தெய்வமாக வழிபடப்படும் இடங்களில் வாள், வேல், அரிவாள், கட்டாரி, குண்டாந்தடி ஆகிய ஆயுதங்களைக் கொண்டவராகவும் கம்பீர அதிபயங்கர உருவம் உடையவராகவும் விளங்குவதைக் காணலாம். ஆனால், மாறாக நீதி வழங்கும் தேவனாகத் திகழும் ஐயனார் யோக நிலையில் அமர்ந்தவராக விளங்குவதையும் காணமுடிகிறது.

ஐயனாருக்குரிய உருவ அமைப்பைப் பற்றி சுப்ரபேதாகமம் என்னும் நூலே முதன்முதலாகக் குறிப்பிடுகிறது. அதில்,

> ஐயனார், நான்கு கைகள் இன்றி இரண்டு கைகளுடன் இருக்கின்றார். பீடத்தின்மீது அமர்ந்த நிலையில் இடது காலைத் தொங்கவிட்டு வலது காலைக் குத்திட்டு வைத்து, வலக்கால் மீது வலக்கை மூட்டுப் படும்படி நீட்டி வைத்துக் கொண்டு இடக் கையில் சாட்டையைப் பிடித்தவாறு இருக்கின்றார்

என்று அறிய முடிகிறது (Gopinth Roa, 1985). ஆனபோதும் இது பொதுவிதியே என்பதும் வட்டார வழக்குக்கு ஏற்றவாறு ஐயனார் உருவ அமைப்புகள் திகழ்கின்றன என்பதும் நிலையான விதியாகும்.

ஐயனார், தலையில் (ஜடாமுடி) சடைமுடி உடன் கூடிய கொண்டையம்

தோள்பட்டை வரையிலும் தொங்குகிற மாதிரி அமைந்த இருபெரும் காதுகளும் அவற்றில் குண்டலங்களும் விளங்கும்படி வீற்றிருப்பார். அதுபோலவே அவரது கழுத்தில் கண்டச்சரடும் புஜங்களில் கடகமும் கரங்களில் காப்பும் கால்களில் குழல்களும் திகழும். (முத்து எத்திராசன், தடயம், 2006)

ஆனால். மற்ற ஐயனார் உருவத்திற்கு மாறாகச் சொட்டக்கார ஐயனார் இயல்பான மானுட உருவிலேயே தோற்றம் தருகிறார். ஐயனார் உடன் விளங்கும் பூரணை, புட்கலை முதலிய இரு தேவியர் வழக்கு சொட்டக்கார ஐயனாருக்குப் பொருந்துவதாக இல்லை. மேலும், சொட்டக்கார ஐயனார் பிரம்மச்சரிய ஒழுக்கத்தை மேற்கொண்டவர் என்பதும் கதை வழியே பெறப்படுகிறது.

## ஐயனார் வழிபாட்டில் பலியிடுதல்

சிறுதெய்வ வழிபாட்டு மரபில் ஐயனார் இரத்தப் பலி இல்லாத தெய்வமாக விளங்குவதையும் காணமுடிகிறது. சொட்டக்கார ஐயனாரும் பலியை விரும்புவதில்லை. ஆனால், மக்கள் தங்கள் வேண்டுதல்கள் நிறைவேறும் பொருட்டு ஐயனாருக்கு ஆட்டுக்கடாவினை நேர்த்திக்கடனாகச் செலுத்துவர். இந்த ஆடு சித்திரைக் குட்டி என்னும் பெயரில் பலியிடுவதற்கு வழங்கப்பட்டதே ஆகும். ஆனால், அந்தப் பலி ஐயனார் கோயிலின் முன்பாக நடைபெறாது. மாறாக ஐயனாருக்குத் துணையாக உள்ள கருப்பசாமி சன்னதியில் அது நடந்தேறும்,

அவ்வாறு. சிவன். திருமால், சக்தி போன்ற பெரும் தெய்வ வழிபாட்டு மரபில் தனித்துவமாக வணங்கப்படாததைப் போல ஐயனார் வழிபாடும் திகழ்கிறது. ஐயனார் வழிபாடுகள் வீட்டிற்கு உரியதாக அமைவதில்லை. இந்த வழக்கம் சொட்டக்கார ஐயனாருக்கும் பொருந்துவதாகிறது.

## சாமியாடல் என்னும் அருளாடல்

ஐயனார் வழிபாட்டில் மிகவும் குறிக்கத் தகுந்தது அருளாடல் என்னும் சாமி ஆடல் ஆகும். ஐயனார் அருள் இறங்கிய பூசாரி மக்களின் குறை தீர்க்கும் முகமாக அவர்களுடன் உரையாடுவது என்னும் நிகழ்ச்சியாகும். இத்தகைய அருள் வந்து ஆடுபவரை மருளாடி, மருளாளி, கோமறத்தாடி, சாமியாடி என்ற பெயர்களால் மக்கள் அழைப்பர். பிற தெய்வ வழிபாடுகளில் அத்தெய்வங்கள் தான் விரும்பும் எவர்மீதும் அருள் இறங்கி ஆடும் தன்மையைக் கொண்டிருக்கும். ஆனால், ஐயனார் வழிபாட்டில் குறிப்பிட்ட ஒருவரைத் தவிர மற்ற எவர் மீதும் அருள் கொள்வதில்லை என்பது எண்ணத் தகுந்ததாகும். இந்த மரபு சொட்டக்கார ஐயனார் வழிபாட்டிலும் பொருந்தி இருப்பது கருதத்தக்கது.

## ஐயனாரும் புரவியெடுப்புத் திருவிழாவும்

ஐயனாருக்கு மிகவும் விருப்பமான வாகனமாகிய குதிரைகளைக் களிமண்ணால் பொம்மைகளாகச் செய்து சிறிய, பெரிய அளவுகளில் வைத்து வழிபட்டுக் கோயிலில் கொண்டு செலுத்தும் விழாவுக்குப் புரவி எடுப்பு அல்லது குதிரை எடுப்புத் திருவிழா என்று பெயர்.

இவ்விழா ஆண்டுக்கு ஒருமுறையாகவோ அல்லது இரண்டு, மூன்று முதல் பத்து ஆண்டுகளுக்குள் ஒரு முறையாகவோ விமரிசையாக நடைபெறும். சொட்டக்கார ஐயனாருக்குப் பெரும்பாலும் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறையே இவ்விழா நடைபெறுகிறது. இந்த நீண்ட கால இடைவெளியில் வேறு வழிபாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுள் ஒன்று ஆசாரப் போஜனம் என்பதாகும். இதற்குப் பிராமணப் போஜனம், பிராமண வழிபாடு என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இந்த வழிபாடு ஐயனாருக்கு மிகவும் சக்தியை வழங்கக் கூடிய வழிபாடாகக் கருதி மேற்கொள்ளப்படுகிறது. இவ்வழிபாடு நிகழவில்லை என்றால் ஐயனாருக்கு வலிமை குறைந்துவிடும் என்கிற நம்பிக்கையும் கிராமப்புறங்களில் உண்டு.

சொட்டக்கார ஐயனாருக்கு இந்தப் பிராமண வழிபாடு இல்லை. பொதுவாகப் பிராமண வழிபாடு என்பது பிராமணர்களால் செய்யப்படும் பூசையைக் குறிக்கும். பெரும்பாலும் வேளார் எனப்படும் மண் பொம்மைகள் செய்யும் கலைஞர்களே ஐயனாருக்குப் பூசைகள் செய்வர். மாறாக ஆசாரப் போஜனத்தன்று பிராமணர்கள் இப்பூசையை மேற்கொள்வர். சொட்டக்கார ஐயனாருக்கு பிராமணப் பூசை அல்லாது வேளார் பூசையே நிகழ்கிறது.

## பாண்டிய நாட்டில் ஐயனார் வழிபாடு

பொதுவான ஐயனார் குறித்த கதைகளுக்கு மாற்றாகப் பாண்டிய நாட்டில் பின்பற்றப்பெறும் ஐயனாருக்குத் தனித்த கதை வழங்கப்படுகிறது. இந்த ஐயனார் புராணக்கதையோடு தொடர்புடையவராகத் திகழ்ந்தபோதும், ஏனைய புராணக் கதைகளின் மாற்றாக இவர் விளங்குகிறார்.

> மூவேந்தர்கள் காலத்தில், மாசாத்தா என்ற ஐயனாரும், செண்டாயுதமேந்திய ஐயனாரும் இன்னும் பல ஐயனார் கோயில்களும் இருந்தன என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் மூலம் அறிகின்றோம். 'ஐயன் நாடு' என்ற பெயரில் 'தனி நாடு' ஒன்று தமிழகத்தின் தென் கீழைக் கடலோரப் பகுதியிலிருந்ததாகச் செவிவழிச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஐயனார்க்கும் தமிழகத்தில் நாயக்கர்கள் காலத்து அரசியலுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. பாண்டிய மன்னர்கள் அவையில் ஐயனார் என்பவர் பணியாற்றியதாகவும் அறிய முடிகின்றது. இவ்வாறு பழங்கால முதல் அண்மைக் காலம் வரையில், பல சமயங்களைச் சார்ந்தும், புராண வரலாற்றுத் தொடர்பும் கொண்டு விளங்கும் ஐயனார் பற்றிய பழமையான ஆய்வுகள் தமிழில் அதிகமாக வெளிவரவில்லை (தசரதன், 1994).

இதன்மூலம் ஐயனார் வழிபாடு பெருந்தெய்வ வழிபாட்டின் கிளைவழிபாடாக மட்டுமின்றி, தனித்த சிறுதெய்வ வழிபாடாகவும்

பண்டைக்காலங்களில் பின்பற்றப் பெற்ற நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சியாக வீரர்களுக்கு ஏற்படுத்தப் பெற்ற வழிபாட்டு முறையோடு இணைந்து கொண்டது என்பதையும் அறியலாம்.

பாண்டிய நாட்டில் வழங்கப்படும் ஐயனார் கதைகள் பெரும்பாலும் இத்தகைய வீரர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒத்ததாகவே விளங்குகிறது. ஐயனார் கதையின் மூலம் புராணத்தோடு தொடர்புடையதாக இருந்தாலும் பிற்பகுதிக் கதைகள் அந்தந்தக் காலத்து ஐயனார் தெய்வங்களின் கதைகளோடு இணைத்துப் பின்னப் பெற்றனவாகவே விளங்குவதனையும் உணரலாம்.

மதுரையில் பாண்டியனுக்கு மகளாகப் பார்வதி தேவியார் மூன்றுதனங்களுடன் தடாதகை எனும் மீனாட்சியாகப் பிறந்தாள். அம்மீனாட்சியை மணம் முடிப்பதற்காகச் சிவபெருமான் சொக்கனார் என்ற பெயரில் வந்தார். அவரைக்கண்டதும் மூன்று தனங்களுடனிருந்த மீனாட்சி அழகே உருவான பெண்ணாக மாறினாள். அவர்கள் திருமணம் நடந்தது. மதுரையில் அவர்கள் அரசு செலுத்தியபோது சொரிமுத்து ஐயனாக இருந்த ஐயனார் சொக்கனாரைக் காண மதுரைக்கு வந்தார்.

ஐயனாரின் வரவைத் தூதுவர்கள் சொக்கனாரான பாண்டியனுக்கு அறிவித்தனர். அவர்கள் இருவரும் சந்தித்தனர். ஐயனாரின் திறமையைக் காணச் சொக்கனார் விரும்பினார். ஐயனாரும் குதிரையேற்றம், யானையேற்றம், வில், வாள் பயிற்சி எல்லாவற்றையும் செய்து காட்டினார்.

> இவற்றைப் பார்த்த பெண்கள் அவர்மேல் மையல் கொண்டனர். வீரர்களோ அவர்மேல் பொறாமை கொண்டனர். ஐயனாரின் திறமையைப் பார்த்து அறிந்த பாண்டியன் அவரைத் தம் இடத்திற்கு அருகிலேயே இருத்திப் பாண்டிய நாட்டில் சேவகம் செய்துவரச் செய்தார் (தசரதன், 1994).

என்னும் இந்தக் கதை சொட்டக்கார சுவாமியின் கதையினை

ஏறக்குறைய ஒத்ததாகவே அமைகிறது. சொட்டக்கார சுவாமியின் முற்பகுதிக் கதை மதுரையை ஆட்சி செய்த நாயக்க வம்ச அரசராகிய திருமலை நாயக்கரிடம் அவர் வந்து சேர்ந்ததை நினைவூட்டுகிறது. போர்ப்பயிற்சிகளிலும், குதிரையேற்றம், யானையேற்றம் முதலிய திறமைகளிலும் அவர் பெற்ற மதிப்பு இங்கு ஒத்து எண்ணத்தக்கதாகும்.

அதைப் போலவே, சொட்டக்காரரின் முடிவுக்குக் காரணமாக அமைந்தது திருமலை நாயக்கரைச் சூழ்ந்திருந்தவர்களின் பொறாமையே என்பதும் இந்தக் கதையோடு ஒத்ததாக அமைகிறது.

> ஐயனாரின் சேவகத்தால் பாண்டிய நாடு செழித்தது. ஆனால் பொறாமைக்காரர்களோ அவரை அழிக்கத் திட்டமிட்டனர். இறுதியில் பாண்டியனின் தேவியிடம் ஐயனார் பற்றி முறையிட்டனர். இதனால் அவருக்குப் பெரும் இடர் ஏற்பட்டது (தசரதன், 1994).

இதே போலும் இடர்ப்பாடு சொட்டக்கார சுவாமிக்கும் ஏற்பட்டு, அவரைப் பழிவாங்குவதற்குத் தக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு அவ்வாறான சம்பவம் அவருடைய தம்பியின் மூலமாக நேர்ந்தது என்பது சொட்டக்கார ஐயனார் சுவாமியின் வரலாற்றில் பதிவாகியுள்ளது. அது இங்கு இணைத்து எண்ணத்தக்கதாகும்.

## மதுரையைச் சுற்றியுள்ள ஐயனார் கோயில்கள்

மதுரையின் கிழக்குப் பகுதியிலும், வடக்குப் பகுதியிலும், தொண்டைமண்டலத்தின் தென்பகுதிகளிலும் ஐயனாரும் அவரின் பரிவார தெய்வங்களும் பெரிய பெரிய உருவங்களில் வழிபடப்பட்டு வருகின்றனர்.

மதுரையில் அடைக்கலம் காத்த ஐயனார் கோயில், அருப்புக்கோட்டை, கமுதி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாத புரத்திலுள்ள சிலபகுதிகள், புதுக்கோட்டை வட்டாரங்கள் போன்ற பகுதிகளில் காணப்படும் ஐயனார் கோயில்களில் எல்லாம் ஐயனாரும், பிற தெய்வங்களும் பெரிய, பெரிய உருவங்களில்

அமைக்கப்பெற்று வழிபடப்பட்டு வருகின்றனர். இதற்கான காரணங்கள் பலவாகும்.

களிமண் மிகுதியாகக் கிடைக்கின்ற இப்பகுதிகளில் பெரிய பெரிய உருவங்கள் அமைப்பதற்கு வசதி இருந்ததால் அவ்வாறு ஐயனாரும் அவர் பரிவார தெய்வங்களும் பெரிய பெரிய உருவங்களில் வழிபடப்படுகின்றனர் என்று கூறுவர். இதற்கு நேர்மாறாகச் சிறிய உருவங்களில் தென்பாண்டி நாட்டு ஐயனார் கோயில்களில் தெய்வங்கள் இடம்பெற்றுள்ளன. மக்கள் குடிபெயர்ந்து செல்லுங்கால் தங்கள் வசதிக்கேற்ப தெய்வங்களின் உருவங்களையும் அமைத்து வழிபட்டதன் காரணமாகவே இச்சிறிய உருவங்கள் ஏற்படலாயின என்பது தவறாகாது.

பெரிய பெரிய உருவங்களில் ஐயனாரும் அவரின் பரிவார தெய்வங்களும் அமைக்கப்பட்டு வழிபடப்படுவதற்கு மற்றொரு வரலாற்று உண்மையைக் கூறுவது பொருத்தமாகும்.

> கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் விசயாலய சோழன் அமைத்த நிதம்பசூதனி என்ற பெண் தெய்வம் பெரிய பெரிய உருவத்திலேயே இருந்தது. அதைப் போன்றே அக் காலத்தில் வழிபடப்பட்ட ஐயனாரும் பெரிய பெரிய உருவங்களில் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டார். அந்த உருவ அமைப்பே அக்காலம் முதல் இக்காலம்வரை வடதமிழ் நாட்டுப் பகுதிகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அப்பகுதி மக்கள் மரபிலிருந்து மாறாமல் ஐயனார் உருவங்களையும் குதிரை, யானைகளையும் அமைத்து வருகின்றனர். ஊர்ப்புறங்களில் பெரிய பெரிய உருவங்களைக் காணும்போது பகைவர்களுக்கும், திருடர்களுக்கும், மற்றோருக்கும் திகில் ஏற்படுவதோடு பக்தியும் ஏற்படும் என்ற காரணமும் இருந்திருக்கலாம் (தசரதன், 1994).

## நாயக்கர்கள் ஆட்சியில் ஐயனார் வழிபாடு

முற்கால ஐயனார் வழிபாட்டு மரபிலிருந்து சற்று மாறுபட்டு நாயக்கர்களின் ஆட்சிக்காலத்து ஐயனார் வழிபாடு விளங்குகிறது. இந்தக் காலத்தில் தோன்றிய ஐயனார் வழிபாட்டில் தெலுங்கு மொழிக்கலப்பு ஏற்பட்டுள்ளது. ஐயனார் மரபு வழிபாட்டை வெளிப்படுத்தும் ஐயனார் கதைப்பாடல்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. இவை நாயக்கர்கள் எனப்படும் பாளையக்காரர்கள் ஆட்சிக்காலத்திலேயே பாடப்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

> ஐயனார் கதைப்பாட்டுச் சுவடிகளில் பெரும்பாலும் பாளையக்காரர்கள், துரைமார்கள், வட்டத்தொப்பிக்காரர், பட்டறை பைசாக்கு போன்ற சொல்லாட்சிகளிலிருந்து இக்கதைப்பாட்டு நாயக்கர்கள் ஆட்சிக்காலத்தில் பாடப் பெற்ற கதைப்பாடலாக இருக்கலாம் எனத் தெரிகிறது. நாயக்கர்கள் மதுரையைப் பிடித்த காலத்தில், வெறும் பெயரளவிலேயே பாண்டிய வமிசத்தினர் நாடாண்டனர் எனவும், அக்காலகட்டத்தில் ஊழலும், கலகமும் நிறைந்திருந்தன எனவும் சரித்திரச் சான்றுகளால் அறியமுடிகின்றது. அப்படியான காலகட்டத்தில் ஆட்சி சிறப்புற நடப்பதற்கு வந்ததாகவே ஐயனார் கருதப்பட்டார் எனக் கருதலாம் (தசரதன், 1994).

சேர தேசமாகிய மலையாள நாட்டில் வழங்கப்பட்ட சாஸ்தா வழிபாடு தமிழகத்தில் முன்னரே விளங்கி வந்த ஐயனார் வழிபாட்டோடு இணைந்துகொண்டது. தமிழகத்தில் அக்காலத்தில் நிலவிய நிலையற்ற, முறையற்ற அரசுக்கு மாற்றாக மக்கள் ஐயனார் வழிபாட்டையே தங்களின் பாதுகாப்பாகக் கருதி இருக்கிறார்கள் என்பதையும் அறியலாம். மேலும்,

> மலையாளத்திலுள்ள பந்தள நாட்டிற்கும் பாண்டி நாட்டு மதுரைக்கும் இடைவழியில் இருப்பது இராசபாளையப் பகுதி ஆதலால், அப்பகுதி

வழியாக மேற்கு மலையைக் கடந்து ஐயனார் படைகள் சென்றதாக இராசபாளையம் வட்டாரத்துச் செவிவழிச் சான்றுகள் பகர்கின்றன. இங்குள்ள ஐயனாரும் மிகவும் பிரசித்தி பெற்றவர், இவர்க்கும் தெலுங்கு மொழி பேசுவோருக்கும் மிக்க தொடர்புள்ளதாக அச்சான்றுகளிலிருந்து தெரிகிறது. இதனாலும், பாண்டிய நாட்டில் தெலுங்கர் ஆட்சி ஏற்படத் தொடங்கிய ஆரம்பக் கால கட்டத்தில் உண்டாகிய பாண்டியனின் நிலையற்ற ஆட்சியை வலுப்படுத்தவும், கலகக்காரர்கள், கொள்ளையர்களை அடக்கி அமைதி காக்கவும் வந்தவராக ஐயனார் இருந்திருக்கலாமென்றும் அவரைப் பற்றிய கதைப் பாட்டில் புராண நிகழ்ச்சிகளையும் சேர்த்து, புலிப்பால் கொண்டு வந்த நிகழ்ச்சியையும் சேர்த்து இதைப் போன்ற கதைப் பாடலை உருவாக்கியிருக்கலாமெனத் தோன்றுகிறது (தசரதன், 1994).

ஐயனார் கதைப்பாடல்கள் ஐயனார் வரலாற்றை மட்டுமின்றி, அக்கதைப்பாடல்கள் தோன்றிய காலத்தையும் அறிவதற்கு உதவி செய்கின்றன. இதன் மூலமாக மதுரைப் பகுதிகளில் வழங்கப்பட்டு வந்த ஐயனார் வழிபாடு குறித்து விரிவாக அறிந்துகொள்ளத் தகுந்த சான்றாக இக்கதைப்பாடல்கள் விளங்குகின்றன.

இவ்வாறாயின், இக்கதை நடந்த காலம், - நாயக்கர்கள் மதுரையைப் பிடித்த 16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியாக இருக்கலாம் எனவும், அதன் பின்னர் 100 ஆண்டுகளில் அந்த ஐயனார்க்குக் கோயில் எழுப்பப்பட்டிருக்கலாம் என்றும், அக்காலகட்டத்திலோ அதற்குச் சற்றுப் பின்போ தான் இக்கதைப் பாட்டும் புனையப் பட்டிருக்கலாம் என்றும் தெரிகிறது. ஏறத்தாழ 250 ஆண்டுகளுக்கு முன் ஐயனார் கதைப்பாடல் பாடப்பெற்றிருக்கலாம் என்றும், அது 150 ஆண்டுகளாகத் தென்பகுதிகளில் வழங்கப்பட்டு வருகிறது என்றும் கருதலாம் (தசரதன், 1994).

சொட்டக்கார ஐயனார் சுவாமி வரலாற்றிலும் இந்தக் காலமும் கதையமைப்பும் தொடர்பு உடையதாக விளங்குகிறது. திருமலை நாயக்கரின் காலத்தில் விளங்கி வந்த கொடுமைகளிலிருந்து தப்பிப்பதற்காக சொட்டக்காரர் தனது தம்பி மற்றும் தங்கையுடன் சொக்கம்பட்டி மலைப்பகுதிகளில் அடைக்கலம் புகுந்து இருக்கிறார். இவர், குதிரைப்படை வீரராகவும் தெலுங்கு தேசத்தவராகவும் மக்களுக்கு அறிமுகமாகியிருக்கிறார். அடைக்கலம் வேண்டி வந்த தங்களைக் காக்க வேண்டும் என்று கிராமத்தார்களிடம் அவர் கோரியிருக்கிறார். ஆனபோதும், அவருடைய தலைமறைவு வாழ்க்கை அறியப்பட்டு தங்கைக்கு ஏதும் அவமானம் நேர்ந்து விடுமோ என்று அஞ்சிய வேளையில் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டதாக வரலாறு கூறுகிறது. தங்களுக்கு அடைக்கலம் தந்த ஊர் மக்களைத் தான் தெய்வமாகிச் சொட்டக்கார ஐயனார் சுவாமி காக்கிறார் என்பது இதுவரை அப்பகுதி மக்களின் ஆழ்ந்த நம்பிக்கையாகப் புலப்படுகிறது.

## ஐயனார் அமைப்பும் சொட்டக்கார சுவாமியும்

ஆதியில் நடுகல் வழிபாட்டில் தொடங்கிய அதே மரபு பழங்கால ஐயனார் வழிபாட்டிலும் தொடர்ந்திருக்கிறது. அதன் பின்னரே, ஐயனாருக்குக் கல், மண் முதலியவற்றால் உருவங்கள் செய்யும் வழக்கம் தோன்றியது. தொடர்ந்து ஐயனார் உடன் இருக்கும் தேவியருக்கும் பரிவாரத் தெய்வங்களுக்கும் சிலைகள் அமைக்கும் முறை தோன்றி இருத்தல் வேண்டும்.

> ஐயனார் சிறு தெய்வமாகையால் ஆதியில் கல் படிவமாகவே வழிபடப்பட்டு வந்துள்ளார். பின்பு சிறுதெய்வங்கள் மதிக்கப்பட்ட காலத்தில், சிற்பக்கலை சாத்திர விதிகளின்படி ஐயனார்க்குச் சிலை அமைத்துப் பிரதிட்டை செய்துள்ளனர். இவ்வகையான சிலைகளில் தம் இரு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு கம்பீரமாக அவர் நின்று கொண்டிருக்கிறார். ஐயனாரின் வலப்பக்கம் பூரணை அம்மையாரும் இடப்பக்கம் புட்கலை (பொற்கொடி) அம்மையாரும்

நின்று கொண்டிருக்கின்றனர் (தசரதன், 1994).

கற்பனை நோக்கிலேயே தொடக்கத்தில் ஐயனார் சிலைகள் வடிக்கப்பட்டு இருக்கின்றன. பின்னர் கால மாறுபாடுகளுக்கு ஏற்பவும் ஊர் சார்ந்த வரலாறுகளுக்கு ஏற்பவும் உருவங்களில் மாறுபாடுகள் தோன்றின.

ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன்னால் வீரராக வாழ்ந்து மாய்ந்த சொட்டக்கார ஐயனார் சுவாமிக்கு மதுரை மாவட்டத்து மலைக்கிராமமாகிய சொக்கம்பட்டி, வேலாயுதம்பட்டி மக்கள் உள்ளூர் வேளார்களைக் கொண்டு கற்பனை வடிவிலேயே மண் சிலைகளை உருவகித்து வழிபட்டு வருகின்றனர்.

இச்சிலைகள் ஒவ்வொரு முறையும் புரவி எடுப்பு நடக்கும் விழாக் காலங்களில் புதுப்பிக்கப் பெற்று வழிபாட்டுக்கு வைக்கப்பட்டுள்ளன. திருவிழாவின் நிறைவு நாளில் ஊரார் பரிவாரங்களோடு அந்தத் திருவுருவங்களைச் சுமந்து மலைமீது இருக்கும் கோயிலில் கொண்டு போய்ப் பிரதிட்டை செய்து வைப்பர். அடுத்த புரவி எடுப்பு வரும் வரையிலும் அந்தச் சிலைகள் வழிபாட்டிற்கு உரியனவாகக் கொள்ளப்படும்.

## ஐயனாரின் பரிவாரங்கள்

ஐயனாரைப் பார்த்து நிற்கும் பரிவாரங்களுள் முதலில் யானையே விளங்கும். அதனைத் தொடர்ந்து சில அம்மன் தெய்வங்களும் ஆண் காவல் தெய்வங்களும் வரிசையாக நிற்கும். பெரிய அமைப்புடைய குதிரைமேல் ஐயனார் அமர்ந்து இருக்கும் மண்சிலைகள் காணப்படும். குதிரை தன் முன் கால்களை மேலே உயர்த்திப் பாய்வதற்குத் தயாராக நின்றிருக்கும். குதிரையின் கால்களுக்கு அருகில் ஆண்-பெண் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இவை மட்டுமின்றி யானை, குதிரை மற்றும் காலாட்படைகளும் கூட்டமாகத் திரண்டு நிற்பதைப் போன்ற கற்சிலைகளும், மண்படிவங்களும் மிகுதியாக ஐயனார் கோயில்களில் காணப்படுகின்றன.

இந்த அமைப்பு முறையிலேயே சொட்டக்கார ஐயனாருக்கும் வழிபாடு

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சொட்டக்கார ஐயனார் சுவாமிக்கு உள்ளூரில் இருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீமந்தை முத்தாளம்மன் தனது ஆதரவைத் தந்து காத்ததாகவும் ஊர் மக்கள் நம்புகின்றனர். சொட்டக்கார ஐயனார் சுவாமிக்கு விழா நிகழும் வேளையில் ஸ்ரீமந்தை முத்தாளம்மனுக்கும் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், ஐயனார் வழிபாடுகளில் காணப்படும் பரிவாரத் தேவதையாக அம்மன் அமைவது இல்லை.

ஐயனார் காவல் தெய்வமாகையால் அவர் பவனிவருவதற்குக் குதிரை, வாகனமாகப் பயன்பட்டதாகக் கூறுவர். யானைமீதும் அவர் பவனிவருவதாகக் கூறுவர். படைப் பரிவாரங்கள் காவலுக்குத் துணை செல்வதாகவும் கருதுவர். அவர் வேட்டையாடச் செல்வதாகவும் சொல்லுவர். இவற்றையன்றி, ஐயனாருடன் மிகவும் தொடர்பு கொண்டிருந்த நண்பர்களும், ஐயனார் மதிப்பு வைத்திருந்த சில அம்மன்களும் அவரது பரிவாரங்களில் அடங்குவதாகவும் வழங்குவர்.

சொட்டக்கார ஐயனார் சுவாமி குதிரைப்படைத் தலைவராக விளங்கிய காரணத்தினாலும், அவருக்கு விருப்பமாகக் குதிரையேற்றம் விளங்கியதாலும், தான் வீரமரணம் எய்திய வேளையில் இந்த ஊர் மக்களைக் காவல் தெய்வமாக இருந்து காப்பதாக வாக்குறுதி தந்தாலும் குதிரை எனப்படும் புரவி வழிபாடு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஊர்க்காவல் மேற்கொள்வதற்கும் தனது ஆன்மா சாந்தி அடைவதற்கும் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி குதிரை வாகனத்தைப் பெரிதும் விரும்புகிறார் என்று இப்பகுதி மக்கள் உறுதியாக நம்புகின்றனர். யானை என்பது (அரசர்களுக்கு உரிய) மதிப்புடைய வாகனமாகக் கருதப்படுவதால் அதுவும் சொட்டக்கார ஐயனார் சுவாமி வழிபாட்டில் முக்கிய இடம் பெறுகிறது. அதைப்போலவே, குதிரைகளும், யானைகளும் நிறைந்த பரிவாரப் படைகளும் இவர் பின்னர் அணிவகுத்து நிற்கின்றன.

## ஐயனாருக்குரிய சிறுதேவதைகள்

ஐயனாருக்கு உரிய பரிவார தேவதைகள் ஒவ்வொரு கோயிலுக்கும் தான் சார்ந்த வரலாற்றுக்கும் தொடர்புடையனவாக விளங்கும். பொதுவாக, ஐயனாருக்குரிய பரிவார தேவதைகளாக 21 சிறு தேவதைகள் உண்டு. அவை பின்வருமாறு.

*1. பத்திரகாளி*
*2. பரமராக்கித்தி*
*3. சிவனணைந்த பெருமாள்*
*4. தளவாய்*
*5. சுடலை*
*7, வன்னியராயன்*
*6. காத்தவராயன்*
*8. பாவாடைராயன்*
*9. பட்டவராயன்*
*10. பெரியதம்பி*
*11. சின்னத்தம்பி*
*12. கறுப்பன்*
*13. முன்னடியான்*
*14. பின்னடியான்*
*15. முண்டன்*
*16. பேய்ச்சி*
*17.இசக்கி*
*18. பலவேசக்காரன்*
*19. முனீஸ்வரன் (முனியசாமி)*
*20. தவசித் தம்பிரான்*
*21. சங்கிலி மாடன்*

இத்தேவதைகள் அனைத்துமோ, அல்லது ஒன்றிரண்டு கூடியும் குறைந்துமோ ஐயனார் கோயில்களில் விளங்கும். இந்த அமைப்பு முறை ஐயனாரின் எல்லாக் கோயில்களுக்கும் பொருந்தாது. ஐயனாரின் வரலாற்றுக்

கதைகளுக்கேற்ப இவை இயைந்து விளங்கும் தன்மையுடையனவாகும்.



**படம் 2. சொக்கம்பட்டி ஊர் காக்கும் மந்தை முத்தாளம்மன் கோயில்**

சொட்டக்கார ஐயனார் சுவாமி வரலாற்றில் இந்தப் பரிவார தேவதைகளில் காளியாகிய மந்தை முத்தாளம்மன் தொடர்புடையதாக விளங்குகிறது. என்றாலும் அவ்வம்மன் பரிவாரத் தேவதையாக விளங்காமல் ஆதரவுக் கரம் நீட்டும் உபதேவதையாக விளங்குகிறது. அதனைப் போலவே, பூரணை, புட்கலை என்னும் இருதேவியரும் சொட்டக்கார ஐயனார் சுவாமிக்குக் கிடையாது. சொட்டக்கார ஐயனார் சுவாமி தனது தம்பியாகிய இராமண்ணா, இராமக்காள் இருவரோடும் விளங்குகிறார். படம் 2. சொக்கம்பட்டி ஊர் காக்கும் மந்தை முத்தாளம்மன் கோயில் வெளிப்புற தோற்றம் காட்டப்பட்டுள்ளது

உடன் சொட்டக்கார ஐயனார் சுவாமிக்கு உதவியாக பிரான்மலை ஸ்ரீமங்கைபாகரால் அனுப்பப் பெற்ற சன்னாசி என்பவர் துணையாகவும் அவருக்குக் காவலாக விளங்கிய நாயும் உடனுறை தேவதைகளாக விளங்குகிறார்கள். ஐயனாரின் பரிவாரத் தேவதைகளில் சுட்டப் பெறும் தவசித் தம்பிரான் போன்ற நிலையைச் சன்னாசி பெற்றுள்ளார். மலைக்கோயிலின்

வெளிப்பிரகாரத்தில் மட்டும் கறுப்பர் சன்னிதி அமைந்துள்ளது. ஆனால், விழாக்காலங்களில் இவருக்கு உருவ வழிபாடு எடுப்பது கிடையாது. சொட்டக்கார ஐயனாருக்குப் புரவியெடுப்புத் திருவிழா நடைபெறும் சமயங்களில் குதிரைப் பொம்மைகளோடு யானை, காளை முதலிய வாகனப் பொம்மைகளையும் இணைத்து நன்றியின் அடையளாமாகச் சன்னாசியின் உடனிருந்து உயிர்நீத்த நாய் பொம்மையும் வாகனமாக வழிபாட்டுக்கும் நேர்த்திக் கடனுக்கும் பயன்படுத்தப் பெறுகிறது.

## ஐயனாருக்குரிய வழிபாட்டுப் பொருள்கள்

பெருந்தெய்வ வழிபாட்டினைப் போன்ற சிலையமைப்பும் அபிடேக, ஆராதனைகளும் சிறுதெய்வ வழிபாட்டில் நிகழ்வதில்லை. என்றாலும் அதற்கு மாறாக வேளாண்குடி மக்களால் படைக்கப் பெறும் படையல் சிறுதெய்வ வழிபாட்டில் மிகவும் சிறப்புடையதாகும். அதிலும் தங்கள் ஊரைக் காவல் செய்து நீதியை நிலைநாட்டும் ஐயனார் தெய்வத்திற்கு வேளாண் குடிமக்கள் செய்யும் சிறப்புகள்- கொடை, அளிப்பு, படையல், காணிக்கை என்ற பல பெயர்களில் திருவிழாப் போதுகளிலும் ஏனைய நேர்த்திக் கடன் செலுத்தும் தருணங்களிலும் வெகு விமரிசையாக நிகழ்வதாகும்.

> நெய்த்தேங்காய், சாம்பிராணி, கற்கண்டு, கற்பூரம், கதலிப்பழம், முந்திரிப்பழம், பன்னீர், ஊதுபத்தி, பச்சரிசி, பாசிப்பருப்பு போன்ற அபிசேகப் பொருள்கள் முன் கட்டிலும், உணவுப் பொருள்கள் பின் கட்டிலும் வைப்பது முறையாகும். மேலும் கட்டின் இடையில் ஊசி, விளக்கு வைப்பதும் உண்டு. இந்த ஊசிவிளக்குப் பூசையின் போது ஏற்றுவதற்காகவும், மேலும் இரவு நேரங்களில் வெளிச்சத்திற்காகவும் பயன்படுத்துவதற்குக் கொண்டு செல்வார்கள். மேற்கூறிய வழிபாட்டுப் பொருள்கள் அனைத்தையும் சிறிய சிறிய பைகளில் தனித்தனியே கட்டி வைப்பார்கள் (தசரதன், 1994).

இந்த முறை சொட்டக்கார ஐயனார் சுவாமி வரலாற்றிலும் இடம்பெறுகிறது. இவை மட்டுமின்றி, ஐயனாருக்குரிய வஸ்திரம் எனப்படும் வெண்பட்டு ஆடைகள், ஐயனார் விரும்பிக் கையில் தரித்திருக்கும் மலர்ச்செண்டு முதலியனவும் ஐயனார் வழிபாட்டில் இடம்பெறும்.

சொட்டக்கார ஐயனார் சுவாமி வழிபாட்டில் நறுமணம் மிகுந்த குங்கிலியமும் சாம்பிராணியும் முக்கிய இடம் பெறுகிறது. எப்போதும் நறுமணம் கமழ விளங்குபவராக அவர் திகழ்கிறார்.

மேலும் சொட்டக்கார ஐயனாருக்குப் பழம் மாற்றுதல் என்னும் வழிபாட்டு முறையும் பின்பற்றப் பெறுகிறது. ஊர்மக்கள் தங்கள் வீடுகளில் நடைபெறும் சுபதினவேளைகளில் அந்நிகழ்வு சிறப்பாக நடைபெறவும், அதற்குத் துணையாகச் சொட்டக்கார ஐயனார் காத்தருளவும் வேண்டிச் சீப்புச் சீப்பாக வாழைப்பழங்களைக் கொண்டுவந்து கருவறையில் வைத்து மாற்றிக் கொண்டு வேண்டிக் கொள்கிறார்கள்.

## தொகுப்புரை

இவ்வாறு ஐயனார் வழிபாட்டின் வழியாகத் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட வீரவணக்க வழிபாடு சொட்டக்கார ஐயனாருக்குப் பொருந்துவதையும் அவர்தம் தியாகமும் மானவுணர்ச்சியும் கிராம மக்களால் போற்றப்படுவதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

ஐயனார் வழிபாட்டில் பின்பற்றப்படும் முறைகளே சொட்டக்கார ஐயனார் வழிபாட்டிலும் ஒத்தும் மாறுபட்டும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

தன்னைக் காத்த மக்களுக்காகத் தன்னுயிரை நீத்த பின்னரும் தான் இருந்து காவல் புரிவதாக அவர் தந்த வாக்குறுதியை ஊர் மக்கள் பெரிதும் மதித்து அவருக்கும், அவர் சார்ந்தோருக்கும் நடுகல், கோயில் எழுப்பித்து வழிபட்டு வருகின்றனர். அந்த வழிபாடு ஐயனார் வழிபாட்டின் தொடர்ச்சியாக நிகழ்வதை இதன்மூலம் உறுதியாக அறிய முடிகிறது.

# திருமலை நாயக்கர் வரலாற்றில் சொட்டக்கார ஐயனார்

மூவேந்தர்களின் ஆட்சிக்குப் பின்னர் தமிழகத்தில் பெருங்குழப்பம் நேரிட்ட தருணத்தில் இந்தியாவின் வட பகுதியில் இருந்து வந்த மாற்றுப் படையெடுப்பிலிருந்து தென்னகத்தை காத்துக் கொள்வதற்காக உருவாகிய பேரரசு விஜயநகரப் பேரரசாகும். இப்பேரரசு தெலுங்கு, கருநாடகப் பகுதிகளையும் தனக்குள் கொண்டு விரிவடைந்தது.

## தென்இந்தியாவில் விசயநகர வேந்தர் ஆட்சியின் தொடக்கம்

விசய நகரப்பேரரசு தோன்றியதும் முதலில் தன்னைச் சுற்றியிருந்த காகதியர் ஆட்சிப்பகுதியையும், தெலுங்கு கருநாடகப் பகுதிகளையும் கைப்பற்றிக் கிழக்கிலும் மேற்கிலும் பரவியது. பின்னர் தமிழகத்தை நோக்கி விரிவடைந்ததும் முதல் புக்கணரின் மகனாக விளங்கிய குமாரகம்பணர் கி.பி. 1363-ல் தமிழகத்தின் வட எல்லை மண்டலமாக விளங்கிய தொண்டைமண்டலத்தை (இராஜகம்பீரராச்சியம்) படையுடன் வந்து அப்போது ஆண்டு கொண்டிருந்த சம்புவராயரிடமிருந்து கைப்பற்றினார்.

அதன் பிறகு சோழமண்டலத்தைக் கடந்து பாண்டி மண்டலத்திற்குச் சென்று மதுரையில் நடைபெற்றுக் கொண்டிருந்த சுல்தான்களின் ஆட்சியை நீக்கினார். இவ்வெற்றிக்குப் பின்னர் பாண்டி மண்டலம், சோழமண்டலம், தொண்டை மண்டலம், கொங்குமண்டலம் முதலிய தமிழகத்தின் அனைத்துப்

பகுதிகளும் விசயநகரப் பேரரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. அதன்பிறகு தமிழகம், கிருஷ்ணதேவராயர் ஆட்சி விசயநகரத்தில் ஏற்படும் வரையில் எவ்வித மாறுதலும் இன்றி விசயநகர வேந்தர்களை ஆதரித்து வந்த தமிழகத்துச் சிற்றரசர்களாலும், விசய நகரவேந்தர்களின் படைத்தலைவர்களாக விளங்கியவர்களாலும் ஆளப்பட்டு வந்தது.

## மதுரையில் நாயக்கர் ஆட்சி

விசய நகர வேந்தராக விளங்கிய கிருஷ்ண தேவராயர் தமது பிரதிநிதிகளைக் கொண்டே தென்னகத்தை ஆண்டு வந்தார். ஆனபோதும் அந்தப் பிரதிநிதிகள் அவருக்கு விசுவாசம் உடையவர்களக இருக்கவில்லை என்பதையும், ஆதலால் தன்னாட்சிக்குக் கட்டுப்பட்டுக் கப்பம் செலுத்தி ஆளக்கூடிய ஓர் ஆட்சியை அவர் விரும்பினார் என்பதையும் வரலாற்றுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

கி.பி. 1509-ல் விசயநகர வேந்தராக ஆட்சியேற்ற கிருஷ்ணதேவராயர் தமிழ்நாட்டில் நிகழ்ந்த உள்நாட்டுக் குழப்பங்களை அடக்கினார். தமிழ்நாட்டில் விளங்கிய நான்கு மண்டலங்களுக்கும் மகாமண்ட லேசுவரர்களை (ஆளுநர்களை) நியமனம் செய்தார். பாண்டிநாட்டுப் பகுதிக்கு நாகம நாயக்கரையும், சோழநாட்டுப்பகுதிக்கு நரசநாயக்கரையும் ஆளுநர்களாக ஆக்கினார். மதுரையில் நாகமநாயக்கர் ஆளுநராக அமர்த்தப்பட்டமைக்குக் காரணம் அக்காலத்தில் சோழனுக்கும் பாண்டியனுக்கும் நடைபெற்ற ஆதிக்கப் போராட்டமேயாகும். சந்திரசேகரப் பாண்டியனிடமிருந்து பாண்டிய நாட்டைச் சோழன் கைப்பற்றிக் கொள்ளவே பாண்டியன் ராயரிடம் சென்று முறையிட்டான். பாண்டியன் வேண்டுதலுக்குச் செவிசாய்த்த ராயர் அவளை ஆட்சியில் அமர்த்த நாகம நாயக்கரைப் பெரும்படையுடன் மதுரைக்கு அனுப்பினார். தாகம நாயக்கர் சோழனை வென்று பாண்டிய நாட்டைப் பாண்டியனிடம் அளிக்காது

> தானே அதன் ஆளுநராக மதுரையில் இருந்துவந்தார். இதனால் கோபமுற்ற கிருஷ்ணதேவராயர் தனது அடைப்பக்காரனாக விளங்கிய நாகம நாயக்கரின் மகனான விசுவநாத நாயக்கனை நாகமதாயக்கரை வென்று சிறைப்பிடித்து வரும்படி கட்டளையிட்டான், ராயர் சொன்னபடியே விசுவநாதன் தந்தையென்றும் பாராது அரசகட்டளையையேற்று நாகமனைச் சிறைப்பிடித்து ராயர் முன் கொண்டு வந்து நிறுத்தினான். இதனைக்கண்ட கிருஷ்ணதேவராயர் விசுவநாதனின் அரசப்பற்றினைப் பாராட்டி அவனையே பாண்டி மண்டலத்தின் ஆளுநராக இருந்து ஆண்டுவரும்படி செய்தார்

என்று விசயநகர வேந்தர்களைப் பற்றிய வரலாற்று நூல்கள் கூறும் (Mackenzie, 1828). இந்த வரிசையிலேயே மதுரையில் நாயக்கர்களின் ஆட்சி தோற்றம் பெற்றுச் சிறந்தது என்பதையும் அறிய முடிகிறது.

மதுரைப்பகுதியை, விசுவநாத நாயக்கரின் வழிவந்து ஆட்சி செய்தவர்களே மதுரை நாயக்கர் ஆவார்கள். பாண்டிமண்டலமும், கொங்குமண்டலமும், திருச்சியை உள்ளடக்கிய சோழ நாட்டின் தென்பகுதியும் இவர்கள் ஆளுகைக்குட்பட்டிருந்தன. மதுரை நாயக்கரின் வரலாறு குறித்து சத்தியநாதைய்யர், அ. கி. பரந்தாமனார் போன்றோர் தனி நூற்கள் எழுதியுள்ளனர். இந்நூல்களின் மூலமும் நாயக்கர் வரலாற்றைக் குறித்த விரிவான தகவல்களைப் பெற முடிகிறது.

## அடிக்கடி ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள்

கிருஷ்ண தேவராயரின் ஆட்சியை ஏற்றுக் கொண்டு கப்பம் செலுத்தச் சம்மதித்த நாயக்கர் மன்னர்கள் சூழலுக்கு ஏற்ப அந்த ஒப்பந்தங்களிலிருந்து விலகித் தன்னாட்சியும் செய்து வந்திருக்கிறார்கள். இதனால் அடிக்கடி ஆட்சி, அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதையும் வரலாற்றின் வழியாக அறியலாம்.

விசயநகரப்பேரரசின் பிரதிநிதியாக விசுவநாதநாயக்கன் மதுரையில் பதவியேற்ற காலம் கி.பி. 1519-ஆம் ஆண்டு ஆகும். கி.பி. 1529 தொடங்கிய இம்மதுரை நாயக்கர் ஆட்சி கி. பி. 1736 வரை நீடித்தது. விசுவநாதநாயக்கர் தொடங்கி மீனாட்சி ஈறாக பதின்மூவர் மதுரை நாயக்க அரசர்களாக விளங்கியிருக்கின்றார்கள். இவர்கள் விசயநகரப் பேரரசின் அரசியல் கொள்கைகளையே பின்பற்றி ஆட்சி செய்தார்கள். சில வேளைகளில் தமிழ் நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் தங்களது முறைகளை மாற்றவும் செய்திருக்கிறார்கள். மதுரை நாயக்க மன்னர்களில் முதலில் ஆட்சிபுரிந்த ஆறு நாயக்கர்கள் விசய நகரப் பேரரசுக்குக் கட்டுப்பட்டு அவர்களது பிரதிநிதிகளாகவே ஆட்சி நடத்தினர். அடுத்துவந்த எழுவரும் முழுவுரிமை பெற்ற மன்னர்களாக மதுரையில் ஆட்சி செய்தனர் (நடன காசிநாதன், 1994).

## பாண்டிய நாட்டில் நாயக்கர்கள் ஆட்சியின் நிலையான தோற்றம்

வரலாற்றுச் சிறப்புமிக்க பாண்டிய நாட்டில் அந்நாட்டின் தொல்குடிப் பரம்பரையான பாண்டியர்களின் வீழ்ச்சியைத் தொடர்ந்து நாயக்கர்கள் ஆட்சி தொடங்கியது. அந்த நாயக்க மன்னர்களில் ஆறாவது பட்டமாக ஆட்சி செய்த முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவரின் இரண்டாவது மகனே திருமலை நாயக்கர் ஆவார்.

திருமவை நாயக்கரின் வருகைக்குப் பின்னரே தென்னகத்தில் நிலையான ஆட்சி உருவாகத் தொடங்கியது என்றும் கூறலாம். தமது நிர்வாகத் திறமையால் ஆட்சிப்பகுதிகளைப் பாளையப்பட்டுகளாகப் பகுத்துக் கொண்டு அவர் முறையான நிர்வாகத்தை மேற்கொண்டார். மதுரை நாயக்கர் குலத்தின் வழிவந்து தன்னை முதன்முதலில் முழுவுரிமை படைத்த மன்னராக ஆக்கிக் கொண்டார்.

## திருமலை நாயக்கர்



**படம் 3. திருமலை நாயக்கர்**

திருமலை நாயக்கரின் இயற்பெயர் சவுரி நாயக்கர் என்பதாகும். இவர் பிறந்த காலம் குறித்து தெளிவான தகவல்கள் இல்லை. என்றும் அவர் தனது 39 ஆவது வயதில் பதவி ஏற்றுள்ளார். ஆதலால் அவர், கி.பி. 1594 ஆண்டு பிறந்திருக்கலாம் என்று கருதுவர். ஆனால் செப்பேடுகளின் வழியாக அவர், கி.பி. 1587ஆம் ஆண்டு தைப்பூச நன்னாளில் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கருக்கு

மகனாகத் தோன்றியவர் என்பதும் கி.பி. 1659 இல் மாசிமாதத்து நான்காம் நாளில் மறைந்தார் என்பதும் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆதலால் திருமலை நாயக்கர் 39ஆம் வயதில் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து 75ஆவது வயதுவரை நிலைத்திருந்தார் என்பதையும் உறுதியாக அறிய முடிகிறது.

அதேபோல திரிசிரபுரம் என்று வழங்கப்பெற்ற திருச்சிராப்பள்ளியிலிருந்தே ஆட்சி செய்து வந்த திருமலை நாயக்கர் மதுரைக்கு வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் தனது நாயக்க சாம்ராஜ்ஜியத்தின் தலைநகராக மதுரையை அறிவித்துக் கொண்டதும் வரலாற்றில் தெளிவாகவே பதிவாகியுள்ளது. படம் 3-இல் திருமலை நாயக்கர் கொடுக்கப்பட்டுள்ளது.

> முத்துவீரப்ப நாயக்கர் கி. பி. 1622ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திரிசிரபுரத்தில் காலகதியடைய கி. பி. 1623 பிப்ரவரி - மார்ச்சு மாதத்துக்குச் சரியான சாலிவாகன சகாப்தம் 1544க்குமேற் செல்லா நின்ற துந்துமி ஆண்டு மாசி மாதம் 17ஆம் நாள் மகாகீர்த்தியு முயர்வுங் கொண்ட "மகாராஜமான்யராஜஸ்ரீ திருமலைசவுரி நாயினி அய்யுலுகாரு" மதுரையில் வந்து ஸ்ரீமீனாக்ஷி சந்நிதியில் அவர்கள் முன்னோர்களுக்கு நடந்து வந்த வழக்கம்போல் மகுடாபிஷேகம் செய்துகொண்டு, ஸ்ரீமீனாக்ஷியம்மையார் திருக்கரத்திலிருந்து விக்கிரம பாண்டிய ஸ்தானீக பட்டராகிய சதாசிவப் பட்டர் வாங்கிக் கொடுக்கச் செங்கோலும் பெற்றனர். அப்பொழுது அவருக்கு வயது முப்பத்தொன்பது. Mr. நெல்ஸன் துரையவர்கள் முப்பதுக்கு மேல் நாற்பதுக்குள் என்று எழுதுகிறார் (கோவிந்தசாமி ஐயர், 1920).

## திருமலை நாயக்கரின் ஆன்மீகப் பணிகள்

திருமலை நாயக்கர் திருச்சிராப்பள்ளியிலிருந்து மதுரைக்கு வந்ததே இறையருள்தான் என்பது மற்றொரு கதை. மதுரையில் மகுடாதிபதியாகப்

பட்டமேற்றுக் கொண்ட திருமலை நாயக்கர் ஆட்சிப் பணிகளில் மட்டும் தனது முழுக் கவனத்தைச் செலுத்தாமல் சரிபகுதியாக ஆன்மீகப் பணிகளிலும் ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்தார் என்றும் அறியலாம். காரணம், தனக்கு ஏற்பட்ட பெரும்நோய்த் தொல்லையிலிருந்து மீட்டுத் தந்த இறையருளுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்பதும், மாற்றார்களின் படையெடுப்பினால் நிலைகுலைந்து போயிருந்த தென்னகத்தின் கலைச்செல்வங்களை மீட்டுக் கொணர வேண்டும் என்பதுமேயாகும்.

திருமலை நாயக்கர் ஆலய அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு, முதலில் திருப்பணி வேலைகளைத் தொடங்கினார். கோயில் கெர்ப்பக்கிருகம் முகல் கபாலி மதில் வரைக்கும் உள்ள சகலமான திருப்பணிகளையும் புதுப்பித்தார். அநேகம் பாகங்கள் இடிந்து பாழாய்க் கிடந்தன. ஏனெனில் கி.பி 1310இல் முகமதியப் படையெழுச்சியில் மாலிக்காபூர் (Malik kafur) கெர்ப்பக்கிருகத்தையும், முதல் பிரகாரத்தையும் நீக்கி மற்றைய அநேகம் பாகங்களையும் பதினான்கு கோபுரங்களையும் இடித்துப் பின்னப்படுத்திப் பாழாக்கி விட்டார். அது அப்படியேயிருந்தது. பிறகு நாயக்கர் அதைச் சீர்ப்படுத்தத் தொடங்கினார். இந்த விவரம் மதுரை திருவாலவாயுடையார் கோயில் ஸ்ரீதாலபுஸ்தகத்தில் அடியிற் காட்டியவாறு எழுதப்பட்டுள்ளது (கோவிந்தசாமி ஐயர், 1920).

## மதுரையில் நேர்ந்த அதிசயமும் சொக்கம்பட்டியின் அற்புதமும்

மதுரை நகரமும் பாண்டிய நாடும் சிவபெருமானின் அற்புதத் திருவிளையாடல்களுக்குப் பெயர்போனவை. பகையென்று வந்தவர்களையெல்லாம் தன்அன்பால் கட்டியணைத்து உறவுகளாக்கும் உன்னத பூமி. மாற்றுத் தேசத்தவர்களால் பொலிவிழந்து போன அப்பூமி திருமலை நாயக்கரைத் தன்னகத்தே வரச்செய்து தன்னைப் புதுக்கிக் கொண்டது போலும். திருமலை நாயக்கரின் ஆலயத் திருப்பணிகளை

நினைக்கும்போது குறிப்பிட்ட இரண்டு நிகழ்வுகளையும் இந்த இடத்தில் கூறியாக வேண்டும். பாண்டிய மண்ணிலே நடந்த அவ்விரண்டு நிகழ்வுகள் ஒன்றோடொன்று மிகவும் பொருத்தமுடையனவாகத் திகழ்வதைச் சொட்டக்கார ஐயனார் சுவாமி வரலாற்றோடு இணைத்து எண்ணிக் காணலாம். முதல் அற்புத நிகழ்வு மாலிக்காபூரின் படையெடுப்பின்போது மதுரையில் நிகழ்ந்ததாகும்.

> ஆதி சுல்த்தானும், மாலிக்காபூரும் அறுபதினாயிரம் குதிரைப்படையுடனே புறப்பட்டுச் சீமையிலுள்ள விஷ்ணுஸ்தலம், சிவஸ்தலம் இன்னமுள்ள ஸ்தலங்களையெல்லாம் பிடித்துக் கொண்டு திரிசிரபுரம் வந்து சேர்ந்தார்கள். திரிசிரபுரத்தில் வந்திருந்த பாளையம் கி. பி. 1310 ஆண்டு சூன் மாதம் 20ஆம் நாள் மதுரைக் கோட்டையை வந்து பட்டம் கட்டிக் கொண்டு பாண்டியன் கோட்டையையும் கோயிலில் அநேகம் பாகததையும் திருப்பணிகளையும் இடித்துப் போட்டார்கள். அப்போது பாளையத்திலே காரியக்காரர்களாக வந்திருக்கிறவர்களில் ஒருவரான தாயம்பகராயர் என்பவர் நிரம்பவும் சிவபக்தியுள்ளவரானதால் கடவுளைத் தரிசிக்கும் பொருட்டு கோயிலுக்கு வந்தார். தரிசனம் பண்ணிக்கொண்டு பிரதக்ஷிணம் வருகையில் விமானத்திலிருக்கிற எட்டு யானைகளையும் பார்த்து "இந்த வயனம் என்ன?" என்று கேட்டார். அப்போது சொக்கநாதர் என்று ஒரு தவசி எல்லாம் வல்ல சித்த மூர்த்தி சந்நிதியில் ஜபம் பண்ணிக் கொண்டிருந்தார். அவரைக் கேட்டபொழுது முன் ஒரு பாண்டியன் நாளையில் இந்தச் சித்த மூர்த்தி இந்த விமானத்திலிருக்கிற கல்யானையைக் கரும்பு சாப்பிட வைத்த புண்ணியம் பெற்ற அருமையான தலமென்று நிரம்பவும் சொன்னார். "அப்படியா என்று அதிசயப்பட்டு, இப்போது நாம் கொடுக்கிறோம். சாப்பிடுமானால் நீர் சொன்ன வார்த்தையை ஒப்புக் கொள்ளலாம்" என்று சொல்லுமிடத்தில்

"அப்படியே வாங்கிச் சாப்பிடும்" என்று சொன்னார். இந்த அதிசயத்தைத் தங்கள் பாளையத்தெசமானான ஆதி சுலுத்தானிடத்தில் அறியப்பண்ணிவைத்து அவரையும் கோயிலுக்குள் வரவழைத்துக் கரும்பை அவர்கையால் கொடுக்கச் செய்தார். விமானத்திலிருக்கிற யானையானது கையினாலே வாங்கிப் புசித்தது. இந்த அதிசயத்தைப் பார்த்தவுடனே ஆதிசுலுத்தானுக்குக் கம்பன முண்டாகி இதுவரைக்கும் ஒரு இடத்திலும் இந்த அதிசயங்காணோம். இதனாலே அல்லா இருக்கிறார் என்று ஒப்புக்கொண்டு கபாலி உடையவர் திருமதிலுக்கு வெளிப்பட்ட திருப்பணிகள் இடிபட்டது போக, கெர்ப்பக்கிருகம் முதல் அறுகால் பீடம் வரைக்கும் கபாலி உடையவர் திருமதிலுள்பட இடிக்க வேண்டாமென்று கட்டளையிட நிலைத்தது (கோவிந்தசாமி ஐயர், 1920).

இந்த அற்புத நிகழ்வால் மதுரையிலும் பாண்டிய நாட்டின் ஏனைய தலங்களிலும் உள்ள திருக்கோயில்களும் கோபுரங்களும் தப்பி விட்டன. அதைப்போலும் ஓர் அற்புத நிகழ்வு சொட்டக்கார ஐயனார் சுவாமி கதையிலும் செவிவழிச் செய்தியாகக் குறிப்பிடப் பெறுகிறது.

சொட்டக்கார ஐயனார் சுவாமி வழிபாட்டின்போது அவர் அருள் இறங்கி விளையாடும் அருளாடி வாக்குக் கூறுவதும் மக்கள் கூடி நின்று தங்கள் குறைகளைக் கேட்பதும் வழக்கமாகும். அவ்வாறு அருளாடுகிற சொட்டக்கார ஐயனார் அருளாடிக்குத் தமிழைத் தவிர வேறு எந்த மொழியும் தெரியாது. ஆனால், அருள்நிலை ஏறப்பெற்ற உடனேயே அவர், சொட்டக்கார ஐயனாரின் தாய்மொழியாகிய தெலுங்கிலேயே சரளமாகப் பேசித் தனது அருள்வாக்கைத் தொடங்குவார்.

அப்படி ஒருமுறை திருவிழாவின்போது அருளாடிக் கொண்டிருந்த வேளையில், ஆங்கிலத் துரையொருவன் (வேறொரு அதிகாரி என்பாரும் உளர்) இதனைப் பார்க்க ஆவலுற்று அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். மனிதன்

உடலில் தெய்வம் வந்து ஆடும் என்பது மூடத்தனம். இதுமாதிரியான திருவிழாக்களை இனிமேல் இந்தக் கிராமத்தில் நடத்தக் கூடாது என்பன போன்ற ஆணைகளைப் பிறப்பிக்கத் தயாரானான்.



BOARD OF REVENUE (LAND REVENUE), 6TH JULY 1894, FOREST NO. 442.

*East.*—Thence the west side of survey No. 96 of Pallappatti to a point in it where it turns east for the second time from the north; thence in a straight line to a point in the same side five and one-fifth-chains from its south west corner; thence along that side to the said corner; thence a straight line to the south-west corner of survey No. 97; thence a straight line to the north-east corner of survey No. 101; thence its north and west sides, the west sides of survey Nos. 99 and 110 to a point in the latter nine-tenth chain south-west of the south-west corner of survey No. 99; thence a straight line to a point on the same side nine-tenth chain north of the north-east corner of survey No. 108; thence a straight line to a point on the north side of survey No 108 where it turns west for the second time from the east; thence along the said side and the north side of survey No. 107, the north and west sides of survey No. 103, west side of survey No. 104, west and south sides of survey No 402 to the south-west corner of survey No. 399; thence a straight line to a point on its south side where it turns eastwards for the second time from the west; thence a straight line to a point in it where it so turns for the third time from the west; thence a straight line to a point in it where it turns north-east for the first time from the east; thence along that side to a point in it one and two-fifth chains west of its south-east corner; thence a straight line to the south-west corner of survey No. 398; thence its south side, the west sides of survey Nos. 385, 384 and 379 to the south-west corner of the last number; thence a straight line to the northernmost point of survey No. 366, and thence its north and west sides to its south-west corner (survey numbers are all of Pallappatti village); thence a straight line to a point on the north side of survey No. 15 of Valacheripatti village one and one-tenth chains from its north-east corner; thence that side to its north-west corner; thence a straight line to a point on its west side where that side turns south for the second time from the north; thence along that side and the west sides of survey Nos. 16, 54 and 56 to a point in the last two and four-fifth chains from its north-west corner; thence a straight line to the north-west corner of survey No. 58; thence along its west side to a point in it one chain from its south-west corner; thence a straight line to a point on the west side of survey No. 72, one and two-fifth chains from its north-west corner; thence a straight line to the north-west corner of survey No. 90; thence along its west side to a point in it where it turns east for the first time from the north; and thence a straight line to the north-east corner of survey No. 314, all of Valacheripatti village.

*South.*—Thence a straight line to a point on the north side of survey No. 315, where it turns due west for the second time from the east; thence in a straight line to a point on the north side of survey No. 318, where it turns due west for the first time from the east; thence north-westwards a straight line for twelve chains to a point marked by a cairn and pillar two and three-fifth chains due north of survey No. 321; thence south-westwards a straight line to a cairn two and two-fifth chains north of the north-west corner of survey No. 327; thence westwards for four and three-fifth chains to a cairn one chain north of a point on the north side of survey No. 331, three and three-tenth chains from its north-west corner; and thence a straight line to the northernmost corner of survey No. 335 (all of Valacheripatti village).

*West.*—Thence northwards along the east side of survey No. 885 of Sokkampatti village to its north-east corner; thence north-westwards a straight line for six and nine-tenth chains to a cairn one chain north of the north-east corner of survey No 883; thence a straight line west-north-westwards for five and seven-tenth chains to a cairn three chains east of survey No 879; thence northerly for nine and one-fifth chains to the south-west corner of survey No. 330; thence a straight line to a point on its south side where it turns east-north-east for the first time from the west; thence along that side to its next angle; thence a straight line to the south-east corner of the said number; thence along the south side of survey No. 314 to a point one and four-fifth chains from its south-west corner; thence a straight line to a point on that side where it turns westwards for the second time from the east; thence a straight line to the southernmost point of survey No. 311; thence along its south side to its south-east corner; thence a straight line to a point on its east side where it turns west for the first time from the north; thence along that side to a point in it where it turns west for the first time from the south; thence a straight line to a point in that side three and four-fifth chains from its north-east corner; thence north-eastwards a straight line for three chains; thence to the southernmost corner of survey No. 281; thence a straight line to its easternmost corner; thence a straight line to a point in the east side of survey No. 278, where it turns west for the first time from the south; thence a straight line to its north-east corner; thence along the east sides of survey Nos. 256 and 255 to a point in the latter four and four-fifth chains from its south-east corner; thence a straight line to the south-east corner of survey No. 249; thence along its east and north sides to its northernmost corner; thence a straight line to a point on the east side of survey No. 248 where it turns westwards for the second time from the south; thence a straight line to the south-east corner of survey No. 217; thence along its east side to a point five and three-tenth chains from its south-east corner; thence a straight line to a cairn two and a half chains east-north-east of the south-east corner of survey No. 31; thence a straight line to its north-east corner; thence a straight line to a point on the east of survey No. 30, three and nine-tenth chains north of the north-west corner of survey No. 31; thence a straight line to the south-east corner of survey No. 29; thence a straight line to the south-east corner of survey No. 22; thence a straight line to a point on the south side of survey No. 25, three and four-fifth chains from its south-east corner; thence along the south and east sides of that number to its north-east corner; thence a straight line to the north-east corner of survey No. 24; thence along its north side to a point in it two chains from its north-east corner; thence a straight line to a cairn two-fifths chain north of the north-west corner of survey No. 24; thence to a point on the north side of survey No 22, one and two-fifth chains from its north-west corner; thence a straight line to the south-east corner of survey No. 2; thence a straight line to the easternmost point in the said number; thence a straight line north-easterly for three and seven-tenth chains to a point in the village boundary three and three-fifth chains east of the north-east corner of survey No. 2 (all of Sokkampatti); thence westwards along the said village boundary to the north-east corner of survey No. 2 or Sokkampatti; thence a straight line to a point on the east side of survey No 4 of Tondilingapuram village where it turns westwards for the first time from the south; thence a straight line north-westwards to a point one and two-fifth chains east-south-east of the north-east corner of survey No. 4 and thence to the said corner; thence along its north side and the east side of survey No. 10, all of Tondilingapuram, to its north-east corner; thence a straight line to the starting point.

REMARKS.—A. The following temples have been excluded from reservation and left as enclosures within the block with access as noted under each:—

(1) Malayandi Aiyanarkoil, with a space of one acre, situated within the limits of Tondilingapuram. To be approached by a path two yards wide and open for people only, running from the easternmost point of survey No. 10 of that village eastward for about five chains to the temple.

(2) Sottaka aswamikoil, with a space of twenty cents, situated about half a mile east of survey No. 246 of Sokkampatti. To be approached by right of way No. B (1).

B.—The following rights of way have been allowed to a width of two yards and open for people and cattle only:—

(1) Path to Sokkampatti from Pallappatti. It enters the block on the south side of survey No. 402 of Pallappatti, runs in a westerly direction for about half a mile in the block and leaves it at a point one and a quarter chains east of the southernmost point of survey No. 31 of Sokkampatti.

(2) Path which enters the block at a point three and a quarter chains east of the north-east corner of survey No. 12 of Tondilingapuram, and running in a north-easterly direction leaves it at a point three-quarter chain south-west of the south-east corner of survey No. 294 of Pottapatti.

**படம் 4. ஆங்கிலேய அரசால் வழங்கப்பட்ட மலைக்கோயில் ஆவணப் பத்திரம்**

ஊர்மக்கள் எதிர்ப்புக் காட்டவே ஒரு சவாலுக்கு அவன் ஒத்துக் கொண்டான். தான் வேட்டையாடிக் கொண்டு வந்திருந்த மூன்று முயல்களை ஒரு மறைவான பெட்டிக்குள் வைத்து, "இதற்குள் என்ன இருக்கிறது என்று

அருளாடி கூறினால் நான் தெய்வம் உள்ளதை நம்புவேன்" என்றான். அருள்நிலையேறப் பெற்ற அருளாடி சற்றும் தாமதியாமல், "அடேய் வெள்ளைத் துரை. இந்தப் பெட்டிக்குள் நீ வைத்த மூன்று முயல்கள் நான் தந்த மூன்று குட்டிகளோடு விளையாடிக் கொண்டிருக்கின்றன. திறந்து பார்" என்று ஆவேசத்தில் கூவினார். அதிர்ந்து போன அந்தத்துரை பெட்டியைத் திறந்து பார்க்க அருளாடி கூறிய வண்ணமே அந்தப் பெட்டிக்குள் அவன் வைத்த மூன்று முயல்களோடு கூடுதலாக மூன்று குட்டிகளும் இணைந்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு அதிசயித்து அருளாடியின் கால்களில் அடிபணிந்தான். அதுமட்டுமின்றித் தன்னுடைய அறிவீனத்திற்குத் தண்டனையாகத் தான் கையில் வைத்திருந்த வாளினையும் அருளாடியிடம் தந்து விட்டு ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி திருவிழா நடைபெற எந்தவொரு அரசத்தடையும் இல்லாதவாறு ஆணையும் வழங்கிப் போனான் என்று ஊர்மக்கள் கூறுகின்றனர்.

இதற்குச் சாட்சியாக அந்த வாள் சொட்டக்கார ஐயனார் சுவாமி கோயிலில் இன்றும் உள்ளது. திருவிழாக் காலங்களில் அருளாடும்போதிலும், குதிரையில் ஏறிப் பவனி வரும் வேளையிலும் இந்த வாளை அருளாடி கைக்கொண்டிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதைப்போலவே, சொட்டக்கார ஐயனார் சுவாமிக்குரிய மலைக்கோயில் வனத்துறையின் வசமுள்ளது. விடுதலை பெற்றுப் பின்னர் இந்திய அரசாங்கத்தின் ஆளுகைக்கீழ் வந்தபோது, 2011ஆம் ஆண்டு காலத்தில் மலைமீது கோயில் கட்டிக் கொள்ளவும், தார்ச்சாலை வசதி செய்து கொள்ளவும் ஊர் மக்கள் விரும்பியபோது அந்த ஆணையே உதவியது என்பதும் இங்கு இணைத்து எண்ணத்தக்கதாகும். sபடம் 4-இல் ஆங்கிலேய அரசால் வழங்கப்பட்ட மலைக்கோயில் ஆவணப் பத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது

இவ்வாறு நடந்த அற்புதங்கள் சொட்டக்கார ஐயனார் சுவாமியின் அருட்பெருக்கை ஊர்மக்களிடமும் பக்தர்களிடமும் ஆழ விதைப்பனவாக

அமைகின்றன என்பதை உணரலாம்.

### திருமலை நாயக்கர் காலத்துத் திருப்பணிகள்

திருமலை நாயக்கர் காலத்திலே பாழ்பட்டுக் கிடந்த பழங்கோயில், அற்புதமான மண்டபங்கள் யாவும் புதுமை செய்யப் பெற்றன. திருமலை நாயக்கர் அரசாட்சியோடு சேர்த்து அறப்பணிகளையும் திருப்பணிகளையும் இணைத்து மேற்கொண்டார் என்பது வரலாற்றில் பல விதங்களில் பதிவாகி உள்ளது.

திருமலை நாயக்கர் புதுப்பித்த அழகையும், தொண்டுள்ளத்தையும் சிறப்பித்துக்கூறிய திருப்பணிமாலைச் செய்யுள் பின்வருமாறு அமைகிறது.

"உரக்கவெகு ரொக்கங் கொடுத்துப் படங்குதூ

ணுத்திரமுதற் பழங்கல்

லொடிந்தன பிடுங்கிநவ மாயமைத் துக்காரை

யோடு சீரணமகற்றி

யரைத்தசுண் ணாம்பைவெல் லச்சாறு விட்டுநன்

றாய்க்குழைத் துச்செங்கலு

மடுக்காப் பரப்பிக் கடுக்காயொடாமலக

மரிய தான்றிக் காயுழுந்

தொருக்கா லிருக்கா லிடித்து நன்னீரினி

லூறிய கடுஞ்சாறுவிட்

டூழிகா லங்களினு மசையாத வச்சிரக்

காரைவிட் டோங்கு மம்மை

சிரக்காலம் வாழவே மீனாக்ஷி கோயிலுஞ்

செப்பமிடு வித்து நன்றாய்ச்

செய்வித்த புண்ணியஞ் சதகோடி புண்ணியந்

திருமலை மகீப னுக்கே

என்னும் பாடல் அடிகளின் மூலம் திருமலை நாயக்கர் காலத்துக் கட்டடக் கலையின் சிறப்பையும் தெளிவாக உணர முடிகிறது (கோவிந்தசாமி ஐயர், 1920). மாற்றார் ஆதிக்கத்தில் வற்றியிருந்த பக்தி வெள்ளம் திருமலை நாயக்கரின் காலத்தில் மீண்டும் பெருக்கெடுக்கவும், குன்றியிருந்த கோயில் கலைகள் மீண்டு எழவும், வழிபாட்டு முறைகளில் புதுமை பெறவும் வழிகோலின என்பதை அறியலாம்.

**நாயக்கர் ஆட்சியில் படைதிரட்டல்**

திருமலை நாயக்கர் கிருஷ்ணதேவராயரை எதிர்த்துக் கப்பம் கட்ட மறுத்துத் தன்னாட்சி நடத்தியபோதும் உள்ளூரக் கிருஷ்ணதேவராயரின் படைகள் எந்த நேரத்திலும் தனது ராஜ்ஜியத்தைத் தாக்கக்கூடும் என்று விழிப்பு உடையவராகவே இருந்தார். அதன் பொருட்டுச் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் படைகளைப் பெருக்கிக் கொள்ளவும் ஆரம்பித்தார். இந்தக் காலச் சூழலில் ஸ்ரீசொட்டக்காரர் எனப்படும் இராமையாவின் வருகையும் திருமலை நாயக்கரின் அறிமுகமும் கிடைத்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

> அவர் சிங்காதன மேறி னதும் முதன் முதலில், தாம் தம் முன்னோர்களைப்போல விஜய நகரத்திராயருக்குக் கட்டுப்படாது "சுயாதிகாரம் செலுத்தவேண்டு" மென்று நினைத்தார். அதனால் வருடந்தோறும் அவர் செலுத்திவந்த தோப்பாப் பணத்தை (கப்பப்பணம்) நிறுத்தத் தலைப்பட்டார். இவ்வண்ணமாற்றுவதால் விஜயநகரத்திறைவர் திண்ணமாய்த் தம்முடன் போர்புரிய

வருவாரெனத் துணிந்து அதற்கு வேண்டிய தண்டு தளவாடங்களைச் சேகரித்துச் சித்தமா யிருந்தாரெனச் சேசு சபை சாமியார்களின் (Jesuit Father) கடிதங்கள் மூலம் வெளியாகின்றது. முப்பதி னாயிரம் காலாட் படைகளைத் திரட்டித் திரிசிரபுரத்தில் தாமே நேரிற்போய்ச் சிலநாளிருந்து கொண்டு கோட்டை, கொத்தளங்களைச் செப்பனிட்டும், பலப்படுத்தியும் வந்தார். இஃதன்றியும், தம்முடைய தேசத்தின் வடபாகத்தில் இரண்டு புதிய கோட்டைகளையும் கட்டித் தம்மாலியன்றளவில் தம் இராச்சியத்தை எவ்வளவு பாதுகாப்பில் வைக்கக்கூடுமோ அவ்வளவு பாதுகாவலைச் செய்து வைத்துவிட்டு மதுரைக்குத் திரும்பிவந்தார் (கோவிந்தசாமி ஐயர், 1920).

இந்தச் சூழலில் தனது படைக்கு மிகுதியான ஆட்களைச் சேர்க்கவும், குறிப்பாகக் குதிரைப் படையைச் செம்மைப் படுத்தவும் அவர் பெரிதும் முயன்றார். அந்தச் சமயத்திலே இராமையா தனது தம்பி இராமண்ணா, தங்கை இராமக்கா ஆகியோருடன் மதுரை வந்தடைகிறார்.

## சொட்டக்கார ஐயனார் ஆதிகதை

முகலாயப் படையின் சீற்றத்தின் காரணமாகத் தென்னிந்தியக்குடிகளின் சமூக வாழ்வு முற்றிலும் சிதைந்து இருந்த தருணத்தில், தனது குடும்பத்தினரைப் பாதுகாக்கவும், தங்கையின் வாழ்க்கையைக் கருத்தில் கொண்டும் இராமையா என்னும் சொட்டக்காரர் மதுரையை நோக்கிப் புலம்பெயர்ந்து இருக்கிறார் என்பதையும், அவருடைய தந்தையார் இதற்கு வழிகாட்டி அறிவுறுத்தி இருக்கிறார் என்பதையும் திரு. சின்னான் செட்டியார் என்பவர் தனது பதிவில் உறுதிப்படுத்துகிறார்.

திருத்தணிக்கு வடக்கே அமைந்துள்ள ஆந்திரத்தின் பகுதி ராயலசீமா. இங்கு நாயக்கர் இன மக்கள் மிகுதியாக வாழ்ந்தனர். நாயக்கர் குலப் பெண்கள் மிகுந்த மான உணர்வு உடையவர்கள். தன் தலையில் இருந்து விழுந்த

மயிரைக்கூட தரையில் தோண்டிப் புதைக்கக் கூடிய வழக்கம் உடையவர்கள்.

அத்தகைய மரபில் வந்தவர்கள் நரசய்யா, சீதாம்மா தம்பதியர் இவர்களுக்கு மூன்று மக்கட் செல்வங்கள். அவர்கள் இராமையா, இராமண்ணா, இராமக்கா ஆகியோர் ஆவர்.

அக்காலத்தில் முகலாயப் படையினர் தென்னிந்தியாவில் படையெடுத்து அழிவுகளையே தொழிலாகக் கொண்டிருந்தனர். குறிப்பாகப் பெண்கள் நிலை மிகவும் மோசமாக இருந்தது.

> இராமக்காவின் மானத்தைக் காப்பாற்ற வேண்டி நரசய்யா மூத்தவரான இராமையாவை அழைத்து, "தம்பி ராமய்யாவை இடக்கையில் பிடி; தங்கை இராமக்காவை வலக்கையில் பிடி" என்று ஒப்புவித்துத் தென்திசைக்குச் செல்லுமாறு வழிகாட்டினார் (சின்னான் செட்டியார்).

## இராமப்பய்யனும் இராமையாவும்

இராமையா போர்த்திறமும். குதிரையேற்றமும் நன்கு பயின்ற இளைஞன். தந்தையின் சொல்லைத் தலைமேல் கொண்டு தம்பியையும் தங்கையையும் வழிநடத்திக் கொண்டு தென் தமிழகம் வந்தார்.

> அச்சமயம் திருமலை மன்னரின் படைக்குத் தலைவன் தேவையாய் இருப்பதை அறிந்து இராமையா அதற்குத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டார். இராமையாவின் திறமையைச் சோதிக்க எண்ணி, திருமலை மன்னர் ஒரு வாளும் சாட்டையும் தந்து குதிரையில் ஏறிச் சிறுத்தையோடு போரிடச் சொன்னார். தனது திறமையை வெளிக்காட்ட கிடைத்த நல்ல சந்தர்ப்பமாக இதனைக் கருதிய இராமையா சிறுத்தையைக் கொன்றுவிட்டு திருமலை மன்னர் முன் அடி பணிந்து நின்றார் (சின்னான் செட்டியார்).

திருமலை நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் மதுரை தளவாயாகவும்,

மந்திரியாகவும் இருந்தவர் பெயர் பெற்ற இராமப்பய்யர் என்பவர் ஆவார். இவர் மதுரைக்கு அடுத்து ஏழு மைல் தூரத்தில் உள்ள சதுர்வேதமங்கலம் என்னும் கூத்தியார்குண்டு என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர் ஆவார். இவர் தான் பிறந்த ஊராகிய கூத்தியார்குண்டு கிராமத்தில் சிவாலயம் ஒன்றினை எடுப்பித்துள்ளார். அதே ஆலயத்தில் இவருக்கும் சிலை அமைந்துள்ளது. இவர் திருமலை நாயக்கரின் மிகுந்த நம்பிக்கைக்குரிய படைத் தளபதியாக விளங்கியவர். இராமப்பய்யன் அம்மானை என்னும் நூல் இவரது வாழ்க்கையை விரிவாகக் கூறுகிறது.

ஆனாலும் திருமலை நாயக்கரின் வரலாற்றில் இடம்பெற்ற இந்த இராமப்பய்யன் வேறு, சொட்டக்கார ஐயனார் சுவாமி என்று பின்னால் போற்றப்படும் இராமையா வேறு என்பது தெளிவாகிறது.

எனினும் இருவருக்கும் உள்ள ஒற்றுமை பெயர்ப்பொருத்தம் மட்டுமின்றி, இருவரும் குதிரைப்படைத் தளபதிகளாக விளங்கினர் என்பதும், திருமலை நாயக்கரின் மனமறிந்து செயல்படக்கூடிய வீரர்கள் என்பதும்தான். இராமப்பய்யன் பல போர்க்களங்களில் திருமலை நாயக்கருக்கு உதவியதைப் போலவே, இராமையா எனப்படும் சொட்டக்கார சுவாமியும் அவருக்கு பல வழிகளில் உதவியிருக்கிறார் என்பதும் அறியத் தக்கதாகும். கூடுதல் சிறப்பாக இராமையா தெலுங்கு வம்சத்தைச் சேர்ந்தவர் என்பது திருமலைநாயக்கர் இடத்து அவருக்கு பெரிய மதிப்பைப் பெற்றுத் தந்திருக்கிறது.

> நாயக்கர் நாடு பல பாளையங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றிற்குப் பெரும்பாலும் நாயக்கர் சமூகத்தினைச் சேர்ந்த கன்னடம், தெலுங்கு மொழி பேசும் பாளையக்காரர்களே தலைவர்களாக இருந்தனர்

என்பதன் மூலம் இராமையாவின்மீது திருமலை நாயக்கரின் கவனம் கூடுதலாக இருந்திருக்கிறது என்பதை அறியலாம் (காசிநாதன், 1994).

## சொட்டக்காரர் பட்டம் பெற்ற இராமையா

> இராமையாவின் திறமையை மெச்சிய திருமலை அவரது வரலாற்றைக் கூறக் கேட்டார். அக்கதை திருமலை மன்னனுக்கே துயரம் தருவதாக அமைந்திருந்தது. இராமையாவைத் தேற்றிய திருமலை மன்னன் அவரைக் கட்டியணைத்து 'சொட்டக்காரன்' என்ற விருதுப் பெயரை வழங்கினார் (சின்னான் செட்டியார்).

என்று சொட்டக்காரர் எனும் பெயர் அமைந்ததற்கான காரணத்தை குறித்து இவ்வாறு விளக்கும் சின்னான் செட்டியார், மேலும், சொட்டக்காரர் என்பதற்கான விளக்கத்தினையும் பின்வருமாறு தருகிறார்.

> சொட்டு என்ற தெலுங்குச் சொல்லுக்குச் சவுக்கு என்று பொருள். சொட்டக்காரன் என்றால் சவுக்கைக் கைக்கொண்டவன் என பொருள்படும். அதுமட்டுமின்றி, இராமையாவின் தம்பியும் தங்கையும் தங்குவதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து தந்தார்.

என்றும் குறிப்பிடுவதன் வழியாக ஒருவாறு இராமையா திருமலை நாயக்கர் உடன் இணைந்து கொண்ட வரலாற்றை அறிய முடிகிறது (சின்னான் செட்டியார்).

## செப்பேடுகள் உணர்த்தும் சில நிகழ்வுகள்

திருமலை நாயக்கர் வரலாற்றில் இராமையா இணைந்தது குறித்துப் பல கதைகள் வழங்கப்படுகின்றன. என்றாலும் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி வரலாற்றை நூலாக எழுத முயற்சித்த திரு. சின்னான் செட்டியார் திருமலை நாயக்கர் உடன் சொட்டக்காரருக்கு நிகழ்ந்த முதல் சந்திப்பைக் குறித்து மேற்கண்டவாறு பதிவு செய்துள்ளார். அதில், இராமையாவின் திறமையைப் போற்றிச் சொட்டக்காரர் என்னும் விருதுப் பெயர் அப்போதுதான் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கதை திருமலை நாயக்கருடைய வரலாற்றோடு இரண்டு சம்பவங்களில் பொருந்தியும் மாறுபட்டும் அமைகிறது.

இன்றைய விருதுநகர் மாவட்டத்தில் வத்திராயிருப்புக்கு அருகில் உள்ள இலந்தைகுளம் என்னும் ஊரில் கண்டெடுக்கப்பட்ட செப்பேடு ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறது. அந்தச் செப்பேடு கி.பி. 23.07.1654 அன்று குறிக்கப்பட்டுள்ளது. அந்தச் செப்பேட்டில் உள்ள செய்தி பின்வருமாறு அமைகிறது.

> திருமலை நாயக்கர் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் நாச்சியாரை வணங்கச் சென்று திரும்பிய வேளையில், குலையப்பாறை பருவத் தடாகம் என்ற இடத்தில் ஒரு பெண்ணும் அவளது குழந்தைகளும் தலைவிரி கோலமாக அழுது புலம்பிப் பெருத்த ஆரவாரம் செய்து கொண்டிருந்ததைக் கண்டு தனது ராச்சியத்தில் தனது விசயத்தின்போது ஏன் இப்படி ஒரு அவலம் என்று சினந்து அப்பகுதி வெள்ளிக்குறிச்சி பாளையக்காரர் சீரங்க நாயக்கரை அழைத்துக் காரணத்தை வினவினார். பாளையக்காரர் அப்பெண்ணிடம் ஓடி விசாரித்து அவளது புலம்பலுக்குக் காரணம், ஒரு புலி அவளது கணவனைக் கொன்றமை என அறிந்து திருமலை நாயக்கரிடம் விபரம் கூறினார். திருமலை நாயக்கர் பாளையப்பட்டுக்காரரை அழைத்து அந்தப் புலியைக் கொல்ல வேண்டும் என ஆணையிட வெள்ளிக்குறிச்சி சீரங்க நாயக்கர் தனது பாளையபட்டுக் குடிகளை அழைத்து, வெற்றிலை பாக்கு வாங்கி யார் அந்தப் புலியைக் கொல்லப் போகிறார்கள் என்று கேட்க மூவரையத் தேவன் முன் வந்தான். அவனும் அவனது உறவினர் 6 பேரும் சீரநாயக்கன் உடன் சென்று புலியைத் தேடிக் கொன்றார்கள். அவனுக்குத் திருமலை மூவரையத் தேவன் என்று திருமலை நாயக்கர் பட்டம் அளித்தார் (காசிநாதன், 1994).

இந்தச் செப்பேட்டுக் குறிப்பு சொட்டக்கார சுவாமியின் கதையோடு சற்று ஒத்துக் காணப்பட்டாலும் முற்றிலும் மாறானது என்பதும் புலப்படுகிறது. காரணம் இந்தச் செப்பேடு மூவரையத்தேவன் என்று தெளிவாக பெயர் குறிப்பிட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. ஆதலால், இது எவ்விதத்திலும் சொட்டக்கார ஐயனார் கதையோடு பொருந்தாது என்பதை உறுதி செய்து கொள்ளலாம்.

இதைப்போலவே மற்றொரு சான்று மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் சிந்து மேட்டுப்பட்டி என்ற ஊரிலிருந்து எடுக்கப்பட்ட செப்புப் பட்டயத்தின் வாயிலாகக் கிடைக்கப் பெறுகிறது. இந்தச் செப்புப்பட்டயம் கி.பி. 19.5.1654 அன்று பொறிக்கப்பட்டுள்ளது அச்செப்பேடு தரும் செய்தியாவது,

> திருமலை நாயக்கரின் அரண்மனைக் காவலராக அரங்கயசாமி நாயக்கன் என்பவன் இருந்தான். ஒரு சமயம் திருமலை நாயக்கர் வேட்டைக்குச் சென்ற, இவன் கூடச் சென்றான். ஒரு புலி வாலை முறுக்கிக் கொண்டு வருவதைக் கண்டு அரசரை யாதேனும் செய்து விடக்கூடும் என்று அஞ்சிக் கல்வேட்டால் இரண்டு குண்டுகள் போட்டுப் புலியைச் சுட்டு வீழ்த்தினான். அவனை மெச்சிய திருமலைநாயக்கர் ஒரு ஆபரணத்தை அவ்விடத்திலேயே பரிசளித்து முகாம் இருந்த இடத்தில் அவருக்குச் சாப்பாடு போட்டுப் பாராட்டி அரண்மனை வந்து அவன் விருப்பத்திற்கு இணங்க அவனது கிராமமான வாகைக்குளத்துக்கு நாட்டாண்மை முதன்மை வழங்கிச் செப்பேடும் தந்துள்ளார் (காசிநாதன், 1994).

இந்தச் செப்பேடு ஏறக்குறைய இராமையாவின் வரலாற்றோடு பொருந்தியதாக அமைகிறது. புலியை அடக்கிய வீரனின் பெயராகிய அரங்கயசாமி என்பது இராமையா என்பதோடு ஒத்துள்ளது. அதைப்போலவே அரங்கயசாமி புலியை அடக்கிப் பாராட்டுப் பெற்ற விதமும் சொட்டக்கார ஐயனார் சுவாமி கதை உடன் ஒத்ததாக அமைந்துள்ளது என்றாலும் இதுவும்

ஆய்வுக்குரியதாகும்.

இந்த இரு செப்பேடுகளின் வாயிலாக, திருமலை நாயக்கரின் காலத்தில் வீரதீரச் செயல்களில் ஈடுபடுகிற, மக்கள் நலனில் முன் நிற்கிற திறமையானவர்களை அவர் பாராட்டிப் போற்றி யிருக்கிறார் என்பதையும் விருதுகளும் பட்டங்களும் தந்து பதவியில் அமர்த்தி இருக்கிறார் என்பதையும் அறியமுடிகிறது.

ஆதலால் இராமையாவாகிய ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி இவ்வகையில் திருமலை நாயக்கர் ஆட்சியில் சிறப்புப் பெற்றிருக்க வேண்டும் என்று உறுதியாக நம்ப முடிகிறது.

சொட்டக்காரர் குதிரைகளின்மீது மிகுந்த விருப்பமுடையவர் என்பதைப் பல பதிவுகளின் வழியாக அறியமுடிகிறது. ஆதலால் அவர் திருமலை நாயக்கரின் ஆட்சியில் குதிரைப்படை வீரராகவோ, தளபதியாகவோ அல்லது கிராம நாட்டாமையாகவோ இருந்திருக்கலாம் என்பதற்கும் சான்றுகள் கூற முடியும். ஏனெனில், கிராம நாட்டாமைக்குக் குதிரை முக்கிய வாகனமாக நாயக்கர் காலத்தில் அரசு தரப்பிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது.

> நாட்டாமை என்று அழைக்கப்பட்டவரே நாயக்கர் காலத்தில் ஓர் நிர்வாகத்தின் பொறுப்பாளராக விளங்கினார். இவருக்குத் துணையாகக் கணக்கர் இருந்தனர். நாட்டாமைக்கு மானியமாக அறுபது பொன் அளிக்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் ஐந்து கிராமங்கள் வரை நாட்டாமைக்காரரின் பொறுப்பில் இருந்திருக்கின்றது. இவற்றைச் சுற்றிப் பார்ப்பதற்காகக் குதிரை ஒன்றும் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (காசிநாதன், 1994)

என்னும் செப்பேட்டுச் செய்தி சொட்டக்காரர் கிராம நாட்டாமையாக இருந்திருக்கலாம் என்று ஊகிக்கத் தோன்றுகிறது. காரணம் குதிரையோடு கிராமம் காத்து வரும் பணி அவருக்கு உரியது என்பதே ஆகும். அதுவே

பின்னாளில் அவர் தெய்வமான வேளையில் குதிரையில் கிராமங்களில் காவல் செய்துவருவதாகக் கும்மிப் பாடலும் குறிப்பிடுகிறது.

## குதிரைப்படைத் தலைவராகிய சொட்டக்காரர்

ஆனால், ஸ்ரீசொட்டக்கார ஐயனார் குதிரைப் படைத் தலைமை வீரராக விளங்கினார் என்றும், திருமலை நாயக்கரின் குதிரைப் படையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தினார் என்றும் திரு. சின்னான் செட்டியார் பதிவு அழுத்தமாகக் குறிப்பிடுகிறது.

திருமலை நாயக்கரின் சேனைக்குத் தேவையான பரிகள் அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுபவை. இதனால் அரசாங்கக் கருவூலம் காலியாகிக் கொண்டிருந்தது.

சொட்டக்காரர் தலைமைப் பதவி ஏற்றவுடன் இவ்வழக்கத்தைத் தடை செய்தார். அரேபிய ஆண் குதிரைகளுடன் உள்நாட்டுப் பெண் குதிரைகளைச் சேர விட்டு, புதிய கலப்பின உற்பத்தியைத் தொடங்கி வைத்தார்.

> அதனோடு குதிரைகளுக்கு லாடம் அடிக்கும் விதத்தில் பல புதிய முறைகளைப் புகுத்தவும் முயன்று வெற்றி கண்டார். இவையெல்லாம் திருமலை நாயக்கரின் செல்லப்பிள்ளையாகச் சொட்டக்காரர் ஆவதற்குக் காரணம் ஆகின (சின்னான் செட்டியார்)

என்பதன் மூலமாகத் திருமலை நாயக்கரின் ஆட்சிக்காலத்தில் இராமையா குதிரைப்படைத் தலைவராகவே விளங்கினார் என்பதும், அதுமட்டுமின்றி அவருடைய அணுக்கத்திலும் மிக நெருக்கமாக வளர்ந்தார் என்பதும் புலனாகிறது.

## திருமலை நாயக்கரின் படையமைப்பு

எந்த நேரத்திலும் கிருஷ்ணதேவராயருடைய படைகள் தனது ராஜ்யத்தைத் தாக்கக்கூடும் என்று மிகுந்த எச்சரிக்கையோடு திருமலைநாயக்கர்

இருந்திருக்கிறார். இதனால் தனது படை பலத்தைப் பெருக்குவதில் அவர் மிகுந்த முனைப்புக் காட்டி இருக்கிறார். அவருடைய படைப்பிரிவு பின்வருமாறு அமைக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு கோட்டையிலும் தகுந்த போர் வீரர்களிருந்ததோடு வேண்டிய ஆயுதங்களும், நன்முறையிற் பழக்கப்பட்ட யானைகளும், குதிரைகளும் இருந்தன. அவைகளைத் தளகர்த்தர்களிருந்து மேற்பார்த்து வந்தார்கள். அன்றியும் அத்தளகர்த்தனே அக்கோட்டையின் பாதுகாவலுக்கு ஜவாப்தாரியாகவுமிருந்து வந்தான். அதிலும் தலைநகர் மிகுந்த காவலுடனிருந்து மதுரையில் எழுபத்திரண்டு கொத்தளங்களிருந்தன. போர் நேர்ந்த பொழுது அவ்வெழுபத்திரண்டு கொத்தளங்களையும் எழுபத்திரண்டு பாளையக்காரர்களும் வந்து காத்து வந்தார்கள். அப்பாளையக்காரர்கள் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், மேற்காட்டிய அவசியத்தை நிறைவேற்றுவதற்காகவும், ஒவ்வொருவரும் சொந்தத்தில் நினைத்தவுடனே யுத்தத்துக்குப் புறப்படும்படியான நிலையுள்ள தக்க படைகளை வைத்துக்கொண்டிருந்தனர். இப்படை ஏராளமாயிருந்தது. அந்தக்காலத்திற் கட்டாயப் போர்ச்சேவக மிருந்தது. அந்தந்த பாளையப்பட்டிலுள்ள ஒவ்வொரு திடகாத்திர முள்ள குடியானவனும், அன்னியர் படையெடுத்து வந்தாலும், தாம் படையெடுக்க வேண்டியிருந்தாலும், பாளையக்காரரால் அழைக்கப்பட்டவுடனே படையில் வந்து சேர்த்துழைக்க வேண்டும். பாளையக்காரரையன்றிச் சில பிரபுக்களும், அரண்மனை உத்தியோகஸ்தர்களும், அதற்காக மானியம் அனுபவித்துக் கொண்டு தங்கள் சொந்தத்தில் காலாட்படையும், குதிரைப்படையும் வைத்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படைகளுக்கு அதிகாரிகளாக அந்தந்த நகரிலுள்ள தளகர்த்தர்களும், பாளையக்காரர்களும் மற்றைய பிரபுக்களும் அவர்கள் உறவினர்களும், யுத்தத்துக்கென்றே பிறந்த அதிர்ஷ்டமுள்ள

சில வீரர்களுமேயிருந்து வந்தார்கள். இவர்களுக்கெல்லாம் மேலாளாகச் சேனாதிபதியாகிய தளவாயிருந்தார் (கோவிந்தசாமி ஐயர், 1920).

இத்தகைய நிர்வாகத்தில்தான் சொட்டக்காரர் மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்திருக்கிறார். அதுமட்டுமின்றி, திருமலை நாயக்கர் தன்னுடைய படையில் நெருக்கமான உறவினர்களையே உயர்ந்த பதவியில் அமர்த்தி இருக்கிறார். ஆதலால் சொட்டக்காரருக்குச் செல்வாக்கு மிகுந்து இருக்கிறது என்பதை அறியலாம்.

## திருமலை நாயக்கருடனான சொட்டக்காரரின் பலமான உறவு

திருமலை மன்னர் சொட்டக்காரரிடம் காட்டிய அன்பு மட்டுமின்றி அவர்களின் தாய்மொழியான தெலுங்கு மொழிப் பாசமும் மற்றவர்களுக்குப் பொறாமையை ஏற்படுத்தின. இதைத் தவிர்க்க வேண்டித் திரும லை மன்னன் தமிழ்ப் பயிற்சி மேற்கொண்டு வந்தான். அதுமட்டுமின்றித் தனது மனைவியர்களுள் ஒருத்திக்கு மீனாட்சி என்று பெயரிட்டுத் தன் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தினான் (சின்னான் செட்டியார்).

என்று குறிப்பிடும் சின்னான் செட்டியார், மேலும், திருமலை நாயக்கர் மேற்கொண்ட தமிழ்ப் பணிகளையும் இணைத்துக் காட்டுகிறார். இத்தகைய வரலாற்றுப் பதிவுகள் திருமலை நாயக்கரின் வாழ்விலும் தெளிவாக அறியக் கிடைக்கின்றன.

## திருமலை நாயக்கரின் நிர்வாகத்திறன்

பழங்கால ஆட்சி முறையின்படி மன்னர் தனக்கு உதவியாக ஆறு பேர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து அதன்படியே இயங்குவார். இந்தக் குழுவில் அமைச்சர் முதலாக ஒற்றர் வரையும் அடங்குவர். ஆனால், திருமலை நாயக்கர் புதிய சீர்திருத்த முறையை மேற்கொண்டு இந்தக் குழு அமைப்பை

விரிவுபடுத்தினார் என்பதைச் சான்றுகளின் வழி அறிய முடிகிறது.

> அதுமட்டுமின்றி, தனக்குக்கீழ் பணிபுரியும் அந்த அலுவலர்கள் நிர்வாகத்தில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் இயன்ற அளவு சுதந்திரத்தை அவர் தாராளமாக வழங்கி இருக்கிறார். இதுகுறித்து மதுரைக் கீழக் கோபுரக் கல்வெட்டு விரிவாக விளக்குகிறது (கோவிந்தசாமி ஐயர், 1920).

இதன் மூலம் திருமலை நாயக்கர் தனது நிர்வாக அதிகாரத்தைப் பரவலாக்கினார். மேலும், தனக்கு விருப்பமானவர்களுக்குப் பதவியும் மதிப்பும் தந்து அருகில் இருத்திக் கொண்டதையும் அறியமுடிகிறது. இவ்வாறே சொட்டக்காரர் திருமலை நாயக்கரின் மதிப்பினையும் பேரன்பினையும் பெற்றிருக்கிறார் என்கிறார் சின்னான் செட்டியார்.

தொடர்ந்து சொட்டக்காரர் வரலாற்றை எழுதும் அவர், மதுரையில் மீனாட்சியம்மனுக்கு ஆயிரங்கால் மண்டபம் அமைப்பதற்கு முயன்றபோது ஏற்பட்ட போரினைக் குறித்தும் பதிவு செய்கிறார். அதனையும் திருமலை நாயக்கரின் வரலாற்றில் விரிவாகக் காணலாம்.

> திருமலை நாயக்கன் மீனாட்சியம்மன் ஆலயத்தில் ஆயிரங்கால் மண்டபம் அமைக்கவும் முயன்றான். இதற்காகத் தென்தமிழ்ப்பகுதி ஜமீன்தார்களிடம் கப்பப் பணம் வசூலிக்கப்பட்டது. ஏற்கனவே திருமலை மன்னன் மீது வெறுப்பு கொண்டிருந்த அந்த ஜமீன்தார்கள் கப்பம் தர மறுத்தனர். உட்பகை உருவாக இது காரணமாயிற்று (சின்னான் செட்டியார்).

அப்பால் லட்சம் பொன்னுக்கு ஆயிரம் பொன் வீதம் சுவாமி பூசைக்கும், 44000 பொன் சீமை உற்சவாதிகளுக்கும், ஸ்தானீகர்கள், பரிசனங்கள் முதலானவர்களுக்கு அன்னபானாதிகளுக்காகச் சுத்த சர்வ மானியமாகக்கிராமங்களும் விட்டுக் கொடுத்தார் என்பதனையும் அறிகிறோம்.

அவர் பிரார்த்தனை செய்து கொண்ட நேர்த்திக்கடன் விபரங்களின் பட்டியல் பின்வருமாறு வரலாற்றில் பதிவாகி உள்ளது.

சுவாமிக்கு இரத்தினத்திருவாசி லட்சம் பொன்

இரத்தின சிங்காசனம் லட்சம் பொன்

தெப்பக்குளத்திற்கு லட்சம் பொன்

வசந்தமண்டபம் லட்சம் பொன்

சில்லரைத் திருப்பணிகளுக்கு லட்சம் பொன் (கோவிந்தசாமி ஐயர், 1920)

இவற்றை நிறைவேற்றுவதற்குத் திருமலை நாயக்கரின் ஆட்சிக்காலத்தில் நிர்வாகத்தினர் மேற்கொண்ட முயற்சியினைக் குறித்தும் பதிவுகள் கிடைக்கின்றன. இந்த முயற்சிகளுக்குச் சொட்டக்காரர் துணையாக நின்றிருக்கிறார் என்று ஆய்வாளர் சின்னான் செட்டியார் கருதுகிறார்.

இந்த நேர்த்திக் கடன்களை எல்லாம் நிறைவேற்றுவதற்காக, திருமலை நாயக்கர் அக்ஷய வருடம், வைகாசி மாதம், பத்தாம் நாள், பூர்வபட்சம் (கி.பி. 1628, மே மாதம்) முகூர்த்தம் பண்ணினார். அதுமுதல் அளவிறந்த பணச்செலவில் வேலைகள் தொடங்கின. மிகவும் அழகும் பிரயோஜனமுமான அனேக பெரிய கட்டிடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக அனேக தூர தேசங்களிலிருந்து அதிநிபுணரான சிற்பிகள் வரவழைக்கப்பட்டார்கள். வெள்ளைக்கல், கருங்கல் வேலைகளுக்காக மலையடிகளில் கல்லுடைக்கலாயினர். காடுகளில் உள்ள மரங்களையெல்லாம் வெட்டிக் கொண்டு வந்து தள்ளினர். காளவாய்களில் மலை மலையாகச் செங்கல்கள் சுட்டு எடுக்கப்பட்டன. உற்சவ மூர்த்தி வெளியில் திருவுலாப் போந்தருளும்போது அணிந்தருள்வதற்கு விலை உயர்ந்த வச்சிர. வைடூரியங்களால் அனேக திவ்ய ஆபரணங்கள் ஆக்கப் பெற்றன. பட்டுப் பீதாம்பரங்கள் நெய்யப்பெற்றன. திருஉலாச் செல்வதற்குத் தந்தத்தினாலும்,

மரத்தினாலும் மிக வேலைப்பாடுகள் அமைந்த பெரிய இரதங்கள் செய்யப்பட்டன. ஆயிரக்கணக்கான யானைகளும். குதிரைகளும் அவைகளுக்குக் கட்டப்பட்ட சாலைகளில் பந்தி பந்தியாக நின்றன என்று பதிவிடப் பெற்றுள்ளது (கோவிந்தசாமி ஐயர், 1920).

இத்தகைய செலவுகளுக்குத் திருமலை நாயக்கர் மிகுந்த பொருள் வேண்டி விஜயநகரப் பேரரசுக்குச் செலுத்தவேண்டிய கப்பப் பணத்தை நிறுத்தி வைத்திருந்தார் என்பதையும் அறியலாம்.

திருமலை நாயக்கர் அரசாட்சி அநேகம் அரிய பெரிய கட்டிடங்கள் பெயர் பெற்றிருப்பதோடு அவர் தொடுத்த அனேக யுத்தங்களையும் அவர் அடக்கிய கலகங்களையும் நினைவூட்டுவதாக இருக்கின்றன. அவர் சிங்காதனம் ஏறினதும் முதல் முதலில், தாம் தம் முன்னோர்களைப் போல விஜய நகரத்திராயருக்குக் கட்டுப்படாது சுய அதிகாரம் செலுத்த வேண்டும் என்று நினைத்தார்- அதனால் வருடம்தோறும் அவர் செலுத்திவந்த தோப்பாப் பணத்தை நிறுத்தத் தலைப்பட்டார் என்று வரலாறு குறிப்பிடுகிறது (கோவிந்தசாமி ஐயர், 1920).

இதனால் மேற்கொண்ட பகை மிகுதியாகும். குறிப்பாக, விஜயநகரப் பேரரசின் படைகள் எந்த நேரத்திலும் தாக்கலாம் என்பதனால்.

> முப்பதினாயிரம் காலாட்படைகளைச் சேகரித்துச் சித்தமாய் இருந்தார் என சேசு சபை சாமியார்களின் (Jesuit Father) கடிதங்கள் மூலம் வெளியாகின்றது (கோவிந்தசாமி ஐயர், 1920).

இந்தப் போர் எச்சரிக்கைக் காலங்களிலும் அதன்பின் ஏற்பட்ட போர்களிலும் இராமையா திருமலைநாயக்கருக்குப் பேருதவி புரிந்து இருக்கிறார் என்று திரு. சின்னான் செட்டியார் கருதுகிறார். ஆனால் அவர் விஜய நகரப் பேரரசைப் பற்றிக் குறிப்பிடாமல் ஐமீன்தார்கள் என்றே குறிப்பிடுவதும் நோக்கத் தக்கதாகும்.

## திருமலைநாயக்கருக்குப் போருதவி

திருமலை நாயக்கரின் ஆட்சிக்கு ஊறு விளைவித்த போர்களில் சொட்டக்காரர் முன்னின்று அவருக்கு உதவி இருக்கிறார் என்று குறிப்பிடும் திரு. சின்னான் செட்டியாரின் குறிப்பு, இராமப்பய்யனின் வரலாற்றோடு தொடர்பு படுத்திக் காண வேண்டியதாயிருக்கிறது.

> திருமலையின் முன்னிலையில் சொட்டக்காரர் குதிரைப் படைக்குத் தலைமை ஏற்கப் போர் உக்கிரமாக நடந்தது. மூன்று நாட்கள் நடந்த அந்தப் போரில் சொட்டக்கார சுவாமியின் ஆற்றல் மிகுதியாக இருந்தது. எதிரிகள் சரணடைந்தனர். திருமலை மன்னன் சொட்டக்காரரைப் போர்க்களத்திலிருந்து மதுரைக்குத் திரும்பச் சொன்னான். தங்கையையும் தம்பியையும் காணும் ஆவலில் விரைந்து வந்த சொட்டக்காரருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. (சின்னான் செட்டியார்)

இந்தத் தருணத்தில் திருமலை நாயக்கருடைய அந்தரங்க வாழ்வைக் குறித்தும் அறிவது முக்கியமானதாகும். திருமலை நாயக்கருடைய மர்மமான மரணத்திலும் அவருடைய அந்தரங்கம் ஒரு காரணமாக இருந்திருக்கிறது என்பதை வரலாறு உணர்த்துகிறது. அதே அந்தரங்கம் சொட்டக்காரர் வாழ்வையும் பாதித்திருக்கிறது என்பது உணரத்தக்கது.

பொதுவாகவே மன்னர்கள் அந்தப்புரங்களில் சுகித்து இருப்பவர்கள். அதில் திருமலை நாயக்கரும் விதிவிலக்கு இல்லை. அவர் மரணமடைந்தபோது அவருடன் சேர்த்து 200 மனைவியருள் சிலரும் உடன்கட்டை ஏறினார்கள் என்று பெர்ட்ரான் சாமியார் கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

இதன் மூலம் திருமலை நாயக்கருக்கு 200 மனைவியர் இருந்தனர் என்பது உறுதியாகிறது.

## இராமண்ணா செய்த தவறு

அத்தகைய அந்தப்புரத்து மனைவியருள் ஒருத்தியாகிய அகத்தீஸ்வரி என்பவள் இராமையாவாகிய சொட்டக்காரரின் தம்பி இராமண்ணாவின்மீது மையல் கொண்டு தனது இச்சையைத் தீர்த்துக் கொண்டாள். போர்க்களத்திலிருந்து திரும்பி வந்த சொட்டக்காரருக்குத் தனது தம்பி சிக்கலில் மாட்டிக் கொண்ட செய்தி தங்கையின் மூலமாகத் தெரிய வருகிறது.

இந்தக் கொடும் செய்தி திருமலை நாயக்கருக்குத் தெரிந்தால் என்ன ஆகும்? என்று சொட்டக்காரருக்குத் தோன்றி இருத்தல் வேண்டும்.

இராமக்கா அழுது அரற்றியபடி சொட்டக்காரரிடம் சேதி சொன்னாள். செய்தி இதுதான். இராமண்ணா நல்ல அழகன்; தங்கையைப் பாதுகாப்பதோடு, அந்தப்புர இராணிகளுக்கு உதவியாயிருக்கும் வேலை.

திருமலை மன்னனின் மனைவியர் 200 பேரில் அகத்தீஸ்வரி என்பவள் இளையவள் ஆவாள். இராமண்ணா மீது இவள் ஆசை கொண்டாள். தவறு நிகழ்ந்துவிட்டது. செய்தி அந்தப்புரம் முழுக்கப் பரவியபோது குற்றத்திற்கு இராமண்ணாவைப் பலியாக்கிவிட்டு அகத்தீஸ்வரி தப்பிக் கொண்டாள். பெண் வலையில் விழுந்த பெரும் தவறை எண்ணித் தலைமறைவானான் இராமண்ணா.

> மறைந்திருந்த இராமண்ணா தங்கையின் முன்வந்தான். தனது நிலையைக் கூறி விளக்கினான். இருவரும் தப்பிச் சென்றுவிடும் திட்டத்தையும் கூறினான். ஆனால், இராமக்கா சொட்டக்காரரின் உத்தரவுப்படிதான் நடக்க வேண்டும் என்றாள். இராமண்ணா அவளின் பாதுகாப்புக் குறித்து அஞ்சினான். இராமக்காவோ தன்னைப் பற்றிக் கவலைப்படாது அவனைப் பத்திரமாக இருக்கும்படி வேண்டினாள். இராமண்ணா மதுரைக்கு வடக்கே வஞ்சி நகரம் என்ற ஊரில் சாது ஒருவரின் ஆசிரமத்தில் மறைந்து இருந்தான் (சின்னான் செட்டியார்).

இந்த வேளையில் சொட்டக்காரரின் உள்ளம் வெகுவாகப் பாதிக்கப்பட்டு இருக்க வேண்டும். தம்பி செய்த தவறுக்காகத் தான் எத்தகைய தண்டனைக்கும் உள்ளாவதற்கு அவர் தயாராக இருந்திருப்பார். தன்னை மிகவும் மதித்துப் போற்றிய மன்னனுக்கு விசுவாசம் இல்லாத இத்தகைய செய்கையை அவர் ஒருபோதும் விரும்பியிருக்க மாட்டார். அதனால் உயிரினும் பெரிதான மானத்தைக் காப்பதற்காக மன்னனிடம் தன்னை ஒப்புவிக்க முயன்றிருக்கலாம். ஆனால், அதேவேளையில் சினம் கொண்ட மன்னர் எந்த முறையில் தன்னை அணுகுவார் என்பதும், முறைதவறித் தனது தங்கைக்கு ஏதும் மானபங்கம் நிகழ்ந்தால் என்ன செய்வது என்றும் குழம்பி இருக்க வேண்டும். இதற்கும் காரணங்கள் உண்டு. திருமலை நாயக்கரின் ஒருபுறம் மிகவும் சிறப்பாக இருப்பதைப் போல அவருடைய மறுபுறம் பயங்கரமானதாகவும் விளங்கியிருக்கிறது.

## திருமலை நாயக்கரின் விசித்திரமான மனநிலை

தன் ஆட்சியில் நிலவிய சமூக முரண்பாட்டையும் சமுதாய முரண்பாட்டையும் ஒழிக்க முற்பட்டவர். அதற்காகப் பல ஏற்பாடுகளைச் செய்தவர் என்று வெளிநாட்டவரும் திருமலைநாயக்கரைப் புகழ்ந்து கூறுகின்றனர் (Dennis Hudson, 1977). திருமலை நாயக்கரின் சில செயல்களைக் கண்டு அவரிடத்துக் குறை காண முற்பட்ட வரலாற்றாசிரியர்களும் அதனை அவரிடத்துக் காணும் கரும்புள்ளிகள் எனச் சமாதானம் கொண்டனர் (Sathyanatha Aiyar, 1991).

திருமலை நாயக்கர் அக்கால மன்னர் ஆட்சிக்குரிய குணங்களையே கொண்டிருந்தார் என்றாலும் எந்தச் சமயத்தில் எவ்வாறு முடிவெடுப்பார் என்பதைக் குறித்து அவருடைய அதிகாரிகளிடத்து எப்போதும் ஓர் அச்சம் நிலையாக இருந்து வந்தது. இதற்குத் தூண்டுகோலாகப் புறம் கூறுவோர் பலரும் திருமலைநாயக்கரைச் சுற்றி எப்போதும் இருந்து வந்தனர். அரசர்களுக்குக் காதே கண் ஆனதினால் உண்மை இன்னதென நாயக்கர்

ஓராது, சொல்வார் பேச்சைக் கேட்டுக் கொண்டு செயல்படுவார் என்பதை அறியலாம்.

இதற்குச் சான்றாக, இராமப்பய்யன் கதையிலிருந்து ஒரு சம்பவத்தைக் கூற முடியும். மைசூர் போர் மிக உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த தருணம் அது. இதுவே திருமலை நாயக்கரின் முதல் போராகவும் விளங்கியது. மதுரைமீது படையெடுத்து வந்த மைசூர்ப் படைகளைத் துரத்தி மைசூர் வரை சென்று அந்த நகரை முற்றுகையிட்டு இருந்தார்.

> அந்தவேளையில் மதுரையில் இராமப்பய்யருடைய பேராற்றலையும் கீர்த்தியையும் கண்டு பொறாமை கொண்ட சிலர், நாயக்கரிடம் வந்து, "அரசே இராமப்பய்யரைத் தாங்கள் நல்லவர் என்று எண்ண வேண்டாம். அவர் மகா கபடி. நயவஞ்சகம் உள்ளவர். மகா ராஜத் துரோகி. அவர்களிடத்தில் மனத்துள் பகைமை பூண்டு. பிடித்த ராஜ்ஜியங்களை எல்லாம் தம் வசமாக்கிக் கொண்டு, தங்களையும் கொன்றுவிட்டு இந்த ராஜ்யத்தையும் ஆள எண்ணியுள்ளார். மைசூர்ச் சண்டையை முடித்துக்கொண்டு வந்ததும் தங்களைக் கொல்வது நிச்சயம். இதன் உண்மையைக் காண தாங்கள் இரண்டு வெள்ளித் தடியேந்திய கட்டியக்காரர்களை அனுப்பிக் கையோடு கூட்டி வரச் சொல்லுங்கள். அவர் உடனே வந்து விடுவாரேல் நாங்கள் கூறுவது பொய். தங்கள் ஆணைக்கு அடங்காது வாராது ஒழியின் நாங்கள் கூறுவது மெய். இதன் உண்மையைக் காண்க" என்று புறம் கூறவும் நாயக்கர் அதனை மெய் என நம்பி இரண்டு கட்டியகாரர்களை அனுப்பி அவரை மடியில் கை போட்டு அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தார் (Sathyanatha Aiyar, 1991).

நல்லவேளையாக மதிநுட்பத்துடன் செயல்பட்ட இராமப்பய்யர் தம்மீது கை போட்ட வீரர்களை வேறு சிலரைக் கொண்டு கரங்களை அறுத்து எறிந்தார். இதைக் கேள்விப்பட்ட திருமலை நாயக்கர் கடும்சினமுற்று இராமப்பய்யரின்

வருகைக்குக் காத்திருந்தார். மைசூர்ப்போர் பெருவெற்றி அடைந்தது. அதனால் இராமப்பய்யர் தனது நிலையை மிகவும் துணிச்சலோடு எடுத்துரைத்துத் திருமலை நாயக்கரின் மனநிலையை மாற்றிப் பெருமை அடைய முடிந்தது.

## மற்றொரு சான்று

திருநெல்வேலி அதிகாரியாக விளங்கிய திரு. வெங்கட நாதையா என்பவரின் மகன் தினமும் இரவில் பவனி வருவதற்காகத் தீவட்டிகளுடனும் மேள தாளங்களுடனும் ஆடல் பாடல்களுடனும் நிறையச் செலவு செய்து இருக்கிறான். இதனைக் கண்டு பொறாமை கொண்ட சிலர் திருமலை நாயக்கரிடம் கோள் மூட்டினர். அப்போது திருமலை நாயக்கர் திரிசிரபுரத்தில் இருந்து ஆட்சி செய்து வந்தார். இதைக் கேள்விப்பட்டதும் என்ன முடிவு எடுக்கப் போகிறாரோ என்று கோள் சொன்னவர்கள் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்க, விசித்திரமான மனநிலையில் திருமலை நாயக்கர் அவர்களை அப்புறப்படுத்திவிட்டுத் தானே விசாரிப்பது என்று முடிவு செய்தார். அவ்வாறே அவனை அழைத்து கணக்கு முதலிய விசாரணைகளைக் கேட்டுவிட்டுப் பவனி குறித்தும் கேட்டறிந்தார். உடனே அவனுக்குப் பயம் தொற்றிக்கொள்ள உயிர்போகும் மனநிலையில் அமைதியாக இருந்தான்.

இதனைக் கண்ட திருமலை நாயக்கர் 'இன்று இரவும் பவனியைத் தான் காணும்படி நடத்துக' என்று ஆணையிட்டார். வேறு வழியில்லாத அவன் அவ்வாறே முன்புபோல ஆடம்பரப் பவனி வந்தான். திருமலைநாயக்கர் சினந்து அவனுடைய தலையை வாங்கப் போகிறார் என்று எல்லோரும் கருதிக்கொண்டு இருக்க, அதற்கு மாற்றாக, 'அஞ்சன்மின் இப்பெருமையும் நம்மைச் சேர்வதே ஆகும்' என்று மகிழ்ந்து தினமும் அதுபோலவே செய்து வரும்படி ஆணையிட்டு அதற்காக நாளொன்றுக்கு 500 வராகனும் தந்து அவனை மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தி இருக்கிறார் என்பதையும் அறிய முடிகிறது (கோவிந்தசாமி ஐயர், 1920).

இத்தகைய எளிதில் அறிந்துகொள்ள இயலாத மனநிலையில் எப்போதும் விளங்கி வந்திருக்கிற திருமலை நாயக்கரிடம் இது போன்ற ஒரு அவமானச் சூழலில் அவர் என்ன முடிவு எடுப்பார் என்பதை எப்படி உறுதி செய்ய முடியும்? இந்த இக்கட்டான நிலை சொட்டக்காரருக்கு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகப் பெண்கள் குறித்த விஷயத்தில் வரப் போகும் அபாயம் குறித்து அவர் பெரிதும் கலங்கியிருந்தார்.

> விவரங்களையெல்லாம் கேள்விப்பட்ட சொட்டக்காரர் தர்ம சங்கடத்திற்கு உள்ளானார். பாசமா விசுவாசமா என்னும் நிலையில் மருண்டார். மன்னன் கோபம் தணிய வேண்டும். தம்பி உயிர் காக்கப்படவேண்டும். தங்கை மானமும் காக்கப்பட வேண்டும். இது மூன்றும் நடக்கத் தனக்குத் துணை செய்வார் யாரெனத் தவித்தார் சொட்டக்காரர் (சின்னான் செட்டியார்).

**பிரான்மலைச் சன்னாசியின் உதவி**

மதுரையிலிருந்து தஞ்சைக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது பிரான்மலை என்னும் குன்றமாகும். இது சங்ககாலத்து மன்னனாகிய பாரியாண்ட பறம்புமலையின் மற்றொரு பெயராகும். திருக்கொடுங்குன்றம் என்றும் இதற்குப் பெயருண்டு. இந்த மலை மேற்குத் தொடர்ச்சி மலையின் நீட்சியாக நத்தம், திண்டுக்கல் மலைகளின் தொடர்ச்சியாக விளங்குகிறது. சொட்டக்காரர் குதிரைப்படை வீரராதலால் மதுரையிலிருந்து தஞ்சைக்குச் செல்லும்போதெல்லாம் பிரான்மலையிலிருக்கும் எட்டுமடம் என்னும் ஆசிரமத்தில் தங்கிச் செல்வதனால், அங்குள்ள ஒரு துறவியுடன் நட்பு ஏற்பட்டிருந்தது. இந்த இக்கட்டான சூழலில் தனக்கு உதவுபவர் அவரே என்று சொட்டக்காரர் அவரை நம்பிப் புறப்படத் துணிந்தார்.

> மதுரையிலிருந்து தஞ்சைக்கு ஓலை கொண்டு போகும் வழியில் பிரான்மலை என்னும் ஊர் உண்டு. அங்கே எட்டு மடம் என்னும்

இடத்தில் இருக்கும் சன்னாசி ஒருவரின் நினைவு வந்தது சொட்டக்காரருக்கு. துயரோடு வருவோர்க்கு ஆறுதலும் ஆதரவும் தரும் அவரிடம் உதவி கேட்கலாமா என எண்ணினார் சொட்டக்காரர் (சின்னான் செட்டியார்).

மக்கள் கதைப்போக்கில் மற்றொரு விதமாகவும் இந்தச் சன்னாசியைக் குறித்து விளக்குகின்றனர். பிரான்மலையில் அருள்புரியும் திருக்கொடுங்குன்றத்து மங்கைபாகர் சொட்டக்காரர்மீது பரிவு கொண்டு அவர்களைக் காப்பதற்காகத் தனது சீடனாகிய சன்னாசியை அவருடன் துணைக்கு அனுப்பினார் என்கிறார்கள். எவ்வாறாகிலும் சொட்டக்காரருக்குச் சன்னாசி என்பவரின் உறவும் ஆதரவும் கிடைத்தது உறுதியாகியுள்ளது.

**தலைமறைவு**

இராமக்காவும் சொட்டக்காரரும் மாறுவேடம் பூண்டு இரவோடு இரவாக மதுரை விட்டு நீங்கினார். வஞ்சி நகரத்தில் இருந்த தம்பியைக் கண்டவுடன் அழைத்துக்கொண்டு பிரான்மலை நோக்கிச் சென்றனர் மூவரும். சன்னாசியைக் கண்டு வணங்கித் தனக்கு உதவ வேண்டினார் சொட்டக்காரர். சன்னாசி அவருக்கு ஆறுதல் கூறி அபயம் அளித்தார் (சின்னான் செட்டியார்).

சொட்டக்காரர் இவ்வாறு தலைமறைவு மேற்கொண்டதற்குக் காரணம் உடனடியாகத் திருமலை நாயக்கரிடமிருந்து ஏற்படும் சினத்தைத் தவிர்ப்பதற்காகவேயாகும். அதுமட்டுமின்றித் தனது தங்கையைத் திருமலை நாயக்கரிடமிருந்து காப்பதும் அவருக்கு முதல் நோக்கமாக இருந்திருத்தல் வேண்டும். ஆதலால், மன்னனின் சினம் தணிந்தபின்னர் உண்மை நிலை கூறி அபயம் வேண்ட அவர் கருதியிருக்கலாம். எப்படியனாலும் மதுரையை விடுத்து நீங்கி விடுவது என்ற உறுதியிலேயே சன்னாசியின் துணையை நாடிப் பிரான்மலைக்கு வந்து சேர்ந்திருக்கின்றனர். சன்னாசியும் சொட்டக்காரரின்

திட்டத்தை ஏற்றுக் கொண்டு மறைந்திருந்து வாழ்வதை ஒப்புக் கொண்டு திருமலை மன்னனின் நிலை என்னவென்று அறியும்வரை அவர்கள் மறைந்து இருக்க வேண்டும் என்றார் சன்னாசி.

> பிரான்மலைக்கு அடுத்த தொடர் மலைப்பகுதியில் சோலைமலை என்று ஒன்று உண்டு. சொக்கம்பட்டி என்னும் சிற்றூரைச் சேர்ந்தது அது. அம்மலையில் சோலையும் சுனையுமாய் ஒரு சமவெளி இருந்தது. சன்னாசி அங்கிருந்து தவம் செய்வது வழக்கம். இம்மூவரையும் அங்கே தங்கியிருந்து வாழும்படி யோசனை கூறினார் சன்னாசி (சின்னான் செட்டியார்).

## நாயக்கர் ஆட்சிக்குட்பட்ட சொக்கம்பட்டி

திருமலை நாயக்கரின் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளாக திருநெல்வேலி, திருவனந்தபுரத்தில் ஒரு பகுதி, மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, மணப்பாறை, கோயம்புத்தூர், திரிசிரபுரம் ஆகியன ஆகும். இந்த நாடுகளின் அமைப்பில் சொக்கம்பட்டி மணப்பாறைப் பிரிவில் லிங்கம நாயக்கர் என்பவரின் கட்டுப்பாட்டின் கீழ் விளங்கியிருக்கிறது.

> மருங்காபுரி பூச்சி நாயக்கர். நத்தம் லிங்கம நாயக்கர், குமாரவாடி லக்கய நாயக்கர், மடுவூர் நாயக்கர், தோகைமலை நாயக்கர், பிள்ளை விழுங்கி முத்திநாயக்கர், ராமகிரி சாமி நாயக்கர் ஆகியோர் கொண்ட குழு இன்றைய மணப்பாறைத் தாலுகாவைப் பல பிரிவுகளாக கொண்டு திருமலை நாயக்கருக்கு ஆட்சி செய்து வந்திருக்கிறது (கோவிந்தசாமி ஐயர், 1920).

இந்த வரிசையில் உள்ள நத்தம் லிங்கம நாயக்கரின் ஆளுகையின் கீழ் சொக்கம்பட்டி, வேலாயுதம்பட்டி உள்ளிட்ட மலைக் கிராமங்கள் விளங்கியிருக்கின்றன. லிங்கம நாயக்கர் சொட்டக்கார சுவாமி கதையில் மிகவும் தொடர்புடைய மாந்தராவார்.

## திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் ஊர் அமைப்பு முறை

திருமலை நாயக்கரின் ஆட்சிக்காலத்தில் நிர்வாக முறைமையைச் சரியாகப் பின்பற்ற வேண்டி பெரும்பிரிவுகள் பாளையப்பட்டுகளாகப் பகுக்கப்பட்டிருந்தன. அதுபோலவே ஒவ்வொரு ஊரும் அந்தந்தச் சூழலுக்கேற்பப் பெயர் குறிப்பிட்டு அழைக்கப் பெற்றுள்ளன.

> கிராமங்கள் அதனதனுடைய காத்திரத்திற்கும் பிர தானியத்திற்கும் தக்கபடி பல்வகைப்பட்டன வாயிருந்தன. அக்கிராமங்களுக்கு ஆங்குள்ள வீடுகளின் எண்ணிக்கையைக் கொண்டும் வசிக்கும் குடியின் ஜனத் தொகையைக் கொண்டும் வசிக்கும் வகுப்பாரைக் கொண்டும், பெயர்கள் அமைந்திருந்தன. தெலுங்கர் அல்லது கன்னடத்தர் வசித்த கிராமங்களுக்கு ஊர் என்றும், கள்ளர்கள் வசித்த சிறு கிராமங்களுக்குப் பட்டி அல்லது குறிச்சியென்றும், கோட்டை மதிலாற் சூழப்பட்ட கிராமங்களுக்குக் கோட்டை என்றும், நன்செய் நிலங்கள் நிறைந்து, பிராமணர்களுக்குச் சொந்தமானவைகளுக்கு மங்கலம் என்றும் மற்றைய சாதாரண கிராமங்களுக்குக் கிராமம் அல்லது குடி என்றும் பெயர் (கோவிந்தசாமி ஐயர், 1920).

இந்த அமைப்பு முறையில் மலைவாழிடமாகவும் சிற்றூராகவும் விளங்கியது சொக்கம்பட்டியாகும். இதன் அருகில் அமைந்துள்ள கொட்டாம்பட்டி, வேலாயுதம்பட்டி ஆகிய ஊர்களும் பட்டி என்ற பெயரிலேயே அமைந்திருக்கவும் காணலாம். இந்த ஊர்களை அணைத்ததுபோலவும் பிரான்மலைத் தொடரின் நீட்சியாகவும் அமைந்ததே சோலைமலையாகும். இந்தச் சோலைமலையில்தான் சன்னாசி சொட்டக்காரரை மறைந்திருக்கும்படி யோசனை கூறினார்.

சன்னாசி மறைந்திருக்கக் கூறியதற்கும் காரணம் உண்டு. திருமலை நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் நீதிமுறை அத்தனை சிறப்பாக

நடைபெறவில்லை என்பதை வரலாற்றுக் குறிப்புகள் தெளிவுபடுத்துகின்றன. மன்னரே நிலையான நீதிமுறையைப் பின்பற்றவில்லை. ஆதலால், மற்றவர்களின் நிலையைப் பற்றித் தனித்துக் கூறத் தேவையில்லை. அதுமட்டுமில்லாமல் சொட்டக்காரருக்கு நேர்ந்திருக்கிற சிக்கல் திருமலை நாயக்கரோடு பலவிதங்களில் அந்தரங்கத் தொடர்புடையதாகும். ஆதலால் அவருடைய உளநிலை அறிந்தே சரியான சமயத்தில் இதனை வெளிப்படுத்த வேண்டும் என்று சன்னாசி கருதியிருக்கலாம்.

## திருமலை நாயக்கரின் நீதிமுறை

திருமலை நாயக்கரது அரசாட்சி மன்னன் தன் இஷ்டம்போல் செலுத்தும் சுயாதிகார ஆட்சியே ஆகும். சில சமயங்களில் இரண்டொரு தவறுகளைச் செய்த போதிலும் அது பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதம் இல்லை என்பதாகவே இருந்தது எனினும் அது சற்று வேடிக்கையாகவே இருந்தது.

> திருமலை நாயக்கர் நீதிமன்றத்திலிருந்து நீதிகூறும் விதமும் சற்று மாறுபாடு உடையதாகும். ஞாயஸ்தலத்தில் வந்து இருந்துகொண்டு ஞாய விசாரணை செய்வது அவருடைய வழக்கம். வாதி, பிரதிவாதிகளுடைய குலம். கோத்திரங்கள் ஏற்றவாறும் சாதி சாரப்படியும் ஞாயம் தீர்க்கப்படும். இதற்கு அரசர் நன்றாய்ப் படித்த பிராமணர்களை ஆலோசனைக்காரர்களாக வைத்துக்கொண்டு அவ்வழக்குகளை முடிவு செய்வார். அக்காலத்தில் ஜனங்கள் அத்தீர்ப்பைப் பாரபட்சமில்லாததாகவும், ஞாயாயமானதாகவும் கருதி வந்தார்கள். ஒருவன் சாதாரணமாக ஒரு வழக்கைக் கொண்டுவர விரும்பினால் அவன் முதலாவது அவ்விடத்தில் உள்ள அனைவருக்கும் நல்ல சாப்பாடு போட வேண்டும். அல்லாமலும், அரசர் அவ்வழக்கை அன்பாய் ஏற்றுக்கொள்வதற்கு அவருக்கும் வேண்டிய வெகுமதிகள் கொடுக்க வேண்டும், பாளையப்பட்டுகளின் அனேகமாக எல்லா

> வழக்குகளையும் பாளையக்காரர்களே முடிவு செய்து வந்தார்கள். அவர்கள் செய்து வந்த தீர்ப்புகள் தலைநகரில் அரசால் செய்யப்படும் தீர்ப்புகளைக் காட்டிலும் மிகவும் ஞாயமாக இருந்தன (கோவிந்தசாமி ஐயர், 1920)

என்பதன் மூலம் திருமலை நாயக்கரின் காலத்தில் வழங்கிய வினோதமான நீதிமுறை குறித்தும் அறிந்துகொள்ள முடிகிறது.

## திருமலை நாயக்கரின் காலத்துப் பாவங்களும் தண்டனைகளும்

திருமலை நாயக்கரின் காலத்து ஆட்சி முறையில் நீதிபரிபாலனம் வேடிக்கையாக இருந்தபோதும் சில விஷயங்களில் சமூக ஒழுங்கு கடைபிடிக்கப்பட்டது. குறிப்பாக, தெய்வ வழிபாட்டினை முறையாக மக்கள் செய்து வந்தனர். சிறுதெய்வ வழிபாடும் பெண் தெய்வ வழிபாடும் சிறப்புற்றிருந்தது. பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பெரும்பாவமாகக் கருதப்பட்டன.

> நாயக்கர் காலத்து மக்களிடையே பசுவையும் குறிப்பாகக் காராம்பசுவையும் பிராமணரையும், பெண்ணையும், பெற்ற தாயையும் புனிதமான இடங்களிலோ பிற இடங்களிலோ கொலை செய்வது கொடிய பாவமாகக் கருதப்பட்டது. மேலும் கோயிலில் எரிந்து கொண்டிருக்கும் விளக்கினை நிறுத்துவதும் பாவமாக எண்ணப்பட்டது. மக்கள் பெருமாள், ஈசுவரன், மீனாட்சி போன்ற தெய்வங்களுக்கு எதிராகச் செய்யும் செயலைக் கண்டு அஞ்சினார்கள். கம்பத்தடியான், கருப்பசாமி, முனுசாமி போன்ற கிராமதெய்வங்களுக்கும் மக்கள் அஞ்சி வாழ்ந்தார்கள் என்பதைச் செப்பேடுகளில் காணப்படும் ஓம்படைக்கிளவிகள் உணர்த்துகின்றன (காசிநாதன், 1994).

அதைப் போலவே, மன்னன் தான் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும்

தெய்வத்தையே சாட்சியாகக் கொண்டிருந்தான் என்பதையும்,

> திருமுருகன்பூண்டிச் செப்பேட்டில் பத்திரகாளியம்மன், ஐயனார், மீனாட்சி சொக்கர் ஆகிய தெய்வங்களே சாட்சியென்று தெய்வங்களைச் சாட்சியாகக் கூறி நீதிவழங்கும் நெறியும் இருந்துள்ளது (காசிநாதன், 1994).

## திருமலைநாயக்கர் ஆட்சிக்காலத்தில் விளங்கிய பெண் சிறுதெய்வங்கள்

திருமலை நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் பெருந் தெய்வங்களுக்கு இணையாக சிறு தெய்வங்களும் குறிப்பாகப் பெண் தெய்வங்களும் மிகுதியாக வழிபடப்பட்டு இருக்கின்றன. நாட்டுப்புறங்களில் உறைந்த இந்தச் சிறுதெய்வங்கள் மீதும் மக்கள் பயமும் பக்தியும் கொண்டிருந்தனர் என்பதைப் பல செப்புப்பட்டயங்களின் மூலமாக உணர முடிகிறது.

> முனுசாமி, கம்பத்தடிக் கருப்புசாமி, ஐயனார் போன்ற ஆண் தெய்வங்களோடு அல்லியம்மாள், பொம்மயக்கா, நாட்டாச்சியம்மன் போன்ற பெண் தெய்வங்களும் அருள் பெற்று விளங்கி இருக்கின்றன (காசிநாதன், 1994).

தெய்வப் பெயர்களில் காணப்படும் அக்காள் என்னும் முற்று ஸ்ரீசொட்டக்கார ஐயனாரின் தங்கையாகிய இராமக்காவுக்கும் பொருந்துவது எண்ணத் தகுந்ததாகும்.

இந்தக் காரணங்களால் சொட்டக்காரர் ஒருபுறம் ஆறுதலும் மறுபுறம் துன்பமும் அடைய நேரிட்டது. தனது தம்பியாகிய இராமண்ணா செய்தது விசுவாசத் துரோகமாகவும், பெண்பாவமாகவும் அவருக்குத் தோன்றியது. அதேவேளையில், நாயக்கரின் ஆட்சியில் தனது தங்கையின் மானத்திற்கு எவ்விதக் களங்கமும் வந்து விடாது. ஆதலால் இந்தச் சூழலில் தலைமறைவாக இருந்து பின்னர் சரியான தருணத்தில் திருமலை நாயக்கரிடம் முறையீடு செய்வதே நல்லது என்று அவர் கருதியிருக்கிறார்.

## லிங்கம நாயக்கரிடம் உதவி

அரச குற்றமும் அரசனது சினமும் எத்தனை அபாயம் உடையது என்பதைச் சன்னாசி நன்கு உணர்ந்திருந்தார். ஆதலால், கூடிய வரையிலும் எத்தனை வேகமாக இந்தச் சிக்கலைத் தீர்க்க முடியுமோ அத்தனை வேகமாகத் தீர்க்க வேண்டும் என்று அவர் கருதினார். திருமலை நாயக்கரின் நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமான நத்தம் பாளையக்காரர் லிங்கம நாயக்கரைச்சந்தித்து இதைக்குறித்து விவாதிக்க முடிவு செய்தார். ஆனால் தனது எண்ணத்தைத் தன்னை நாடி வந்த, அடைக்கலம் புகுந்த அவர்களிடம் கூறினால் வருத்தப்படுவார்கள் என்று கருதி இதை ரகசியமாகவே செய்திருக்கிறார்.

> நால்வரும் மலையை விட்டுச் சோலை மலையை நோக்கி நடந்தனர். சன்னாசியின் நாயும் உடன் சென்றது. சன்னாசி பாதுகாப்பான இடத்தைக் காட்டிவிட்டு நாயைத் துணைக்கு வைத்து விட்டு நத்தம் லிங்கம நாயக்கரைப் பார்க்கப் புறப்பட்டார். மலையில் மூவரும் மகிழ்ச்சியாக இருந்தனர். சன்னாசியின் யோசனைப்படி நடுப்புதுப்பட்டி சாத்தான் அம்பலம் அவர்களுக்கு பால். தயிர். சமையல் பொருள்கள் தந்து உதவி வந்தனர். எல்லாம் ரகசியமாகவே நடந்தது. லிங்கம நாயக்கரைத் தேடிச்சென்ற சன்னாசி அவன் கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டு இருப்பதைக் கண்டார் (சின்னான் செட்டியார்).

முற்றிலும் இயற்கை கொலுவீற்றிருக்கும் மலைப்பகுதிகளில் புகுந்த சொட்டக்காரர், இராமண்ணா, இராமக்கா மூவருக்கும் கவலைகள் சற்று மறைந்து போயின. சன்னாசியின் ஆலோசனையின்படி தங்களைக் கவனித்துக் கொள்ளும் கிராம மக்களின் தூய அன்பு அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. அவர்கள் ஆனந்தமாக அந்த இடத்தில் வசித்தார்கள் என்பதற்குச் சான்றாகக் கிராம மக்கள் இன்னும் அவர்கள் தடயங்களைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள். சொட்டக்காரர் தாம்பூலம் தரித்தபோது

பயன்படுத்திய சுண்ணாம்பின் மிச்சம் படிந்த பாறை இன்றும் வெள்ளை வண்ணம் பூசப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதைப்போலவே, இராமக்கா மஞ்சள் தேய்த்துக் குளித்த சுனைப்பகுதியில் அந்த மஞ்சள் அடையாளம் இன்றும் வண்ணம் தீட்டப்பட்டு வழிபடப்பட்டு வருகிறது.

## அரசாணையின் உக்கிரம்

ஆனால். இதற்குள் விதி வேறு விதமாக விளையாடி விட்டது. திருமலை நாயக்கர் செய்தியறிந்து கடுஞ்சினம் கொண்டு பழிவாங்கத் துடித்திருக்கிறார். திருமலை நாயக்கருடைய பார்வையில் சொட்டக்காரர் விசுவாசம் தவறியிருக்கிறார், அவருடைய தம்பி மன்னிக்க முடியாத இராஜத் துரோகம் செய்திருக்கிறார், இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் தப்பித் தலைமறைவாகி இருக்கிறார்கள் என்னும் மூன்று பெரும் குற்றங்கள் அவருக்குக் கடுஞ்சினத்தை வரவழைத்து இருக்க வேண்டும். ஆதலால், செய்தியின் தன்மை பற்றி வெளியில் கூறாமல் அத்தனை பாளையக்காரர்களுக்கும் ஓலை அனுப்பிச் சொட்டக்காரரைக் கண்ட இடத்தில் கைது செய்யும்படி கடுமையான உத்தரவிட்டிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் சன்னாசி லிங்கம நாயக்கரைப் பார்க்க நத்தத்திற்குச் சென்ற அதேவேளையில் திருமலை நாயக்கர் அவரை மதுரைக்கு அழைத்து தனது அந்தரங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இதனைப் பின்வருமாறு சின்னான் செட்டியார் பதிவு செய்துள்ளார்.

லிங்கம நாயக்கனைத் திருமலை மன்னன் அவசரமாய் அழைத்ததாகவும். தன்னைத் தேடி வரும் யாரையும் திருப்பி அனுப்ப வேண்டாம் என லிங்கம நாயக்கர் ஆணையிட்டு உள்ளதாகவும் வீரர்களின் மூலமாய்ச் செய்தி அறிந்தார் சன்னாசி.

ஜமீன்தார் வரும்வரை காத்திருக்க முடிவு செய்தார் சன்னாசி. மூன்று நாட்கள் கழிந்தன. லிங்கம நாயக்கன் துறவியை வரவேற்றான். தான் சென்று

வந்த காரணம் சொன்னான்.

> போர் முனையில் இருந்து திரும்பிய திருமலை சினம் கொண்டு தண்டிக்க முடிவு செய்ததாகவும், 72 பாளையக்காரர்களுக்கும் ஓலை அனுப்பி உள்ளதாகவும், எங்கிருந்தாலும் கைது செய்து கொண்டு வருக என்றும் ஆணையிட்டிருப்பதாகக் கூறினான் (சின்னான் செட்டியார்).

## இக்கட்டான சூழலில் சன்னாசி

இந்தச் செய்திகளை எல்லாம் அறிந்த சன்னாசிக்கு என்ன முடிவு செய்வது என்று தெரியவில்லை. ஆனால், மிகவும் எச்சரிக்கையாகச் சொட்டக்காரர் பற்றிய எந்தத் தகவலையும் லிங்கம நாயக்கரிடம் வெளிப்படுத்தவில்லை. அவர் அறிந்து கொண்ட செய்திகளின்படி படைவீரர்களுக்கு உத்தரவிடப்பட்டது என்பது அவருக்குக் கலவரத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும். நிலைமை எல்லை மீறிவிட்டது என்பதை அறிந்து அவர் தான் சென்ற காரியத்தைக் குறித்து லிங்கம நாயக்கரிடம் மறைக்க வேண்டியதாயிற்று.

> சன்னாசி வந்த காரணம் கேட்டான் லிங்கம நாயக்கன். தன் எண்ணம் பலிக்காமல் போகும் என்பதனால் சன்னாசி பொய் சொல்ல வேண்டியதாயிற்று. தற்செயலாய் நத்தம் வந்ததாகவும் நாய்க்கருக்கு உடல் நலம் இல்லை என்றும் நலம் கண்டு போக வந்ததாகவும் சன்னாசி பொய் சொன்னார் (சின்னான் செட்டியார்)

சன்னாசி பொய் சொன்னதற்கும் தகுந்த காரணம் உண்டு. இந்த இடத்தில் திருமலை நாயக்கரின் படை வீரர்களைப் பற்றியும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

## திருமலை நாயக்கரின் படைவீரர்கள் நிலை

திருமலை நாயக்கரின் போர்ப் படையில் இருந்த வீரர்களுக்குப்

பொதுநல உணர்ச்சியும், ராஜ விசுவாசமும், யுத்தாபேக்ஷையும், போர் வெற்றியால் வரும் கௌரவத்தின் உயர்வும் கொஞ்சமும் தெரியாது. இவர்கள் யுத்தப் பயிற்சி சிறிதே உடையவர்களாக இருந்த போதிலும் ஒழுங்கற்றவர்களாகவே இருந்தார்கள். கொள்ளை அடிக்கலாம், முன்னேற்றத்தை அடையலாம் என்ற எண்ணம் இருக்கும் அளவும் அவர்கள் தங்கள் தலைவர்களுக்கு அடங்கி ஒழுங்காய் இருப்பார்கள். இல்லையேல் தங்கள் தேசத்துக்கு என்ன கெடுதி வந்துவிடுமோ? அரசன் என்ன செய்து விடுவானோ? என்ற அச்சத்தினால் ஒருக்கால் அடங்கிக் இருந்தாலும் இருப்பார்கள். இக்காரணங்கள் பற்றி அல்லாது அவர்கள் ஒருக்காலும் ஒழுங்காய் இருக்கவே மாட்டார்கள். அல்லாமலும் அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் பொறாமையும் கொண்டிருந்தனர். யாராவது ஒரு பாளையக்காரரைக் கொஞ்சம் அசட்டை பண்ணினாலும் கொஞ்சம் குறைவாக நினைத்தாலும் போதும் உடனே அவர்களுக்குக் கோபம் வந்துவிடும். யுத்தகளத்தில் நல்ல சமயத்தில் படுத்துக்கொண்டு விடுவார்கள். சைனியமும் சிதைப்பட்டுப் போய்விடும் (கோவிந்தசாமி ஐயர், 1920).

இதன் மூலமாக திருமலை நாயக்கரின் படைவீரர்கள் நிலையை உணர்ந்து கொள்ள முடிகிறது.

இத்தகைய குணநிலை உடைய படை வீரர்களே சொட்டக்காரர், இராமண்ணா, இராமக்கா ஆகியோரைத் தேடி மன்னனின் ஆணை பெற்றுச் சொக்கம்பட்டி மலைப்பகுதிகளில் குவிந்து இருக்கின்றனர். இவர்களுக்கு மன்னனின் அந்தரங்கம் என்ன என்பதும் தெரியாது. சொட்டக்காரரின் மகிமையும் புரியாது என்பதைத் தனித்துச் சுட்ட வேண்டியதில்லை.

**முடிவான முடிவு**

சன்னாசி இல்லாத வேளையில் தங்களைச் சூழ்ந்துகொண்ட

நாயக்கரின் படைகளோடு போரிடுவது அறிவீனம் என்பதோடு, தான் குற்றவாளியாகக் கைது செய்யப்பட்டுத் திருமலை நாயக்கர் முன்பு நிறுத்தப்படுவது மாபெரும் பழி என்பதனையும், இராமக்காவின் பரிதாபகரமான நிலையையும் எண்ணிப் பார்த்த சொட்டக்காரர் மானத்தைக் காக்கும்பொருட்டுத் தீர்க்கமான முடிவுக்கு வந்தார்.

> சோலைமலையைத் திருமலை நாயக்கரின் குதிரைப் படைகள் சுற்றி வளைத்து இருந்தன. சன்னாசி பதறினார். சொக்கம்பட்டி ஊர்மக்களும் சுற்றி இருக்கக் கண்டார். ஏதோ நடந்து விட்டது என ஊதித்தார். கூட்டத்தைப் பிளந்து உள்ளே சென்று பார்த்தார். அங்கே மூவரும் பிணமாகக் கிடந்தனர். அம்பு ஒன்றுபட்டு நாயும் பிணமாகக் கிடந்தது. முடிவை எண்ணி வருந்தினார் சன்னாசி (சின்னான் செட்டியார்).

## நடந்தது என்ன?

சொட்டக்காரர் மறைந்திருந்த செய்தி எவ்வாறோ கசிந்து திருமலை நாயக்கரின் குதிரை படைவீரர்களுக்குத் தெரியவந்தது. இந்த ரகசியத்தைக் கூறியவர் வழிகாட்டுதலின்படி படைவீரர்கள் மலையை முற்றுகையிட்டு இருக்கின்றனர்.

தங்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் வந்துவிடாது என்று நம்பியிருந்த அந்த மூவருக்கும் படை சுற்றி வளைத்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கணநேரத்தில் சொட்டக்காரர் என்ன செய்தார் என்பதை குதிரைப் படை தலைவன் மூலமாகச் சின்னான் செட்டியார் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

குதிரைப் படைத்தலைவன் சன்னாசியைக் கண்டு நடந்ததைக் கூறினான். மன்னரின் ஆணைப்படி தேடிப் புறப்பட்டு, பள்ளப்பட்டி வந்ததாகவும், ராவுத்தர் ஒரு செய்தி சொன்னதாகவும் சொன்னான். ராவுத்தர் குதிரைப் படை வீரர்களிடம் சொன்னார்; அவர்களுக்கு ஆர்வம் வந்து மலையை முற்றுகையிட்டனர்.

இராமக்கா சுனையில் நீர் மோந்து கொண்டிருந்தாள். இராமண்ணா கையில் வாளோடு உலாவிக் கொண்டிருந்தான். இந்தச் சமயத்தில் குளம்படிகள் கேட்டு. 'அண்ணா ஆபத்து' என்று அலறினாள். வாளெடுத்து வந்தான்.

சண்டை இன்றிக் கைது மட்டும் செய்ய உத்தரவு பெற்று வந்த வீரர்கள் ஒருகணம் திகைத்தனர். சொட்டக்காரர் அங்கு வந்து தம்பியைத் தடுத்தார்.

> 'அவர்களோடு சண்டை வேண்டாம். மானத்தைக் காக்க வேண்டும். தங்கையைக் கொல்' என்றார். அவ்வாறே செய்தான் தம்பி. தம்பியை அண்ணன் கொன்றுவிட்டு அதே கத்தியைக் கொண்டு தன் உயிரையும் குடிக்கச் செய்தார். நாய் நிற்காது குரைக்க அதை மட்டும் தான் அம்பு விட்டுக் கொன்றதாகக் குதிரைப் படைத்தலைவன் சன்னாசியிடம் சொன்னான் (சின்னான் செட்டியார்).

எதிரிகளின் கரங்களில் பிடிபட்டுக் குற்றவாளியாகவும். கைதி ஆகவும் விரும்பாத சொட்டக்காரர் எடுத்த முடிவு தெய்வாதீனமானது ஆகும். இந்த வருத்தத்திற்குரிய சூழலுக்குக் காரணம் தனது தம்பியே என்று அவர் கருதினார். தங்களின் தங்கையின் வாழ்க்கையைப் பாழாக்கிவிட்ட பெரும்பழி தம்பிக்கு உரியது என்பதனால் அவன் கரங்களாலேயே தங்கையைக் கொலை செய்யச் சொன்னார் என்பதையும் அறிய முடிகிறது. அந்தப் பழிக்காகவும் இராஜ விசுவாசத்தை மீறிய குற்றத்திற்காகவும் தான் ஒரு குதிரைப்படைத் தலைவனாக இருந்து தண்டனை தருவதைப் போலத் தம்பியை தன் கைகளிலேயே கொன்று இருக்கிறார். தனது இராஜ விசுவாசத்திற்கு மாறாகத் தன்னைப் பிடிக்க வந்த படைகளை எதிர்த்து அவர் விரல் கூட உயர்த்தாத வீரராகத் திகழ்ந்திருக்கிறார். தன்பழிக்கஞ்சியும் அரசர் முன் முகம் காண முடியாத துன்பத்தாலும் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டு இறந்திருக்கிறார் என்பதைக் கிராம மக்கள் இன்று வரை கதையாகச் சொல்லிப் போற்றுகிறார்கள்.

## தெய்வம் ஆயினர்

போர்க்களத்தில் புறமுதுகு காட்டாமலும் தோற்று ஓடாமலும் எதிரிகளின் இலக்குக்கு இரையாகாமலும் தன் உயிரைத் தானே மாய்த்துக்கொள்ளும் வீரமரணத்தை அம்மூவரும் எய்தினர்.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்

தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே

என்பதாக, இந்த வீர மரணம் அனைவராலும் மெச்சிப் போற்றப்பட்டது (புலியூர்க்கேசிகன், 2010). இன்றுவரையும் அது வழிபாடாகத் தொடர்ந்து வருகிறது.

தற்கொலைச் செய்தி அனைவருக்கும் எட்டியது. மாலைக்குள் லிங்கம நாயக்கர் வந்தார். துறவியின் கண்களைப் பார்த்துவிட்டு, பிணங்களைப் பார்த்தார். எல்லாவற்றையும் விசாரித்துத் தெரிந்து கொண்டார்.

> ஊர் மக்களைக் கூட்டி இறந்தவர்கள் மானமுடைய வீர குலத்தினர். அவர்களை அடைக்கலம் தந்து பாதுகாத்த ஊர்மக்களின் விசுவாசம் போற்றத்தக்கது என்றார். ஊர் மக்கள், '"இறந்தவர்கள் எங்கள் உறவினர்கள் ஆயினர். அதனால் எங்கள் குல வழக்கப்படி அவர்களை இங்கேயே புதைப்போம்; வழிபாடு செய்வோம்"' என்றனர். நத்தம்பாளையம் முழுமையும் செய்திகேட்டுக் கூடியது (சின்னான் செட்டியார்)

தங்களை அடைக்கலம் என்று நாடிவந்த விருந்தினர்களைக் காக்க முடியாத குற்ற உணர்ச்சிக்குக் கிராம மக்கள் ஆளாயினர். அதனால் அவர்களுக்கு வருத்தம் மேலிட்டது. தங்களைக் காக்கும் தெய்வமாக அவர்களைப் போற்றத் துணிந்தனர்.

## நிறைவுச் சடங்குகள்

குற்றவாளியாகக் கைது செய்து தண்டனை வழங்க காத்திருந்த திருமலை மன்னருக்கு நடந்த சம்பவங்கள் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்க வேண்டும். தான் எத்தனை தவறுகள் செய்தபோதும் மக்களின் பழிச்சொல்லுக்கு ஆளாகும் குற்றத்தை அவர் ஒருபோதும் புரிந்ததில்லை என்று வரலாறு குறிப்பிடுகிறது. அதனால் மக்களின் கோரிக்கையைத் தலைவணங்கி ஏற்றிருக்கிறார் திருமலை மன்னர். அதுமட்டுமல்லாமல், வீர வணக்கமும் செலுத்துமாறு பணித்திருக்கிறார்.

ஊர் மக்கள் விருப்பம்போல் நடக்கட்டும்' என்று திருமலை மன்னன் உத்தரவிட்டான். அமர அடக்கம் நடந்தது. திருநீறு பூசி சன்னாசி முதலில் திருமண் இட்டார். ஊர் மக்கள் அனைவரும் உள்ளங்கை மண்ணள்ளிக் கண்ணீரோடு இட்டனர்.

> லிங்கம நாயக்கன் தன் தலைப்பாகையைக் கழற்றி விட்டுத்தலை சாய்த்து வாழ்வை வைத்துச் சலாம் வைத்தான். அது ராணுவ மரியாதை போல இருந்தது வீர மரத்தின் கொம்பையும் நட்டு வைத்தான் (சின்னான் செட்டியார்).

## சன்னாசியும் தெய்வமானார்

இவையெல்லாவற்றுக்கும் சாட்சியாக விளங்கிய சன்னாசிக்கு மேலும் வருத்தம் அதிகமானது. சரியான தருணத்தில் சரியான முடிவினை எடுத்து இருந்தால் அவர்களைக் காப்பாற்றி இருக்கலாமே என்று மனம் குமுறினார். விதி சதி செய்து விட்டதை உணர்ந்தார். தன்னால் இயலாத நிலையை எண்ணிக் கலங்கித் தன் வாழ்வை முடித்துக்கொள்ள அவரும் விரும்பினார் போலும்.

> 'அடைக்கலம் வந்த வீர குலத்தினர் அனாதைகள் போல மாண்டனர். அவர்களை ஊர் மக்கள் காத்தனர். இனி அவர்கள் ஊர் மக்களைக் காப்பர். துறவியான நான் இவர்களைக் காக்க ஆசை கொண்டேன்.

என் ஆசை பொய்த்தது. அதனால் இனி நான் உணவு உண்ண மாட்டேன்' என்று சபதம் இட்டார்.16 நாட்கள் உபவாசம் இருந்து தன்னுயிரையும் மாய்த்துக் கொண்டார் (சின்னான் செட்டியார்).

**பதினாறாம் நாள் படையல் விழா**

திருமலை நாயக்கரால் அந்நிகழ்வு வீர நிகழ்வாகப் போற்றப்பட்டது. அரச மரியாதைகள் தரப்பட்டு நடுகற்கள் நிறுவப் பெற்றன. இன்றும் அந்த நடுகற்கள் புதையுண்ட இடங்களில் வழிபாடு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நன்றியறிதலின் காரணமாகத் தானும் உயிரை நீத்த நாய்க்கும் வீர வணக்கம் செலுத்தப்பட்டு நடுகல் குறிப்பு எழுதப்பட்டிருக்கிறது.

திருமலை மன்னரின் புத்தி தெளிந்து வருந்தினார். லிங்கம நாயக்கனிடம் தகுந்த மரியாதை செய்யச் சொன்னார். பதினாறாம் நாள் விழா சிறப்பாக நடைபெற்றது.

சுற்றிலும் உள்ள கிராமத்து மக்கள் திரண்டனர். சொக்கம்பட்டி, வேலாயுதம்பட்டி, மேல் புதுப்பட்டி ஊர்ப்பொதுமக்கள் முன் நின்றனர்.

லிங்கம நாயக்கன் வந்து சேர்ந்தான். நாய்க்கும் சேர்த்து நான்கு நடுகற்கள் நடப்பட்டன. சாத்தன் அம்பலம் வீட்டு முறத்தில் படையற் பொருள்கள் பரவின (சின்னான் செட்டியார்).

**காவல் தெய்வங்கள்**

தன்னைக் காத்த ஊர் மக்களைத் தான் காவல் தெய்வமாக இருந்து காப்பதற்குச் சொட்டக்காரர் உறுதியளித்தார். அந்த உறுதியை அருளாடியின் மூலமாக ஊர் மக்களுக்குத் தெரியப்படுத்தினார். மேலும், தனக்கு எவ்வாறு வழிபாடு செய்ய வேண்டும் என்பதையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

சொக்கம்பட்டிமந்தையில் ஊர்க் கூட்டம் கூடியது. வேலாயுதம் பட்டி ஆண்டிப் பூசாரிக்கு ஆவேசம் வந்தது. சொட்டக்காரர் ரூபமாய்ப்

பேசினார்.'"என்னைக் காத்த மக்களை நான் காப்பேன்" என்று உறுதி அளித்தார்.

மேலும் "எனக்கு விருப்பமானது குதிரையேற்றம் ஆதலால் குதிரை வைத்து விழா நடத்துங்கள். மலைக்கு என் பெயர் இடுங்கள். மகிழ்ந்திருங்கள்"' என்று அருள்வாக்குக் கூறினார்.

இவ்வாறு சொட்டக்காரர் தன் உடன் துயின்ற இராமண்ணா, இராமக்கா, சன்னாசி ஆகியோரோடு ஐயனார் என்னும் காவல் தெய்வமாகினார். ஊர் மக்களும் அதனை மனமுவந்து ஏற்று இன்றுவரை அவர் கூறிய வழிபாட்டு முறைகளிலேயே தொடர்ந்து வழிபாடு செய்து வருகிறார்கள்.

**லிங்கம நாயக்கர் உறுதி**

தன் கடன் என்பதாக லிங்கம நாயக்கன் நடுகற்கள் நனையாது குடில் எழுப்ப ஒப்புக்கொண்டான்.

மேலும் புரவி எடுப்பு விழாவிற்கு அரண்மனைப் புரவி தருவதாகவும் ஒப்புக் கொண்டான்.

> அடைக்கலமாய் இருந்த மூவரையும் காட்டிக்கொடுத்தவரும் ராவுத்தரும் அவர் உறவினர் மட்டுமல்லாது அவர்தம் சந்ததியினரும் சொக்கம்பட்டியில் வசிப்பதற்கு வழி இல்லாது போயிற்று. இன்றுவரை அந்த வழக்கம் தொடர்ந்து வருகிறது (சின்னான் செட்டியார்).

திருமலை நாயக்கரின் பிரதிநிதியாக லிங்கம நாயக்கர் அரச உறுதிகளை அளித்தார். அதுமட்டுமின்றிச் சொட்டக்காரர் ஐயனார் வழிபாடுகளுக்கு வேண்டிய ஆணைகளையும் பிறப்பித்தார். சொட்டக்காரர் வேண்டுகோளின்படி இன்றும் அக்கிராமத்தில் ராவுத்தர் மரபினர் வசிப்பதில்லை என்பது நிதர்சனமான உண்மையாக விளங்கி வருகிறது. திருவிழாக் காலங்களில் ஸ்ரீ சொட்டக்கார ஐயனார் கூறிய வழிமுறைகளின்படி

ஊர் முழுவதும் கட்டுப்பட்டு விழாக் கொண்டாடப்படுகிறது. படையல் உள்ளிட்ட அனைத்தும் மரபாகத் தொடர்ந்து பின்பற்றப்படுகிறது. சொட்டக்காரருக்கு அடைக்கலம் கொடுத்து உபசரித்தவர்கள் சந்ததிகள் இன்றும் வழிபாட்டை தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றனர். அதுபோலவே அருளாடியும் பரம்பரையாகத் தொடர்ந்து அருள்வாக்கு நிகழ்த்தி ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமியின் அருளைப் பரப்பி வருகிறார்.

குதிரைப் படைவீரராகத் திருமலை நாயக்கரின் ஆட்சியில் பணி பெற்றுப் பல போர்க்களங்களில் சிறந்த வெற்றியைப் பெற்றுத் தந்து, மானத்தைக் காக்க வேண்டி விசுவாசத்தின் பொருட்டுத் தன்னையும் தான் சார்ந்தவர்களையும் காக்கும் முகத்தான் இன்னுயிரை ஈந்த அவர்களின் அரும்பெரும் வாழ்வு வீரத்தின் அடையாளமாகவும் தியாகத்தின் சின்னமாகவும் போற்றப்படுகிறது. ஸ்ரீசொட்டக்கார ஐயனார் காவல் தெய்வமாகவே என்றும் ஊர் மக்களையும் பக்தர்களையும் காத்து வருகிறார் என்பது ஆழமான நம்பிக்கையாக வேர்விட்டுள்ளது கண்கூடு.

# ஸ்ரீ சொட்டக்கார சுவாமி வழிபாடும் மரபுகளும்

## சொக்கம்பட்டி அமைவிடம்

மதுரை மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் மேலூர் வட்டத்தில் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 27 ஊராட்சிகளில் மலைகள் சூழ்ந்த பழங்குடி மக்கள் வாழும் ஊராக விளங்குவது சொக்கம்பட்டி என்னும் கிராமம் ஆகும், மதுரையில் இருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கொட்டாம்பட்டி என்னும் சிற்றூரில் இருந்து மேற்குத் திசை நோக்கிச் செல்லும் கிராமத்துச் சாலையில் சுமார் நான்கு கிலோமீட்டர் தொலைவு சென்றால் இரண்டு மலைகளுக்கு அப்பால் இந்த ஊர் அமைந்திருப்பதைக் படம் 5 காணலாம்.




**படம் 5. மதுரை மாவட்ட வரைபடம்**



**படம் 6. வான்வெளிப் பார்வையில் மலைகளுக்கிடையில் சொக்கம்பட்டி**

படம் 6 இல் உள்ளதுபோல மலைப்பகுதிக் கிராமம் என்பதால் சமதளம் ஆகிய தரைப்பகுதி குறைவாகவே காணப்படும், ஏற்றங்களும் இறக்கங்களும் நிறைந்த சாலைகளில் மலைப்பகுதிகளில் அமைந்திருப்பது போன்ற குடிசைவீடுகள் விளங்கும்.

ஊரின் முக்கியத் தொழிலாக வேளாண்மையே விளங்குகிறது. மலை வளமும் மழை வளமும் ஒருங்கே பெற்று மண் வளமும் நிறைந்து வேளாண்மை செழித்திருக்கிறது. நீர்நிலைகளும் குளுமையான சூழலும் இந்த ஊருக்குக் கிடைத்திருக்கிற சிறப்புகளுள் குறிப்பிடத் தகுந்ததாகும். எளிய மற்றும் பிற மொழிக் கலப்பில்லாமல் தாய்மொழியாகத் தமிழை மட்டுமே கொண்ட பெரும்பான்மை மக்களும் தெலுங்குமொழி பேசும் சிறுபான்மை மக்களும் இந்த ஊரில் வசித்து வருகின்றனர். கிராம ஊராட்சியாக விளங்கும் இந்த ஊருக்கு இன்னும் முறையான பேருந்து வசதிகள் நிலையாக இல்லை. பல இனத்தைச்

சேர்ந்த மக்களும் வாழ்ந்தபோதும் ஒற்றுமைக்குறைவு படாமல் உள்ளது. அதற்குச் சொட்டக்கார ஐயனாரின் அருளும் ஒரு காரணம் என்று கருதலாம். ஊர்ப் பொது முடிவுகளை அனைவரும் கூடி ஒருமித்த மனத்துடன் எடுக்கின்றனர். இந்தக் கிராமத்தில் சொட்டக்கார சுவாமி, மந்தை முத்தாளம்மன், காஞ்சிரமரத்துவிநாயகர், வையாபுரி முருகன், ஸ்ரீஇராமர் பஜனை மடம் ஆகிய கோயில்கள் அமைந்துள்ளன.

ஏனைய தெய்வங்களுக்கும் அவ்வவற்றிற்குரிய திருநாட்களில் விழா எடுத்து வழிபாடுகள் நிகழ்கின்றன என்றாலும் ஊர்கூடிப் போற்றுகிற பெரும் திருவிழாவாக அமைவது சொட்டக்கார ஐயனார் சுவாமி திருவிழா ஆகும். இது பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் திருவிழாவாகும்.

சொக்கம்பட்டி கிராமத்தில் ஊராட்சி மன்ற அலுவலகம், நூலகம், தொடக்கப்பள்ளி உள்ளிட்டன அமைந்து உள்ளன. குடிநீர் வசதியும் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளது. நீர்மேலாண்மையில் சிறந்து விளங்கும் இந்தக் கிராமத்து மக்கள் ஊரைச் சுற்றிலும் சுமார் பத்துக்கும் மேற்பட்ட கண்மாய்களையும், குளங்களையும் பேணிப் பராமரித்து வருகின்றனர். சுற்றிலும் உள்ள மலைப்பகுதிகளிலிருந்து பெருகும் மழை நீரை முறையாகச் சேமித்துப் பயன்படுத்துகின்றனர்.

வேளாண் தொழிலில் நெல், கரும்பு, வாழை, தென்னை, மா, பலா உள்ளிட்ட பொருட்கள் விளைவிக்கப்படுகின்றன. மேலும், கம்பு, தினை, சாமை, வரகு ஆகிய தானிய வகைகளும் மிகுதியாக விளைகின்றன, இங்கு உற்பத்தியாகும் இந்த வேளாண் பொருள்கள் பேருந்துகள் மற்றும் சரக்குந்துகள் வழியாகக் கொட்டாம்பட்டி, மேலூர், சிங்கம்புணரி, மதுரை ஆகிய இடங்களில் நடைபெறும் சந்தைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

ஊராட்சி மன்றத் தலைவர் தவிரவும், ஊர்ப் பெரியவர்கள் அடங்கிய கிராம சபையும் உண்டு. ஊர் மக்கள் அனைவரையும் கலந்து ஊர்ப்

பிரச்சனைகள் இவர்கள் மூலமாகத் தீர்க்கப்படுகின்றன. அதுபோலவே ஊர்ப் பொதுக்காரியங்களிலும் விழாக்காலங்களிலும் சிறப்பாகச் செயல்படுவதற்குக் கிராமத்து இளைஞர்கள் கூடித் தன்னார்வத்தோடு பணியாற்றுகிற இளைஞர் பேரவை என்னும் அமைப்பும் செயல்படுகிறது. இது கிராமத்தின் ஒழுங்கு நடவடிக்கைகளைக் கண்காணித்து மக்களை நல்வழிப்படுத்துகிறது. இந்த இளைஞர் பேரவையில் அனைத்துப் பிரிவினரும் சமஉரிமையுடன் உறுப்பினராக இணைந்து தங்களின் தொண்டினை மேற்கொள்ளலாம்.

பழமை மிகுந்த வாழ்வியல் முறைகளோடு இந்தக் கிராமத்து ◌மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். மிகவும் அண்மைக் காலத்திலேயே அறிவியல் வசதிகள் அளவோடு இந்த ஊரை எட்டிப் பார்த்து இருக்கின்றன.

ஊர்மக்கள் கூடி மகிழும் சாவடி என்னும் பொது இடமும் ஊர்மக்கள் அனைவரும் கூடிப் பேசுவதற்கு மந்தை என்னும் பெருந்திடலும் உண்டு. ஊரின் நுழைவுவாயிலில் ஊராட்சி மன்றம் அமைந்துள்ளது. முற்றிலும் தூய்மையான, நெகிழிக் குப்பைகள் உள்ளிட்ட எந்தக் கழிவுகளும் இல்லாத கிராமமாக இது விளங்குகிறது.

தென்னை உற்பத்தி அதிகமாக விளங்குவதால் தேங்காய் மண்டிகளும், தென்னை நாரிலிருந்து தயாரிக்கப்படும் தென்னங்கயிறு எனப்படும் கொச்சக் கயிறு, தென்னைநாரிலிருந்து பிரித்து எடுக்கப்படும் மஞ்சி எனப்படும் வேளாண்மைக்கு உரமாகப் பயன்படும் கழிவுத் தொழிற்சாலைகள் ஆகியன நிறையச் செயல்படுகின்றன.

## ஸ்ரீசொட்டக்கார சுவாமி திருக்கோயில்(கள்)

### 1. மந்தைக் கோயில்

ஊரின் மையப்பகுதியான மந்தையில் மந்தை முத்தாளம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. அதன் அருகிலேயே ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமிக்கு ஊர்க்கோயிலும் அமைந்துள்ளது. அங்கு உருவங்கள் ஏதும்

வைக்கப்படவில்லை. ஆனால், திருவிழாக்காலங்களில் அலங்கரிக்கப்படும் தெய்வத் திருவுருவங்களை நிறுவுவதற்குப் பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய நாட்களில் இந்தப் பீடங்கள் தனித்தே விளங்கும். அப்பீடங்களில் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி தனது சுற்றத்தோடு அமைந்து அருள்பாலிப்பதாக ஊர்மக்கள் நம்பித் தொழுகின்றனர்.

இங்கு திருநீறு, சந்தனம், குங்குமம் முதலிய வழிபாட்டுப் பொருட்கள் நிரந்தரமாக வைக்கப்பட்டிருக்கும். பூசாரி யாரும் எல்லா நேரங்களிலும் இருக்க மாட்டார். வழிபாடு செய்பவர்கள் கற்பூரம், சாம்பிராணி முதலியவற்றை ஐயனாருக்குப் படைத்து விட்டுத் தாங்களே இந்த மங்கலப் பொருட்களை எடுத்து அணிந்து கொள்ளலாம். திருவிழாக் காலங்களில் மட்டுமே பூசாரி திருக்கோயிலிலிருந்து இந்தப் பொருட்களை விநியோகம் செய்வார்.

## 2. மலைக்கோயில்

ஸ்ரீசொட்டக்கார ஐயனார் மறைந்திருந்து தன் சுற்றத்தாரோடு உயிர் நீத்த மலைப்பகுதியில் - நடுகல் நடப்பட்டுள்ள பகுதியில் அடர்ந்த மரங்கள் சூழ்ந்த இடத்தில் மலைக்கோயில் அமைந்துள்ளது. முற்காலத்தில் பழமை வாய்ந்த ஓடு வேயப்பட்ட கட்டிடமாக விளங்கிய இக்கோயில் தற்போது புனரமைக்கப்பட்டு கான்கிரீட் கட்டடமாக அமைந்துள்ளது. அதுபோலவே கருப்பருக்குத் தனிச்சந்நிதியும் மேற்கு மூலையில் அமைந்துள்ளது.

வனத்துறையின் அனுமதியின் பேரிலும் வழிகாட்டுதலின் படியும் இந்தக் கோயில் அமைந்துள்ளது. அதைப் போலவே இந்த கோயிலுக்கு செல்லும் வழியும் வனத்துறையால் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதியோடு அமைக்கப்பட்டுள்ளது.

திருவிழாக் காலங்களில் கொண்டு வந்து இறக்கப்படும் புரவிகளின் அணிவகுப்பு மந்தையைச் சுற்றிலும் அலங்காரங்களோடு திகழ்கிறது.

ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கும் புதுப்புரவிகள் வந்து இறங்குகிறபோது, பழைய புரவிகள் சிதைந்த நிலையில் மறுசுழற்சிக்கு ஆளாகின்றன.

ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி சந்நிதிக்கு நேர் எதிரே வேல்களும், வாள்களும் ஆயுதங்களாக நிறுத்தப் பெற்றுள்ளன. அதன் முன்னர் மக்கள் அமருமாறு ஒரு பெரிய தரைப்பகுதி சமதளமாக விளங்குகிறது. மழைக்காலங்களில் மண்ணரிப்பு ஏற்படாமல் தடுப்பதற்காகத் தடுப்புச் சுவர் ஒன்றும் கட்டப் பெற்றுள்ளது.

இங்கிருந்து நோக்கினால் பறம்புமலை எனப்படும் பிரான்மலையின் உச்சிமுகடு தென்படுவதைக் காணலாம். பிரான்மலை எனப்படும் திருக்கொடுங்குன்றத்திலிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீமங்கைபாகர் இவர்களுக்கு எப்போதும் அருள்பாலிக்கிறார் என்பதாகவும், இவர்கள் அவர் இருக்கும் திருக்கு நோக்கி வணங்கியபடி உள்ளார்கள் என்பதாகவும் இது அமைகிறது.

அதைப்போலவே பிரான்மலையின் அடிவாரப்பகுதியில் இருக்கும் அழகியசொக்கன் என்னும் இலிங்கவழிபாட்டுத் தலத்தில் இன்றும் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி திருவிழாவிற்கு முன்பு திருமண் எடுத்து உத்தரவு கேட்டு வரும் வழக்கம் உள்ளது.

## மலைக்கோயிலுக்கான வழிகள்

இந்த மலைக்கோயிலை அடைவதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று சொக்கம்பட்டி கிராமத்தின் வழியாக மலைப்பாதையில் சற்றுக் கரடுமுரடான வழித்தடத்தில் ஏறி வந்தால் சுமார் நான்கு கிலோமீட்டர் தொலைவில் பாறைகளையும் சரிவுப் பள்ளங்களையும் கடந்து சோலைமலை எனப்படும் சொட்டக்காரன் மலையின்மீது ஏறி இறங்கி வர வேண்டும்.

மற்றொரு பாதை, கொட்டாம்பட்டியிலிருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் பள்ளபட்டி என்னும் கிராமத்திற்கு முன்பாக உள்ள ஒரு

கிளைவழிச்சாலையில் மேற்கு நோக்கி மலைப்பகுதி வழியாக நடந்தால் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி கோயிலை வந்து அடையலாம்.

இது தவிரவும் சொக்கம்பட்டிக்கு அருகில் அமைந்துள்ள வேலாயுதம்பட்டிக் கிராமத்து மக்கள் இந்தக் கோயிலிருக்கு வருவதற்கு அவர்கள் ஊரிலிருந்தும் தனிப்பாதை ஒன்று உள்ளது.

இத்திருக்கோயில் மலையின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. அங்கிருந்து மலையுச்சிக்கு அருகில் கடினமான பாதையில் ஏறிச் சென்றால் அங்கு அவர்கள் மறைந்து வாழ்ந்த காரிருள் மண்டிய பெருங்குகை ஒன்று உள்ளது. உள்ளே அந்தகாரம் நிறைந்திருக்கும் அந்தக் குகைக்குள் அவர்கள் வாழ்வதற்காகப் பயன்படுத்திய பொருட்கள் இன்னும் இருக்கின்றன என்று மக்கள் நம்புகின்றனர். அதற்கு அருகிலேயே சுவையான நீரினைக் கொண்ட சுனை ஒன்றும் உள்ளது. அங்கு இராமக்கா குளித்தபோது மஞ்சள் தேய்த்ததற்கான அடையாளமாகச் சிவப்பு வண்ணம் பூசப்பட்ட ஓர் இடம் பாறையில் குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளது. அதனை இன்றும் பெண்கள் மிகவும் பக்தியோடு வழிபட்டு வருகின்றனர். கன்னிப் பெண்களுக்குக் காவலைத் தரும் தெய்வமாக இராமக்கா விளங்குவாள் என்பது இந்தப் பகுதி மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

## சடாமுனிக்குன்று

சொக்கம்பட்டிக் கிராமத்திற்குள் நுழையும் முன்னரே வனமரங்கள் சூழ்ந்த அடர்ந்த குன்று ஒன்று தென்படுகிறது. இதற்குச் சடாமுனிக் குன்று (தற்காலத்தில் சடாமணிக் குட்டு) என்று பெயர். இங்கும் பழங்குடி வழிபாடாக சடாமுனி எனப்படும் கிராம தெய்வத்திற்குச் சூலம், வேல் முதலியன நட்டு வழிபாடு செய்யப்படுகிறது.

அதனைக் கடந்து ஊருக்குள் நுழையும் வேளையில் கிழக்குத் திசையில்

தெரியும் மற்றொரு மலையின் நடுப்பகுதியிலும் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் தனது சுற்றத்தாரோடு தங்கியிருந்துள்ளார். அங்குதான் அவர் தாம்பூலம் தரித்து மிச்சமிருந்த சுண்ணாம்பினைப் பாறையில் தடவினார் என்றும் அந்தத் தடம் இன்னும் அழியாமல் காப்பதற்காக மக்கள் தொடர்ந்து அந்தத் தடத்தின்மீது ஆண்டுதோறும் வெள்ளைச் சுண்ணாம்பினைப் பட்டையாகப் பூசி ஸ்ரீசொட்டக்காரர் நாமம் (ராம நாமம் போன்று அமைந்துள்ளது) என்று வழங்கி வழிபட்டு வருகின்றனர்.

## ஸ்ரீசொட்டக்கார ஐயனாருக்கான வழிபாட்டுப் பொருட்கள்

ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமிக்குச் சாம்பிராணி மிகவும் உகந்த நறுமணப் பொருளாகத் திகழ்கிறது. அதனால் வழிபாட்டுக்கு வரும் பக்தர்கள் சாம்பிராணியை மிகுதியும் கொண்டு வந்து காணிக்கையாகச் செலுத்துகின்றனர். பெரும்பாலும் திருக்கோயில் திருப்பீடத்தின் அருகில் சாம்பிராணியின் நறுமணம் கமழ்ந்து கொண்டேயிருக்கும். அதைப் போலவே ஊதுவத்திகளும் நறுமணம் தரும். ஆதலால் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி நறுமணப் பிரியர் என்பதை அறியலாம்.

## ஸ்ரீசொட்டக்கார ஐயனாருக்கான விருப்பமான மலர்

ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி தனக்குப் பிடித்தமான மலராக வெண்ணிற அலரியைத் தேர்ந்தெடுத்துள்ளார். இந்த மலர் மலைப்பகுதிகளில் மிகுதியும் படர்ந்து காணப்படுகிறது. பால்வகைத் தாவரமான அலரி மலருக்கு இந்தப் பகுதி மக்கள் துலுக்கன்பூ என்று பெயர் தந்துள்ளனர். அதன் காரணம் அறிய இயலவில்லை. இந்த மலருக்குரிய ஆன்மீகக் குணமாக உளநிறைவு (Psychological Perfection) சுட்டப்படுகிறது. ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமியை நம்பி வணங்குகிறவர்களுக்கு உறுதியாய் உளநிறைவு கிடைக்கும் என்பதன் அடையாளமாக இந்த மலர் வழிபாடு திகழ்கிறது.

## நாள்வழிபாடு

ஸ்ரீசொட்டக்கார சுவாமிக்கு நாள் வழிபாடு என்னும் தனி வழிபாடு கிடையாது. என்றாலும் கிராமத்து மக்கள் ஒவ்வொரு நாளும் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சாமியை வணங்கிவிட்டே தங்களின் அன்றாடப் பணியைத் தொடங்குகிறார்கள். ஆதலால் பெரும்பாலும் ஊதுவத்தி, கற்பூரம், அவருக்கு மிகவும் விருப்பமான சாம்பிராணி, அலரி மலர் முதலிவை படைக்கப் பெற்று இவ்வழிபாடு நிகழ்கிறது.

சொட்டக்கார ஐயனாரின் எல்லாக் கோயில்களுக்கும் இதுவே பொது விதியாக அமைகிறது. தவிர, மனநலம், உடல்நலம் பாதிக்கப்பட்டோர் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமியின் அருளாடியிடம் சென்று அவரது வீட்டில் குறி கேட்டுத் திருநீறு முதலிய காப்புப் பொருள்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

## பழம் மாற்றிக் கொள்ளுதல்



**படம் 7. படையல் பொருட்கள்**

ஊர் மக்கள் தங்கள் வேண்டுகோள்கள் நிறைவேறவும், தங்கள் இல்லங்களில் நடைபெறும் நல்ல காரியங்கள் சிறப்பாக நிறைவு பெறவும்

ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி திருக்கோயிலுக்கு வந்து வேண்டிக் கொள்கின்றனர். அவ்வேளையில், தட்டு நிறைய நன்கு கனிந்த வாழைக் கனிகளைப் படைத்துப் பின்னர் அவற்றில் பாதியைப் பிரசாதமாக எடுத்துக் கொள்கின்றனர். இதற்குப் பழம் மாற்றுதல் என்று பெயர். இது படம் 7-இல் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் தாங்கள் மேற்கொள்ளும் நற்செயல்களுக்கு ஐயனார் துணை இருப்பார் என்று அவர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

**ஸ்ரீசொட்டக்கார சுவாமி புரவியெடுப்புத் திருவிழா**

ஸ்ரீசொட்டக்கார ஐயனாருக்கு எடுக்கப்படும் மிகப் பிரம்மாண்டமான விழாவாகப் புரவி எடுப்புத் திருவிழா விளங்குகிறது. இந்த விழாவிற்குச் சொக்கம்பட்டி, வேலாயுதம் பட்டி மற்றுமுள்ள சுற்றத்துக் கிராம மக்களின் கூட்டுறவோடு முன்கூட்டித் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

இந்தப் புரவி எடுப்பு விழா பெரும்பாலும் பத்து ஆண்டுகளுக்கு மேல் ஒருமுறையே கூட்டப்படுகிறது. ஆதலால் முன்னேற்பாடும் திட்டமிடலும் மிக அவசியமாகிறது. சொக்கம்பட்டி, வேலாயுதம்பட்டி, நடுப்பட்டி மற்றும் சுற்றிலும் உள்ள கிராம மக்கள் தவிரப் பரவலாக மதுரை, திண்டுக்கல், திருச்சி, சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இருந்தும் பல்வேறு தரப்பு மக்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு ஐயனார் ஆசி பெறுவதற்குப் பெரிதும் விழைகிறார்கள்.

**நாட்குறித்தல்**

திருவிழாவிற்குரிய நன்னாளை ஊர்ப் பெரியவர்கள் நிச்சயம் செய்கிறார்கள். தொடர்ந்து ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமியின் அருளாடியிடம் உறுதி கேட்கிறார்கள். ஸ்ரீசொட்டக்கார ஐயனார் அருளாடியை படம் 8-இல் காட்டப்பட்டுள்ளது. அவர் உறுதி அளித்தபின் திருவிழா குறித்த அழைப்பு பலருக்கும் அனுப்பப்படுகிறது. திருவிழாவோடு தொடர்புடைய கிராமங்களில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. காப்புக் கட்டுதல்

தொடங்குவதற்கு முன்பே இந்தக் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்துவிடும். தீய செயல்களில் ஈடுபடும் எவரும் ஐயனாரின் கோபத்திற்கு ஆளாவார்கள் என்று எச்சரிக்கப்பட்டுத் திருத்தப்படுவர். அதன் பின்னர், காப்புக்கட்டுதல் தொடங்கும். அவ்வேளையில் உணவு, உடை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் கடுமையான நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.



**படம் 8 - ஸ்ரீசொட்டக்கார ஐயனார் அருளாடி**

**குதிரைகள் முதலியன செய்வித்தல்**

திருவிழா நாள் குறித்த உடன் மண் பொம்மைகள் செய்யும் வேளார்களுக்கு அழைப்பு விடுக்கப்படும். அவர்கள் ஊர்க் கூட்டத்தில் மரியாதையோடு கௌரவம் செய்யப்பட்டுக் குதிரைகளைச் செய்வதற்கு பணிக்கப்படுவார்கள். இந்த வேளார்கள் பரம்பரையாக ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமிக்குக் குதிரை செய்விக்கும் புனிதப் பணியை மேற்கொண்டு வருபவர்கள் ஆவார்கள். அரண்மனைப் புரவி எனப்படும் இரு பெரும் குதிரைகளுக்கு ஊர்மக்கள் பொறுப்பாவார்கள். இந்தப் பெரும் குதிரைகளைச் செய்வதற்கு வேளார்கள் பணம் எதுவும் பெற்றுக் கொள்வதில்லை. வெற்றிலை பாக்கு ஆகிய தாம்பூலம் மட்டுமே இவர்களுக்குத் தட்சணையாகத் தரப்படுகிறது. அதனைப் பெற்றுக்கொண்டு சாமியாடி குறிப்பிட்ட நல்ல நாளில் ஊர் மந்தைக்கு அருகில் இருக்கிற வேளார் குளத்தில் சூளை போட்டு மண்

குதிரைகளைச் செய்யத் தொடங்குகின்றனர் படம் 9 மற்றும் படம் 10-இல் காட்டப்பட்டுள்ளது.. அரண்மனைப் புரவிகளைத் தவிரவும் தங்களின் நேர்த்திக் கடனுக்காகக் கிராமப் பொதுமக்களும், பக்தர்களும் குதிரை, யானை, காளை, நாகம், நாய், திருப்பாதங்கள், உறுப்புகள் முதலிய உருவங்களைச் செய்து தர வேளார்களை வேண்டிக் கொள்வார்கள். இதற்குத் தனியாகத் தட்சிணை பெற்றுக் கொள்வார்கள். இந்தப் புனிதப் பணியில் வேளார்களின் குழந்தைகள் உள்ளிட்ட குடும்பத்தார் முழுவதும் ஈடுபடுவர்.

மிகுந்த கலைநயமும் தெய்வீகப் பொலிவும் உடைய அழகான மண் பொம்மைகள் உயிர்பெறும். வேளார் குளத்தின் மண்ணைக் கொண்டு அங்கேயே சிலைகள் கைகளால் வடிக்கப்படும். ஊர் மக்களின் உதவியோடு சூளை இடப்பட்டுச் சூடேற்றப்பட்ட அவை முழு உருவங்களாக வெளிப்படும். தொடர்ந்து வண்ணம் பூசுதல் ஊர் மந்தையில் வைத்து நிகழ்த்தப்படும். ஏறக்குறைய ஒரு மாதத்துக்கும் மேலாக இந்தப் பணி ஊர் மக்களின் கண்காணிப்பிலும் உதவியுடனும் நிகழும்.



**படம் 9. மண் உருவப் பொம்மைகள்**



**படம் 10. சூளையிடுதல்**

**குதிரை உருவ வழிபாடு**

ஸ்ரீசொட்டக்கார ஐயனார் இரவு நேரங்களில் ஊரினையும் நீர்நிலைகளையும் காவல் புரிவதற்காக உலாச் செல்வார் என்று நம்பி அவருக்குக் குதிரை உருவங்களை அமைத்து வழிபடுகின்றனர். இவ்வாறு குதிரை உருவங்களை அமைத்து வழிபடுவதன் மூலம் தங்களது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று எண்ணிப் பெரிய உருவங்களைச் செய்து வைத்துத் தங்களின் நேர்த்திக்கடன்களைச் செலுத்தி வழிபடுகின்றனர். குதிரை உருவத்திற்கு வேட்டி, துண்டு, பொட்டு, சந்தனம், மாலைகள், குட்டித் தலைவாழை இலை, அறுகம்புல் முதலியவற்றைப் படைத்து வழிபடுகின்றனர் படம் 11 காட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீசொட்டக்கார ஐயனாருக்கு வழங்கப்படும் அத்தனை மரியாதைகளும் அரண்மனைப் புரவிகளுக்கும் உண்டு. அவர் குதிரைகளின்மீது பெருவிருப்பம் உடையவர் என்பதால் எப்போதும் குதிரையை விட்டு நீங்காதிருப்பார் என்பது மக்களின் நம்பிக்கை.



**படம் 11. அரண்மனைப் புரவி**

**கண்திறப்பு**

குதிரைகள் மண் உருவமாகச் செய்யப்பட்டு மந்தைத் திடலுக்குக் கொண்டு வரப்பட்டு உரிய இடங்களில் நிறுவப்படும். திருவிழா நெருங்கிய வேளையில் நன்னாள் பார்த்துக் குதிரைகளுக்குக் கண் திறத்தல் என்னும் வழிபாடு நிகழும். உரிய பூசை முறைகளோடு நிகழும் இந்தக் கண் திறத்தல் வழிபாடு மிக முக்கியமானதாகும். அதுவரை மண் உருவங்களாக விளங்கும் குதிரைகள், கண் திறப்பு நிகழ்ந்தவுடன் ஐயனாரின் அருள்பெற்று அவரின்

வாகனமாக நிலைபெற்று விடுகிறது என்பதே கண் திறத்தலின் நோக்கமாகும். இந்தக் கண் திறப்பு நிகழ்வுக்குப் பின்னர் குதிரைகளுக்கும் வழிபாடு தொடங்கிவிடும்.

## பொதுவழிபாடு

ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி வழிபாட்டில் எவ்விதப் பேதங்களும் இன்றி அனைவருக்கும் அருள் உண்டு. ஆதலால், அனைவரும் மங்கலப் பொருட்களாகிய வெற்றிலை பாக்கு, மலர்கள், எண்ணெய், கற்பூரம், சாம்பிராணி, தேங்காய், பழம், ஆடை அணிகலன்கள் இவற்றை எடுத்துவந்து வழிபடுவார்கள். இந்த வழிபாட்டில் திருநீறு, அழுத்தமான செந்நிறம் உடைய குங்குமம், மலர்கள், பொங்கல் சோறு, பழங்கள் ஆகியன பிரசாதமாக வழங்கப்படுகின்றன.

## இரண்டு நாள் திருவிழா

ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி புரவி எடுப்புத் திருவிழா இரண்டு நாட்கள் விமரிசையாக நடைபெறும். படம் 12-இல் காட்டப்பட்டுள்ளது.



**படம் 12. திருவிழாவுக்குத் தயாராகும் மந்தை**

முதல்நாள் முன்பே கண் திறக்க பெற்ற திருவுருவச் சிலைகள் ஊர் வெளியில் அமைந்திருக்கிற சாவடியில் அலங்காரங்களோடு வழிபாடு செய்யப் பெற்று ஊர் மரியாதையோடு மந்தைக்கு அழைத்து வரப்படும். மந்தையில் இருக்கும் திருக்கோயிலில் சிலைகள் நிறுவப்பட்டு வழிபாடு தொடங்கும். ஒவ்வொரு நாளும் அருளாடி அருள் பெற்று தன்னிடம் குறி கேட்கும் மக்களுக்கும் பக்தர்களுக்கும் அருள்வாக்குக் கூறுவார். இந்த நாட்களில் வேண்டுதல்கள் நேர்த்திக்கடன்கள் முதலியன நிகழும். ஊர் முழுவதும் விருந்து உபசாரங்கள் நடைபெறும்.

**ஊர்வலம் புறப்பாடு**



**படம்13. திருவிழாவிபோது மக்கள் வெள்ளத்தால் நிறைந்திருக்கும் மந்தைத் திடல்**

இரண்டாம் நாள் மாலைப் பொழுதில் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி தனது சுற்றத்தாருடன் மலைக்கோயிலுக்குப் புறப்படுவார். ஊர் முழுவதும் மந்தையில் கூடிநின்று உடன் அணிவகுத்துச் செல்வதற்காகப் புரவிகளைத் தயார்படுத்தும், படம் 13-இல் காட்டப்பட்டுள்ளது. பெரிய பெரிய மூங்கில் கழிகளாலான பல்லக்குப் போன்ற அமைப்பினைச் செய்து

சிலைகளுக்குச் சேதம் ஏற்படாமல் வைக்கோல் முதலிய மென்மையான பொருள்களைச் சுற்றி அதனைத் தயாரிப்பர். ஒவ்வொருவரும் தங்களின் வேண்டுதலுக்காக குதிரை, யானை, காளை, நாகம், நாய், உடல் உறுப்புகள் முதலிய உருவங்களைச் செய்வித்து மந்தையில் வைத்திருப்பர். அணிவகுப்புத் தொடங்கும்போது தங்களின் நேர்த்திக்கடன் வாகனங்களைத் தாங்களே, அல்லது அதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட ஆட்களைக் கொண்டு சுமந்து செல்லத் தயார் ஆவார்கள் இதை படம் 14-இல் காட்டப்பட்டுள்ளது. இந்த ஊர்வலம் ஸ்ரீசொட்டக்கார ஐயனார் முதலில் செல்ல ஏனைய வாகனங்கள் பின்தொடர்ந்து செல்லும்.



**படம் 14. ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சாமி புறப்பாடு**

ஒரு பெரிய படை அணிவகுப்பைப் போல இந்த ஊர்வலம் விளங்கும். ஊர்வலம் செல்லும் வழியெல்லாம் மக்கள் தங்கள் வீடுகளின் முன் நின்று சுமந்து செல்லும் பக்தர்களின் பாதங்கள் சூடு படாத வண்ணம் நீரை ஊற்றிக் குளிரூட்டுவர். ஏறக்குறைய மூன்று மைல் தூரம் செல்லவேண்டிய அந்த ஊர்வலத்தில் தொடர்ந்து கரடுமுரடான பாதைகளும் மலை ஏறி அதன்பின் மலை இறங்கும் பயணமாக அது நிகழும். ஆதலால் பெண்கள் தங்களால் இயன்ற அளவு குடங்களில் நீர்சுமந்து வழி எங்கும் பாதங்களைக் குளிரூட்டிக்

கொண்டே வருவார்கள். மூன்று மணி நேரம் குறையாமல் இந்த ஊர்வலம் ஊர் மந்தையில் இருந்து புறப்பட்டு மலைக்கோயிலைச் சென்றடையும். படம் 15,16-இல் காட்டப்பட்டுள்ளது. ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி அருளாடி இரண்டு பெரிய அரண்மனைக் குதிரைகளிலும் யானையிலும் மாறி மாறி ஏறி ஆடிவருவார். அவர் கரங்களில் வில்லும் வாளும் வேலும் மாறி மாறி இருக்கும். மேள வாத்தியங்கள், தாரை தப்பட்டைகள், கொம்புகள், எக்காளங்கள் செண்டு வாத்தியங்கள் முதலியன இடைவிடாது முழங்கிக் கொண்டிருக்கும். வானதிர வாண வேடிக்கைகளும் நிகழும். அதே வேளையில் பெண்களின் குரவை ஒலி வானைப் பிளப்பதாக இருக்கும்.



**படம் 15. திருவிழாவின்போது மலைக்கோயிலை நோக்கி நடக்கும் மக்கள்**

## கிழங்கெடுக்கும் நிகழ்வு

ஊர்வலம் மலையேறி மலைக்கோயில் வந்து அடைந்தவுடன் குதிரைகளின் மீது ஆடிவந்த அருளாடி தனது அருளை வெளிப்படுத்தும் முகமாகக் கிழங்கு எடுக்கும் நிகழ்வு நிகழ்கிறது. இந்தத் தருணத்தில் அவர் கையில் வேல் தரப்படும். கோயிலுக்கு அருகிலுள்ள பகுதிகளைச் சுற்றி வரும் அருளாடி தனக்குத் தோன்றிய ஓரிடத்தில் தனது கையில் இருக்கும் வேலால்

தரையை ஆழமாகக் குத்துவார். அவர் குத்திய இடத்தில் இருந்து வள்ளி கிழங்கு வேலின் நுனியில் பட்டுத் தெறிக்கும். இது பக்தர்களுக்கும் மக்களுக்கும் பரவசத்தைத் தரும் நிகழ்வாக அமையும். பெரும்பாலும் புரவி எடுப்புத் திருவிழாவின்போது தவறாமல் மழை வந்துவிடும். ஆகையால், அதன் பொருட்டு இந்தக் கிழங்கெடுக்கும் நிகழ்வு நடைபெறுகிறது.



**படம் 16. மலையிலும் நிறைந்திருக்கும் மக்கள் வெள்ளம்**

## பரிவாரங்கள் நிறுவுதல்

ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமியுடன் அணிவகுத்து வந்த பரிவாரங்களை கோயிலை அடைந்தவுடன், அவ்வவற்றிற்குரிய இடங்களில் நிறுவப்படும். திருவிழாத் தேதி குறிப்பிட்ட நன்னாளிலேயே ஊர் மக்கள் மலைக் கோயிலில் இருக்கும் பழைய வாகனங்களை அப்புறப்படுத்திச் சுத்தம் செய்து விடுவர். ஆதலால், புதிதாக கொண்டுவரப்பட்ட சிலை வாகனங்கள் அவற்றிற்கு உரிய உயரத்திற்குத் தகுந்தபடி நிறுவப்படும். சிலைகளைக் காணிக்கையாக நேர்ந்து கொண்டவர்கள் அதற்குரிய ஆட்களைக் கொண்டு அவற்றை முறையாக நிறுவுவர். இத்தனை தூரம் மலை ஏறி, இறங்கி கனத்த பாரத்தோடு

வரும் அவை ஒருநாளும் சிறிதுகூடச் சேதம் அடைந்ததாகச் செய்திகள் இல்லை. இது ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமியின் அருள் வெளிப்பாடாக விளங்குகிறது என்று ஊர்மக்கள் தீர்க்கமாக நம்புகின்றனர். அந்த வாகனங்களைத் தன் அருளால் ஐயனார் கொண்டு வந்து சேர்க்கிறார் என்பது அவர்களின் ஐதீகமாகும்.

## கிடாவெட்டு

ஸ்ரீசொட்டக்காரர் ஐயனாருக்குப் பலியிடுதல் என்பது அறவே ஒவ்வாத நிகழ்வாகும். ஆனால், பரிவார தேவதையாகிய கருப்பருக்குக் கடா வெட்டு மிகவும் விருப்பமான வழிபாடாகும். மலையேறி வந்த திருவுருவச் சிலைகள் மலைக்கோயிலில் நிறுவப்பட்ட உடன் கடா வெட்டு தொடங்கும் படம் 16-இல் கட்டப்பட்டுள்ளது.. அதற்கு முன்பாக ஸ்ரீசொட்டக்கார ஐயனார் கருவறையைச் சுற்றிலும் துணி போட்டு மூடப்படும். இரத்தப் பலி காணும் பண்பு ஸ்ரீசொட்டக்கார ஐயனாருக்குப் பிடிக்காது என்பதால் இவ்வாறு செய்யப்படுகிறது



**படம் 16. கிடாவெட்டு**

ஊர் மக்களும் பக்தர்களும் தாங்கள் வேண்டிக் கொண்டபடி நடந்தால்

காணிக்கையாக ஆட்டுக் கிடாய்களைப் பலியிட்டுத் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இதற்காக வேண்டுதல் செய்ததிலிருந்தே ஐயனார் பெயரில் ஆட்டுக்கிடாய்களை வாங்கி வளர்க்கத் தொடங்குகிறார்கள். இந்தக் கடாவெட்டு நிகழ்வு ஊர்மந்தையில் நிகழ்வது இல்லை. மலைக்கோயிலில் மட்டுமே நிகழ்கிறது என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

## விழா நிறைவு

இவ்வாறு இரண்டு நாட்களும் மிகவும் உணர்வுப்பூர்மாக ஊர்மக்களால் வழிபாடு முதலிய சடங்குகளோடு திருவிழா கொண்டாடப்பட்டு மலையில் உள்ள கோயிலில் சிலைகளை நிறுவிப் பூசைகள் செய்து திரும்புவதோடு திருவிழா நிறைவு பெறுகிறது. மலையும், மழையும் கூடியிருக்கும் அந்த மாலைக்காலச் சூழலில் மானத்திற்காக உயிரை நீத்த ஸ்ரீசொட்டக்காரர், இராமண்ணா, இராமக்கா ஆகியோரோடு நட்புக்காக உயிர்நீத்த சன்னாசி, நன்றிக்காக உயிர்நீத்த அந்த நாய் ஆகிய யாவருக்கும் நன்றியைக் கூறித் தங்களைக் காவல் காத்தருளவேண்டிப் பணிந்து ஊர் திரும்புகிறார்கள் மக்கள்.

# முடிவுரை

இயற்கையைப் போற்றும் விதமாகவும் அதற்கு நன்றிக்கடன் செலுத்தும் முகமாகவும் வழிபாடு ஆதியில் தோற்றம் பெற்றது. பின்னர் காலந்தோறும் மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கு ஏற்ப தானும் வளர்ந்து தத்துவ நிலையை அடைந்தது. என்றாலும், ஆதி வழிபாட்டு மரபு சிறுதெய்வ வழிபாடு என்ற பெயரில் சிற்றூர்களில் இன்றும் பாமர மக்களால் தொடரப்பட்டு வருகிறது.

இயற்கையோடு இயைந்த வாழ்வில் வீர உணர்வையும், நன்றி உணர்வையும், மான உணர்வையும் வெளிப்படுத்தித் தங்கள் இன்னுயிரைத் தந்தவர்கள் இறைநிலையில் வைத்துப் போற்றப்பட்டதன் அடையாளமே நடுகல் வழிபாடு ஆகும். அந்த நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சி தற்காலத்திலும் தொடர்கிறது என்பதற்குச் சான்றாக ஸ்ரீ சொட்டக்கார ஐயனார் சுவாமிவழிபாடு திகழ்கிறது.

திருமலை நாயக்கரின் காலத்தில் வாழ்ந்த ஒரு குதிரைப்படைத் தலைவராகிய இராமையா என்பவரது வாழ்க்கையே இந்த வழிபாட்டின் மூலமாகும். வரலாற்றுப் பக்கங்களில் தென்பட்டும் மறைந்தும் இவரது வாழ்க்கை சொக்கம்பட்டி கிராமத்து மக்களின் வழிபாட்டினால் போற்றுதற்கு உரியதாக இன்றும் நிலைபெற்றுள்ளது. புகழெனின் உயிரையும் கொடுக்கும் வீரமும் அதனை ஏற்றுப் போற்றும் சமூகப் பண்பும் பழந்தமிழரின் மரபாக இன்றும் தொடர்கிறது என்பதற்கு இந்த வழிபாடு சான்றாகிறது.

இயற்கையைப் பேணுதலும் பெண்களைப் போற்றுதலும் ஒற்றுமையோடு ஊர்கூடி வாழ்ந்தாலும் உயிரினங்களை மதித்தலும் இந்த வழிபாட்டின் அடிப்படை நோக்கமாகும். உலகுக்குக் கூறும் பாடமாகவும் இந்த வழிபாடு விளங்குகிறது.

நம்பிக்கையும், ஒழுங்கும் கொண்டு செய்யப்படுகிற எச்செயலும் இறைத்தன்மை பொருந்தியதே என்பதற்கு ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி வழிபாடும் அதன் மரபுகளும் சான்றுகளாக விளங்குகின்றன.

தொடர்ந்து வரும் தலைமுறைக்கும் நற்பண்புகளையும் மரபு பேணும் வழக்கத்தையும் கற்றுத்தரும் ஒழுங்காகவும் இது திகழ்கிறது.

இன்னும் வழிபாட்டு முறைகளோடு கூடிய இந்த வரலாற்றில் அறியப்படாத பல மர்மங்களும் உண்டு. தனது அந்தரங்கத்தோடு தொடர்புடைய இராமையாவுக்குத் திருமலை நாயக்கர் மறைவாகப் பல நன்றிக் கடன்களை அவரது மறைவுக்குப் பிறகு செலுத்தி இருக்க வேண்டும் என்று கருதுவதற்கு வாய்ப்புண்டு. காரணம் சொக்கம்பட்டி என்னும் கிராமத்திற்கு அருகில் விளங்கும் தொந்திலிங்கபுரம் என்னும் ஊர் பெயர் அத்தகைய ஐயத்தை எழுப்புகிறது. திருமலை நாயக்கருக்குத் தொந்திலிங்கன் என்கிற ஒரு பெயரும் உண்டு. ஆதலால், அவர் பெயரில் இந்த ஊர் இராமையாவுக்காக நிவந்தமாக வழங்கப்பட்டிருக்குமோ என்று ஆராயவேண்டியுள்ளது.

அதைப்போலவே, இவர்கள் மூவரும் மறைவாக வசித்து இருந்த குகைக்குள் பல பொருட்கள், படிமங்கள் கிடைப்பதற்கும் வாய்ப்புள்ளது. தொல்பொருள் ஆய்வினை இந்தக் குகைக்குள் மேற்கொண்டால் பல புதிய உண்மைகள் வெளிவர வாய்ப்புள்ளது.

மண் பொம்மைகளைச் செய்து வாழும் வேளார் குல மரபினர் இத்தொழிலில் இருந்து நீங்காமல் இருப்பதற்கு ஸ்ரீசொட்டக்கார ஐயனார் வழிபாடு பாதுகாப்பாக இருக்கிறது. ஆனால், பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை

மட்டுமே நடைபெறும் இவ்விழா அவர்களின் வாழ்வாதாரத்திற்குப் போதுமான வசதியை அளித்து விடாது. எனவே, கலை அம்சமும் கைவினைப் புறப்பாடும் உடைய இந்தக் கலைஞர்களை அரசு கவனித்து அவர்களுக்கு நிரந்தரமான வாழ்வியல் உதவி செய்து தரும் வண்ணம் சொக்கம்பட்டி கிராமத்தில் கைவினைப் பொருள் அருங்காட்சியகம் ஒன்றினை நிறுவுதல் நலம் பயக்கும்.

ஊர் கூடி வழிபடும் இந்த அற்புதமான திருவிழாவினைக் காண்பதற்காக, பல வழிகளிலும் இந்த நிகழ்வினைத் தெரிந்துகொண்டு வருகை தரும் அயல் நாட்டினருக்கு உரிய முறையில் இது குறித்த விவரங்கள் பகிரப்படவேண்டும். தமிழகச் சுற்றுலாத்துறை இதற்கான முன் முயற்சிகளை மேற்கொண்டால் சொக்கம்பட்டி கிராமத்தை மதுரை மாவட்டச் சுற்றுலாத்தலமாக அறிவித்து அதற்குரிய வசதிகளையும் செய்து தருவது அதன் கடமையாகும்.

# துணைநூற்பட்டியல்


1. இராசமாணிக்கனார், டாக்டர் மா., பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், சி87, பத்தாம் குறுக்கு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி, மு.ப.2006.
2. இராமசாமிப் புலவர், சு. அ., தமிழ் சிறப்புப் பெயர் களஞ்சியம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மு.ப. 1970.
3. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், கல்வி விளக்க அச்சுக்கூடம், மு.ப.1672.
4. கமால், எஸ். எம்., முகமது செரீபு, ராமநாதபுரம் மாவட்டம் வரலாற்று குறிப்புகள், லெனின் சமூக வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம், பரமக்குடி, 1984.
5. காசிநாதன், நடன., இராசகோபால், சு., வேதாசலம், வெ., திருமலை நாயக்கர் செப்பேடுகள், தமிழகத் தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, மு.ப. 1994.
6. காந்தி, க. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவம், சென்னை, மு.ப.2003.
7. கோவிந்தசாமி ஐயர், மு., திருமலை நாயக்கர் சரித்திரம், இ.மா. கோபாலக்கிருஷ்ணக்கோன் புக் ஷாப், புதுமண்டபம், மதுரை, மு.ப.

1920.

8. சக்திவேல், சு., நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப. 2001.

9. சதாசிவ ஐயர், தி. நற்றிணை மூலமும் உரையும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், மு.ப.1999.

10. சந்திரசேகரன், இரா. முனைவர் (ப.ஆ), நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும் மகாகவி பாரதியார் நூலகம், யு.வி.ஆர், அரங்கம்மாள் இல்லம். எண் 7, ஆர்.கே.நகர், பாரதியார் பல்கலைக்கழகம், சென்னை. மு.ப.2003)

11. சாமி, பி.எல்., தமிழகத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, மு.ப.1978.

12. சின்னான் செட்டியார், ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி வரலாறு (அச்சிடப்படாதது)

13. சீனிவாசன் கே. ஆர், தென்னிந்தியக் கோயில்கள், நேஷனல் புக் டிரஸ்ட், நேரு பவன், 5, பன்னாட்டுப் பகுதி, இரண்டாந்தளம், வசந்த் குன்ச், நியூடெல்லி, மு.ப.2004.

14. சீனிவாசன், பி.ஆர்..,. நாம் வணங்கும் தெய்வங்கள்,. இளங்கோ பதிப்பகம், சென்னை.

15. சுப்பிரமணிய குருக்கள், வி. எஸ்., ஆகமமும் ஆலய வழிபாடும், வானதி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1999.

16. செங்கைப் பொதுவன், முனைவர், (ப.ஆ.) குறிஞ்சிப்பாட்டு, கிரியேட்டிவ் காமன்ஸ் வெளியீடு.

17. தசரதன், டாக்டர். ஆ., (ப.ஆ), ஐயனார் கதைப் பாடல்கள், தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், 3/ 342, குப்பம் சாலை,

கொட்டிவாக்கம், சென்னை, 600 041.

18. தட்சிணாமூர்த்தி அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, மு.ப. 2019.

19. திருக்கண்ணபுரத்தான் திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கன், குறுந்தொகை மூலமும் உரையும், வித்யாரத்னாகர அச்சுக்கூடம், மு.ப.1914.

20. திருநாவுக்கரசர், தேவாரம், நான்காம் திருமுறை, ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப. 2008.

21. துரைசாமிப் பிள்ளை, ஔவை சு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி. மு.ப.2002.

22. தேவநேயன், தமிழர் மதம், நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு, வ.ஆ.மாவட்டம். மு.ப.1972.

23. தொல்காப்பியர், தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப.1999.

24. நாராயண சாமி ஐயர், பின்னத்தூர், அ., (உ.ஆ) நற்றிணை, சைவ வித்தியால நுபாலனயந்திரசாலை, ராக்ஷச ஆண்டு 1915.

25. பரமசிவம், தொ. பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், மு.ப.2016.

26. பிங்கல முனிவர், பிங்கல நிகண்டு, மதுரை மின்னூல் திட்டம், வள்ளுவர் வள்ளலார் வட்டம்.

27. புலியூர்க் கேசிகன், அகநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2010.

28. சண்முகம்பிள்ளை, மு. சுந்தரமூர்த்தி.இ. (ப.ஆ.), திவாகரம்

(இரண்டு தொகுதிகள்), சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1990.

29. ராஜ்கௌதமன், பாட்டுத் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், தமிழினி பதிப்பகம், சென்னை, மு.ப. 2006.

30. ஸ்ரீமத் சுவாமி சித்பாவனந்தர், ஆலய வழிபாடு, ராமகிருஷ்ண தபோவனம், சென்னை, மு.ப.2006.

1. Aufderheide, C. The Scientific Study of Mummies, Cambridge University Press, 2003.

2. Dennis Hudson 'Siva, Menakshi, Vishnu Reflections on a popular Myths in Madurai' South Indian Temples - An Analytical Reconsideration Ed. Burton Stein, Vikas Publishing House Pvt. Ltd. New~Delhi, 1977.

3. Fred W. Clothey, Religion in India: A Historical Introduction, Routledge Taylor & Francis Group, Lon-don and newyork, 2007.

4. Gopinth Roa, T.A. Elements of Hindu Econography, Motilal Banarsidass Publishe, A-44, Naraina In-dustrial Area, Phase-1New Delhi,1985.

5. Mackenzie, Colin, Mackenzie collection, Calcutta : Asiatic Press, 1828.

6. Sathyanatha Aiyar, Histotry of the Nayaks of Madurai, Asian Educational Services, New Delhi, 1991.

# துணை பதிவு

# ஸ்ரீசொட்டக்கார ஐயனார் சுவாமி வரவேற்புக் குலவைப் பாடல்

வருஷம் ஒரு தடவை

நம்ம சொட்டக்கார சாமி

வருவாராம் தேசம் பார்க்க.

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

நாலுகால் மண்டபம்

வாசமுள்ள சாவடி

வந்து நிலவார

மாலை கழுத்தோட போடுங்க பெண்டுகளே

நம்ம சொட்டக்கார ஐயாவுக்கு

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

ஆனையின் மேல் ஏறி வந்த

நம்ம சொட்டக்கார ஐயாவுக்கு

காலு கடுக்குதுன்னு

சால்வ பாதத்தில்

போடுங்க பெண்டுகளே

நம்ம சொட்டக்கார ஐயாவுக்கு

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

ரெட்டக் குதிரை ஏறி

நம்ம சொட்டக்கார ஐயா

வெள்ள மலை தாண்டி வர

சிங்காரத்தப்பார்த்தீர்களா

போடுங்க நம்ம

சொட்டக்கார ஐயனாருக்குப்

பொன்மாலை

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

மஞ்சள் தான் அரிய விட்ட

நம்ம இராமக்கா

மாளிகைக் கல்லுக்கு

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

செப்புக் குடம் எடுத்து

வெள்ள மலைக்கு அவ

ஏறிப் போற சிங்காரத்தைப்

பார்த்தீர்களா பொண்டுகளே

போடுங்க நம்ம ராமக்காவுக்குப்

பொன்னால புகழ்மாலை

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

உருண்ட உருமாக் கட்டி நம்ம சன்னாசி

உத்திராட்சம், பொட்டு வச்சு

(அம்மாளே)

நெறஞ்ச கலையோட நம்ம சன்னாசி

வெள்ளை மலைமுகட்டில்

ஏறுகிற சிங்காரத்தை பார்த்தீர்களா

போடுங்க பொண்டுகளா

நம்ம சன்னாசிக்குப்

பொன்னார் திருக்கைவளை

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

மாலையின்னா மாலை

அப்ப இருந்த அதிகாரி வச்ச சாலை

(அம்மாளே)

மாலைக்குத் தண்ணிவிட

நம்ம ராமண்ணன் வர்ற

அலங்காரத்தைப் பாத்தீகளா

போடுங்க பொண்டுகளா

நம்ம ராமண்ணனுக்குப்

பொன்மாலை திருக்கழுத்தில்

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

ஆனையின்னா ஆனை

நம்ம சொட்டக்கார ஐயனார்

ஏறும் பட்டத்து ஆனை

ஆனை வந்து இறங்கவே

ஆயிரங்கால் மண்டபமாம்

சேனை வந்து இறங்கவே

நம்ம சொட்டக்கார ஐயனார்

செங்கண்மார் பொழியவே

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

உருண்ட உருமாக் கட்டி நம்ம

சொட்டக்கார ஐயனாரு

உத்திராட்சம், பொட்டு வச்சு

ரெட்டக் குதிரையேறிப் போற

அலங்காரத்தைப் பாருங்களே

போடுங்க பொண்டுகளே

நம்ம சொட்டக்கார சாமிக்குப்

பொன்மாலை திருக்கழுத்தில்

மலையாம் மலையழகு

நம்ம சொட்டக்கார ஐயனுக்கு

வெள்ளைமலை சோக்கழகு

(அம்மாளே)

இந்தப் பக்கமிருந்த அவருக்கு

மானம் பொறுக்காதுன்னு

அந்தப் பக்கம் போயி இருக்கிற

அழகைப் பாருங்களேன்

போடுங்க பொண்டுகளே

நம்ம சொட்டக்கார சாமிக்குப்

பொன்மாலை திருக்கழுத்தில்

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

ஓலையின்னா ஓலை

நம்ம சொட்டக்கார ஐயனுக்கு

ஒழுகாப் பனையோலை

(அம்மாளே)

காசாலே கட்டினா கழும்பு பிடிக்குமுன்னு

பணத்தால கட்டினா பாசம் பிடிக்குமுன்னு

(அம்மாளே)

உழக்குப் பணங்கொடுத்து

நம்ம சொட்டக்கார ஐயனாரு

பூந்தாரம் கழுத்துல

போடுங்க கழுத்துல

நம்மசொட்டக்கார ஐயனுக்குப்

பொன்னாடை திருக்கழுத்தில்

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

ஒளியத் தெரியாம நம்ம

சொட்டக்கார ஐயனுக்கு

வகையும் புரியாம

கல்லுமேல நுளைஞ்சு வந்து

புடிச்சுக் குடுத்தாய்ங்க ஐயன்கிட்ட

போடுங்க நம்ம ஐயனாருக்குப்

பொன்மாலை திருக்கழுத்தில்

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)

குற்றாலங் கோலத்தே

நம்ம மந்தை முத்தாளத்தாள்

எழுதின சித்திரத்த

மச்சான் மதிப்பிடத்த

நம்ம மந்தை முத்தாள

வாசலிடங் கொள்ளாம

போடுங்க பொண்டுகளே

நம்ம மந்தை முத்தாளம்மனுக்குப்

பொன்மாலை திருக்கழுத்தில்

(அம்மாளே)

(பெண்களின் குலவை ஒலி)